பக்கங்கள் 24

உதயன்

யாழ். - 20/=
வன்னி - 20/=

சுடர்: 29 கதிர்: 356 வள்ளுவர் ஆண்டு: 2045 கார்த்திகை 01, திங்கள் 17.11.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily

### காலநிலை

நாட்டின் பெரும்பாலான கடலோரப்பகுதிகளில் இடி மற்றும் காற்றுடன் கூடிய மழை காணப்படலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. கிழக்கு கரையோரமாகவும் மழைபெய்யலாம் என வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது. வடமேற்கு கரையோரமாக மழைக்கான சாத்தியம் நிலவுவதாகவும் காற்றின் வேகம் மணிக்கு 20 - 30 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசலாம் எனவும் தகவல் வெளியிடப்பட்டுள்ளது. அத்துடன் மன்னாரிலிருந்து புத்தளம் வழியாக நீர்கொழும்பு வரையான கடலோரங்களில் மழை பெய்வதற்கான சாத்தியங்களும் காணப்படுவதாக வானிலை அவதானிப்பு நிலையம் தெரிவித்துள்ளது.

# மஹிந்தவை அகற்ற கூட்டமைப்பினர் சதி



## வெளிநாட்டுச் சக்திகளும் பின்னணியில் குற்றஞ்சாட்டுகின்றார் விமல் வீரவன்ஸ

கொழும்பு, நவம்பர் 17
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை ஆட்சிபீடத்திலிருந்து வெளியேற்றுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட சில தீய அரசியல் சக்திகள் முயற்சிக்கின்றன என்று குற்றஞ்சாட்டியுள்ள அமைச்சர் விமல் வீரவன்ஸ, அதற்கு வெளிநாட்டுச் சக்திகள் சிலவும் உறுதுணையாக உள்ளன என்றும் தெரிவித்துள்ளார்.

தொடர் தோல்விகளால், இம்முறை எப்படியாவது ஆட்சியை பிடித்துவிட வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி நினைக்கின்றது. அதற்காக எதையும் செய்வதற்கு அவர்கள் தயாராக இருக்கின்றனர் - என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

பத்தரமுல்லையிலுள்ள தேசிய சுதந்திர முன்னணியின் தலைமையகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"பொதுவேட்பாளரைக் களமிறக்குவது குறித்து எதிர்க் கட்சிகளிடையே குழப்பம் ஏற்பட்டுள்ளது. முடிவெடுக்க முடியாமல் அவை திண்டாடுகின்றன.

அதேவேளை, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவையும் அதிகாரக் கதிரையில் இருந்து அகற்றுவதற்கு சில தீய சக்திகள் முயற்சிக்கின்றன.

தொடர் தோல்விகளால், இம்முறை எப்படியாவது ஆட்சியை பிடித்துவிட வேண்டும் என ஐ.தே.க. நினைக்கின்

❖22 ஆம் பக்கம் பார்க்க

## கிணற்றில் வீழ்ந்து குழந்தை உயிரிழப்பு

யாழ்ப்பாணம், நவ.17
கொடிகாமம் பாலாவிப் பகுதியில் இராசசேகரம் சோபினா எனும் ஒன்றரை வயதுக் குழந்தையே கிணற்றில் வீழ்ந்து உயிரிழந்துள்ளது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை 8 மணியளவில் குழந்தையின் தயார் கிணற்றடியில் பாத்திரம் கழுவி விட்டு அதனை வைப்பதற்காக வீட்டுக்குள் சென்றுவிட்டு திரும்பி வந்து பார்த்தபோது அங்கிருந்த குழந்தையைக்காணவில்லை. எங்குதேடியும்குழந் தையைக் காணாததால் சிறிதுநேரத்தின் பின்னர் கிணற்றுக்குள் பார்த்தபோது அதற்குள் குழந்தை உயிரிழந்த நிலையில் காணப்பட்டுள் ளது. கிணற்றின் கட்டு உயரமாக இருந்தும் குழந்தை உள்ளே விழுந்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற)

## போராளியின் இறுதிச் சடங்கு நேற்று நடந்தது

யாழ்ப்பாணம், நவ. 17
மன்னாரில் சுட்டுக்கொல்லப்பட்ட முன்னாள் போராளியின் இறுதிச் சடங்குகள் நேற்று இடம்பெற்றன. சடலம் அடக்கம் செய்யப்பட்டது.

கொலையைத் தொடர்ந்து அந்தப் பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த பொலிஸாரும் இறுதிச் சடங்குகளின் பின்னர் அங்கிருந்து அகன்றனர்.

இந்தக் கொலை தொடர்பில் கைது செய்யப்பட்ட நான்கு சந்தேகநபர்களும் பயங்கரவாதப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு வவுனியாவுக்குக் கொண்டு செல்லப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

கணேசபுரம் வெள்ளாங் குளத்

❖22 ஆம் பக்கம் பார்க்க

## தீவகத்திலும் மரம் நடலாம்

யாழ்ப்பாணம், நவ.17
யாழ். மாவட்டத்தில் வரண்ட பிரதேசங்களில் மரக்கன்றுகளை உற்பத்தி செய்யபவர்களுக்கு ஏதுவான நீர்ப்பாசன பொறிமுறையை விவசாயத் திணைக்களம் அறிமுகப்படுத் தியுள்ளது.

நீர்ப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் நோக்கில் நீரை மீதப்படுத்தி பயிர்களின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கு ஏற்ற பொசிவு நீர்ப்பாசன முறைமையே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

விரிவான செய்தி 3 ஆம் பக்கத்தில்

## இராணுவத்தின் ஆதரவுடன் நேற்று நில அளவீட்டுப் பணி

### சபாபதிப்பிள்ளை முகாமில் எதிர்ப்பையும் மீறி நடந்தது

யாழ்ப்பாணம், நவ. 17
வலி. வடக்கில் இருந்து இடம் பெயர்ந்து சுன்னாகம் நலன்புரி முகாமில் தங்கியுள்ள மக்களுக்கு அந்த இடத்திலேயே காணிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் இராணுவத்தினரின் உதவியுடன் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. தற்போது முகாம் அமைந்துள்ள காணிகளை அளவீடு செய்வதற்கு மக்கள் காட்டிய எதிர்ப்பையும் மீறி, தனியார் நில அளவையாளர் மூலம் சபாபதிப்பிள்ளை மற்றும் கண்ணகி நலன்புரி நிலையக் காணிகள் நேற்று அளவீடு செய்யப்பட்டன. இராணுவத்தினரின் பாதுகாப்பு மற்றும் உதவியுடன் இந்தப் பணி மேற்கொள்ளப்பட்டது என்று மக்கள் தெரிவித்தனர்.

வலி. வடக்கிலிருந்து இடம் பெயர்ந்து நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள மக்களை வலி. கிழக்கு வளலாய் பகுதியில் குடியேற்றுவதற்கு

❖22 ஆம் பக்கம் பார்க்க



## பொதுவேட்பாளராகப் போட்டியிடத் தயார்

அர்ஜுனா ரணதுங்க

பக்கம் 9

## கள்ளுத் தவறணையை நொறுக்கினர் பெண்கள்

### மன்னாரில் நேற்றுச் சம்பவம்

யாழ்ப்பாணம், நவ. 17
மன்னாரில் அந்தோனியார் புரத்திலுள்ள கள்ளுத் தவறணைக்குள் நேற்றுப் புகுந்த 57 பெண்கள் அதனை அடித்து உடைத்து நொறுக்கியுள்ளனர். அவர்கள் அனைவரையும் பொலிஸார் கைது செய்தனர். நீதிவானிடம் முன்னிலைப்படுத்தப்பட்ட அவர்கள் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இந்தக் கள்ளுத் தவறணையை அகற்றுமாறு நீண்ட காலமாக பெண்கள் வலியுறுத்தி வந்தனர். அந்தக் கோரிக்கைக்குச் செவி சாய்க்கப்படாமல் போகவே கிளர்ந்தெழுந்த பெண்கள், தாய்மார் அதனை அடித்து நொறுக்கிவிட்டனர்.

நொறுக்கப்பட்ட கள்ளுத் தவறணை அங்கு இருப்பதால் தமது குடும்பங்களில் நாளாந்தம் சண்டை ஏற்படுவதாகப் பெண்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். குடிப்பழக்கத்தால் இந்தப் பகுதியில் மாணவர்களிடம் கல்விச் சீர்கேடு உட்பட பல சிக்கல்கள் காணப்படுவதாக தொண்டு நிறுவன அதிகாரிகள் கூறுகின்றனர்.

❖22 ஆம் பக்கம் பார்க்க



## தேர்தலில் சிறுபான்மை மக்களின் பங்கு

பக்கம் 12

## சர்வதேசத்தின் கவனத்தை திருப்பவே அரசு முயற்சி

### காணி அளவீடு குறித்து குணபாலசிங்கம் கருத்து

யாழ்ப்பாணம், நவ. 17
சர்வதேசத்தின் கவனத்தை சபாபதிப்பிள்ளை நலன்புரி நிலையம் ஈர்க்கின்றது. போர் முடிந்து 5 ஆண்டுகளாகி விட்டபோதும் இலங்கையில் மக்கள் இன்னமும் மீளக் குடியமர்த்தப்படவில்லை என்ற உண்மை தெரிய வருகின்றது. இதனை மூடி மறைப்பதற்காகவே, நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களை அந்தக் காணிகளிலேயே நிரந்தரமாகக் குடியமர்த்திவிட அரசும் அதற்குத் துணையாக இரா

❖22 ஆம் பக்கம் பார்க்க

## 82 கி. கேரள கஞ்சாவுடன் சனியன்று இருவர் கைது

### சொகுசு காரில் கடத்திய சமயம் மாட்டினர்

யாழ்ப்பாணம், நவ. 17
82 கிலோ கேரள கஞ்சாவை யாழ்ப்பாணத்துக்கு கடந்தி வந்த காரை மடக்கி அதிலிருந்த இருவரைத் தாம் கைது செய்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். தென்னிந்தியாவில் இருந்து கடல் மார்க்கமாக மாதகலுக்குக் கடத்தப்பட்ட கஞ்சா சொகுசு காரில் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துச் செல்லப்பட்ட போது மடக்கிப்பிடிக்கப்பட்டுள்ளது.

கஞ்சா கடத்திய குற்றச்சாட்டில் கைதான இருவரும் கல்வியங்காடு, கச்சேரியடி பகுதிகளைச் சேர்ந்தவர்கள். அவர்கள் 19 மற்றும் 30 வயதுடையவர்கள். கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்டது யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவரது சொகுசு கார் என்று பொலிஸார் தெரி

❖22 ஆம் பக்கம் பார்க்க

## தேர்தல் நெருங்குவதால் பொய் கூறுகின்றார் மஹிந்த

### இன்று உண்மையைத் தெளிவுபடுத்துவேன் என்கிறார் சொல்ஹெய்ம்

கொழும்பு, நவ.17
இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தன் மீதும் நோர்வே அரசு மீதும் தேவையற்ற குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றார் என்று தெரிவித்துள்ள நோர்வேயின் இலங்கைக்கான முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், அந்த நாட்டில் தேர்தல் நெருங்குவதால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பொய் கூறுகின்றார் என்றும் தெரிவித்துள்ளார்.

இந்தக் கருத்துகளை அவர் சமூகவலைத்தளமான டுவிற்றரில், தனது பக்கத்தில் பதிவேற்றியுள்ளார்.

இலங்கை ஜனாதிபதி என் மீது சுமத்தியுள்ள குற்றச்சாட்டுக்கள் ஏற்க முடியாதவை. அவர் பொய் சொல்கின்றார். உண்மை நிலவரங்களை, மறுப்பு அறிக்கையை நாளை (இன்று) வெளியிடுவேன் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் சமாதான பேச்சு நடந்த காலத்தில் நோர்வேயின் சமாதானத் தூதுவர்

❖22 ஆம் பக்கம் பார்க்க

"பூமியில் மனிதனுடைய சிறந்த நண்பனாக விளங்குவது மரம். இதை நாம் உரிய மதிப்புடனும் சிக்கனமாகவும் பயன்படுத்தும்போது பூமியில் உள்ள மிகச் சிறந்த வளங்களில் ஒன்றாக நாம் அவற்றைக் கொண்டிருப்போம்" - பிராங்க் லோயிட் ரைற் (அமெரிக்க கட்டிட கலைஞர், எழுத்தாளர்)

# தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னரே பொதுவேட்பாளர் அறிவிக்கப்படுவார்

## ரணில் விக்கிரமசிங்க கூறுகின்றார்

கொழும்பு, நவ.17

ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பு உத்தியோகபூர்வமாக வெளியான பின்னரே, எதிரணியின் சார்பில் களமிறங்கவுள்ள பொதுவேட்பாளர் குறித்த விவரம் அறிவிக்கப்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

களுத்துறையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் வைத்தே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது:

"ஜனாதிபதித் தேர்தல் ஒன்று அடுத்த வருடம் நடைபெறும் என்று ஜனாதிபதியே கூறி வருகிறார். இது இன்னும் உறுதியாகத் தெரியவில்லை. தற்போது இந்தத் தேர்தலுக்கு ஐக்கிய தேசியக் கட்சி தயாராகி வருகின்ற போது, தேர்தல் அறிவிப்பு வெளியான தன் பின்னர் எங்களின் செயற்பாடுகள் உத்தியோக பூர்வமாக ஆரம்பிக்கப் படும்.



தேர்தலுக்கான எதிர்கட்சியின் வளங்கள் மிகவும் குறைவாக இருக்கிறது. எனவே, தேர்தல் அறிவிப்பின் பின்னரே பொது வேட்பாளர் குறித்தும் அறிவிக்கப்படும்."- என்று தெரிவித்துள்ளார். (ற)

# ஜாதிக ஹெல உறுமய அரசிலிருந்து விலகும்

## அத்துரலியே ரத்ன தேரர் கூறுகின்றார்

கொழும்பு, நவ.17

ஜாதிக ஹெல உறுமய அரசில் இருந்து விலக வேண்டும் என்று அந்த கட்சியின் பிரதான செயற்பட்டாளர்களில் 90 வீதமானோர் கூறியுள்ளனர் என்று தூய்மையான நாளை அமைப்பின் ஏற்பாட்டாளரான நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

ஜாதிக ஹெல உறுமய கட்சி நேற்றுமுன்தினம் அந்த கட்சியின் பிரதான செயற்பாட்டாளர்களை கொழும்புக்கு அழைத்து அரசில் இருந்து விலகுவதா இல்லையா என்று வாக்கெடுப்பை நடத்தியுள்ளது. அதில் 90 வீதமானவர்கள் அரசாங்கத்தில் இருந்து விலக வேண்டும் என தெரிவித்துள்ளனர். அதனடிப்படையில் ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் ஜாதிக ஹெல உறுமய கட்டாயமாக அரசில் இருந்து வெளியேறும் என்று ரத்ன தேரர் கூறியுள்ளார்.

தூய்மையான நாளை அமைப்பின் நிலைப்பாடும் ஜாதிக ஹெல உறுமயவின் நிலைப்பாடும் இணையும் நாள் வெகுதூரத்தில் இல்லை. அரசு மக்களுக்காக செயற்பாடுகளை முன்னெடுக்கவில்லை என்றால் அரசைப் பாதுகாக்க வேண்டிய எவ்விததேவையும்எமக்கில்லை எனவும் ரத்ன தேரர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ற)

# அரச உத்தியோகத்தருக்கு இடைக்கால கொடுப்பனவு

## நவம்பர் மாதச் சம்பளத்துடன் வழங்கப்படவுள்ளது

கொழும்பு, நவ.17

2015ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்ட முன்மொழிவுகளின் அடிப்படையில் அரச உத்தியோகத்தர்கள் அதிகரிக்கப்பட்ட இடைக்காலக் கொடுப்பனவான 3 ஆயிரம் ரூபாவை இம்மாத சம்பளத்துடன் பெறவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கான அரச நிர்வாகச் சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அரச நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சுச் செயலாளர் பீ.பி. அபேகோனால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கை அமைச்சுக்களின் செயலாளர்கள் மாகாணங்க ளின் பிரதம செயலாளர்கள் திணைக்களங்களின் தலைவர் கள் அரச கூட்டுத் தாபனங்கள் மற்றும் நியதி சட்ட சபைகளின் தலைவர்கள் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.



அரசஉத்தியோகத்தர்களின் சம்பளக் கொடுப்பனவுகள் மற்றும் சம்பள ஏற்றங்கள் புதிய சம்பளக் கட்டமைப்பிற்குள் சேர்க்கப்படும் வரை அனைத்து அரச உத்தியோகத்தர்களுக்கும் 3 ஆயிரம் ரூபாவும், ஓய்வூதியம் பெறுவோருக்கு 2 ஆயிரத்து 500 ரூபாவும் நவம்பர் மாதம் முதல் வழங்கப்படும் என செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

புதிய சம்பளக் கட்டமைப்புக்கு அமைவாக ஓய்வூதியங்களை மறுசீரமைத்து அதனை நடைமுறைப்படுத்தும் வரை ஓய்வூதியம் பெறுபவர்கள் அனைவருக்கும் இடைக்காலக் கொடுப்பனவு ரூபா 2 ஆயிரத்து 500 வழங்கப்படுவது அவசியமாகும் எனவும் செயலாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், அசரகூட்டுத்தாபனங்கள் நியதி சட்ட சபைகளில் தற்காலிக அடிப்படையில் அல்லது நாள் சம்பள அடிப்படையில் பணி புரிகின்றவர்களுக்கும் இக் கொடுப்பன வுகள் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)





யாழ்.மாவட்டத்தில் முன்பள்ளிகள் சிறப்பான சேவைகளை வழங்கி வருவதுடன் சிறு பிராயத்திலேயே மாணவர்களுக்கான கலை கலாசார விடயங்களையும் கற்றுக் கொடுக்கின்றன என்று யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபையின் செயலாளர் திருமதி. செ.வேதவல்லி தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் கார்மெல் முன்பள்ளியின் பெற்றோர் தின விழா நேற்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்திய அவர், குழந்தைகள் மத்தியில் கலைகளைக் கற்பிப்பது, அவர்களை நெறிப்படுத்துவது மிகக்கடினமான செயல். அவ்வாறு இருக்கும்போது முன்பள்ளிகள் மாணவர்களின் அடித்தளக் கல்விக்கு அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வருகின்றன - என்றார். இந்தநிகழ்வில்தமிழ், சிங்களம், ஆங்கிலம் உட்பட மூன்று மொழிகளிலும் மாணவர்களின் கலை நிகழ்வுகள் நடைபெற்றன. (த-14.ரி)

# புத்தளம்- மன்னார் வீதி மூடப்பட்டது

கொழும்பு, நவ.17

ராஜாங்கனை நீர்த்தேக்கத்தின் அவசர வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளதை அடுத்து புத்தளம்- மன்னார் வீதி தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. எழுவங்குளம் பாலமும் வெள்ள நீரில் மூழ்கியுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற)

# 15 நாள்களில் 48 பேருக்கு டெங்கு



யாழ்ப்பாணம், நவ. 17

யாழ். மாவட்டத்தில் இந்த மாதத்தில் முதல் 15 நாள்களில் 48 பேருக்கு டெங்குக் காய்ச்சல் தொற்றியுள்ளது என்று சுகாதாரத் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மாவட்டத்தில் சகல இடங்களிலும் டெங்கு பரவி இருப்பதாகவும் அதிகாரிகள் கூறுகின்ற னர்.

"எல்லா இடங்களில் இருந் தும் டெங்குத்தொற்றுக்கு உள்ளானவர்கள் சிகிச்சைக் காக வருகின்றனர். பிரதேச, ஆதார வைத்தியசாலைகளிலும்யாழ். போதனா வைத்திய சாலையிலும் அவர்கள் சிகிச்சைக்காகச் சேர்க்கப்படுகின்றனர்" என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

தொடர்ந்து மழை பெய்து வரும் நிலையில் கடந்த மாதத்தைப் போன்றே இந்த மாதமும் பாதிப்புக்கு உள்ளவோரின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்றுஅதிகாரிகள்எதிர்பார்க்கின்றனர். பொதுமக்களைப் போதிய பாதுகாப்பு முன்னேற் பாடுகளை மேற்கொள்ளு மாறு அவர்கள் அறிவுறுத்துகின்றனர்.

வவுனியாவில் 4 பேரும், முல்லைத்தீவில் 3 பேரும் இந்த மாதம் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. யாழ். மாவட்டத்தில் இந்த வருடத்தில் மட்டும் ஆயிரத்து 145 பேர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் என்று திணைக்களப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. (உ-4)

# சலுகை வழங்கினால் மஹிந்தவுக்கு ஆதரவு

## தனிவீடுகள் தருமாறு கோரி ஹற்றனில் மக்கள் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, நவ.17

ஹற்றன் செம்புகவத்தை தோட்ட மக்கள் தனி வீடு கோரி கறுப்பு கொடிகளையும், பதாகைகளையும் ஏந்தி கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன், தமக்கு சலுகைகளை வழங்கினால் மாத்திரமே ஜனா திபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங் குவோம் என்றும் தெரிவித் துள்ளனர்.

ஹற்றன் கொழும்பு பிரதான வீதியிலுள்ள செம்புகவத்தை சந்தியில் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.



அதில் கலந்துகொண்ட மக்கள், "100 வருடகாலமாக பழமை வாய்ந்த செம்புகவத்தை 7ஆம் இலக்க குடியிருப்பில் 20 காம்பிராக்கள் கொண்ட லயம் இடிந்து விழும் நிலையில் உள்ளது. பல தடவைகள் சம்மந்தப்பட்டவர்களிடம் தெரிவித்தும் இதுவரையும் எந்தவிதமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. அத்தோடு தோட்ட நிர்வாகமும் அசமந்தப் போக்கை காட்டுகின்றது.

அரசு எங்களுக்கு தனி வீடுகள் அமைத்து தர வேண்டும். இந்த விடயம் தொடர்பாக மலையக அரசியல்வாதிகள் கவனம் செலுத்த வேண்டும். வாக்குகளை பெறுவதற்கு மட்டும் வரும் அரசியல் தலைவர்கள் வெற்றி பெற்ற பின் எங்களை மறந்து விடுகிறார்கள்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் 2015ஆம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் மலையக மக்களுக்கு எந்தவிதமான சலுகைகளும் கிடைக்கவில்லை. அதனால் ஜனாதிபதி மலையக மக்களுக்கு சலுகைகளை வழங்கினால் மாத்திரம் ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்கப்படும்"- என்று தெரிவித்தனர். (ற)

## விபத்துக்கள்



### தீ விபத்தில் கடை நாசம்

கொழும்பு கெத்தாராம பன்சல வீதியில் மூடப்பட்டிருந்த கடையொன்று திடீரென தீபற்றி எரிந்துள்ளது. தீக்கான காரணம்இதுவரை தெரியவில்லை.

தீயை தீயணைப்புப் படையினர் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். தீ விபத்தால் ஏற்பட்ட சேத விவரங்கள் தெரியவரவில்லை. (ற)



### கார் விபத்தில் மூவர் சாவு

குருநாகல் தித்தவெல்ல பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் மூவர் உயிரிழந்துள்ளனர். டிப்பர் வண்டியொன்று கார் ஒன்றுடன்மோதி இன்று காலை விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

காரில் பயணித்த மூவரே விபத்தில் உயிரிழந்துள்ளனர் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர். (ற)

பக்கங்கள்: இருபத்துநான்கு

# உதயன்

விலை ரூபா 20/-

கிளாசிக்

சுடர் : 29 வள்ளுவர் ஆண்டு: 2045 கார்த்திகை01 திங்கள் (17.11.2014) UTHAYAN - A lively National TamilDaily கதிர் 356

# நிறைவேற்று ஜனாதிபதி முறையில் எவ்வித திருத்தமுமின்றியே தேர்தல்

## அரசு திட்டவட்டம்; வெளியேறுமா ஹெல உறுமய?

கொழும்பு, நவம்பர் 17

**ஜனாதிபதித் தேர்தல் அறி விப்புக்கு முன்னர் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையில் திருத்தம் கொண்டுவருமாறு அரசிலுள்ள இடதுசாரிக் கட்சி களும், ஜாதிக ஹெல உறுமய வும் அரசை தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்ற நிலையில், நிறைவேற்று ஜனாதிபதி முறை மையில் எவ்வித மாற்றமும் செய் யப்படாமலேயே ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் என்று அரசு நேற்றுத் திட்டவட்டமாக அறிவித்துள்ளது.**

இது குறித்தான உத்தியோ கபூர்வ அறிவிப்பு எதிர்வரும் 19 ஆம் திகதிக்குப் பின்னர் எந் நேரத்திலும் விடுக்கப்பட லாம் என்று ஐக்கிய மக்கள் சுதந்தி ரக் கூட்டணி அரசின் பொதுச் செயலாளர் சுசில் பிரேம் ஜயந்த தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவிய லாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

எனவே, நிறைவேற்று ஜனா திபதி முறைமையில் திருத் தம் கொண்டு வரப்படாவிட் டால் - அரசு ஜனாதிபதித் தேர்த லுக்குச் செல்லுமானால் அரசி லிருந்து வெளியேறுவார்கள் என சூளுரைத்து ஹெல உறு மயவினர், தமது உறுதிமொ ழியை நிறைவேற்றுவார்களா? என்று அரசி யல் விமர்சகர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

அதேவேளை, நேற்று நடை பெற்ற செய்தியாளர் மாநாட் டின்போது சுசில் பிரேமஜயந்த கூறியவை வருமாறு:-

தற்போதைய சூழ்நிலை யில் நிறை வேற்று ஜனாதிபதி முறை மையை ஒழிக்க முடி யாது. நாட்டின் நலனைக் கருத்திற் கொண்டே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக நாட்டில் அரசி

(22 ஆம் பக்கம் பார்க்க)

## பாப்பரசரின் வருகையையிட்டு கொழும்பில் பாதுகாப்பு தீவிரம்

### ரூபா 9 மில். செலவில் ஏற்பாடுகள்

கொழும்பு, நவ.17

புனித பாப்பரசரின் இலங் கைப் பயணத்தை அடுத்து கொழும்பு நகரின் பாதுகாப்பை பலப்படுத்துவதற்காக 9 மில்லி யன் ரூபா செலவிடப்பட உள்ளது.

தெட்டகொடை, ஒருகொட வத்தை வெல்கடைவத்தை ஆகிய பிரதேசங்கள் உள்ள டங்கும் வகையில் பாதுகாப்பு கமராக்கள் பொருத்தப்பட உள் ளன.

அதனைத் தவிர காலிமுகத்

(22 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியை சந்தித்த பின் சோபித தேரர் மௌனம்

கொழும்பு, நவ.17

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்க வேண்டும் என தீவிர பரப்பு ரையை முன்னெடுத்து வந்த நீதியான சமூகத்துக்கான இயக் கத்தின் தலைவர் மாதுள வாவே சோபித தேரர், ஜனா திபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்த பின்னர், எதிர்க்கட்சி களின் நடவடிக்கைகள் எதிலும் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளா ததுடன், கடும் மௌனத்தை கடைப்பிடிப்பது அரசியல் வட் டாரங்களில் பல சந்தேகங் களை எழுப்பியுள்ளன.

ஜனநாயகக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸின் ஏற்பாட்டின் கீழ் மாதுளவாவே சோபித தேரர் ஜனாதிபதியை சந்தித் தார். டிரான் அலஸின் தந்தை யின் வீட்டில் இந்த சந்திப்பு இடம்பெற்றது. இந்த சந்திப் பின்போது பாதுகாப்பு அமைச் சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் அமைச்சர் நிமால் சிறிபாலடி சில்வா ஆகியோர் பிரசன்னமாகியி ருந்தனர்.

இந்த சந்திப்பின்போது சோபித தேரர் வலியுறுத்தி வரும் அரசமைப்பு மாற்றம் தொடர்பான விடயங்கள் ஏற் கனவே நாடாளுமன்ற தெரி வுக்குழுவால் ஆராயப்பட்டு வருகின்றது என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

அதன் காரணமாக அதனை மையப்படுத்தி ஜனாதிபதி தேர் தலுக்கு முன்னதாக பரப்புரை கள் எதனையும் முன்னெடுக்க வேண்டிய அவசியமில்லை என ஜனாதிபதி குறிப்பிட்டார்.

நாடாளுமன்ற தெரிவுக் குழு எவ்வாறு செயற்படுகின் றது என்பது குறித்து தேரருக்கு தெளிவுபடுத்துமாறு அமைச்

(22 ஆம் பக்கம் பார்க்க)

## நேபாளம் செல்கின்றார் மஹிந்த

கொழும்பு, நவ.17

நேபாள தலைநகர் காத் மண்டுவில் நடைபெறவுள்ள 17ஆவது சார்க் உச்சி மாநாட் டில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 25 ஆம் திகதி புறப் பட்டுச் செல்ல உள்ளார்.

சார்க் அமைப்பில் அங்கம் வகிக்கும் இந்தியா, ஆப்கன்,

(22 ஆம் பக்கம் பார்க்க)

## பொய்ப் பரப்புரை மேற்கொள்ள அலரி மாளிகையில் தனிப்பிரிவு

### குற்றஞ்சாட்டுகின்றார் லக்ஷ்மன் கிரியெல்ல

கொழும்பு, நவ.17

ஐக்கிய தேசியக் கட்சி தொடர் பாக பொய்ப் பரப்புரையை அரசு முடுக்கிவிட்டுள்ளது. அதற் காக அலரி மாளிகையில் தனிப் பிரிவை அரசு உருவாக்கி யுள் ளது என்று குற்றஞ்சாட்டியுள் ளார் ஐக்கிய தேசியக் கட்சி யின் கண்டி, மாவட்ட நாடா ளுமன்ற உறுப்பினர் லக்ஷ் மன் கிரியெல்ல.

அரசை வீட்டுக்கு அனுப் பும் காலம் வந்துள்ளது. கம்ப ளைத் தொகுதியை எதிர்வரும் தேர்தலில் ஐக்கியத் தேசிய கட்சி வென்றெடுக்கும். இந்தத் தொகுதியில் கட்சியின் செயற் பாடுகள் தொடர்பில் கட்சித் தலைமை விரைவில் முடிவு களை மேற்கொள்ளும் என வும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் கம்பளை தொகுதி ஆதரவாளர் களின் கூட்டம் நேற்று கம்ப ளையில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற் றும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்தும் உரை யாற்றிய அவர் தெரிவித்த தாவது,

(22 ஆம் பக்கம் பார்க்க)

## மஹிந்தவுக்கான தேர்தல் பரப்புரையில் வாசுதேவ

கொழும்பு, நவ.17

எதிர்வரும் ஜனாதிபதித் தேர் தலுக்கான, வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தேர் தல் பரப்புரை நடவடிக்கைகள் தேசிய மொழிகள் மற்றும் இன நல்லிணக்க அமைச் சர் வாசுதேவ நாணயக்காரவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்று அரச தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமைச்சர் வாசுதேவ நாணக்காரவின் ஜனநாயக இடதுசாரி முன்னணியின் முக் கியஸ்தர்கள் கடந்த வாரம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வைச் சந்தித்துப் பேச்சு நடத்தி யிருந்தனர். அதன்போதே ஜனாதிபதி இந்தத் தீர்மானத் தைத் தெரிவித்தார் எனவும் கூறப்படுகின்றது. (ற)

## தண்டப் பணம் செலுத்த புதிய முறை

கொழும்பு, நவ.17

நெடுஞ்சாலைகளில் பய ணிக்கும் போது வீதி ஒழுங்கை மீறும் குற்றங்களுக்கான தண் டப்பணத்தை சாரதிகள், இந்த ஆண்டு இறுதிக்கு முன்னர் கைத்தொலைபேசி மூலமாக செலுத்த முடியும் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இந்த புது முறைமை பொலி ஸாரால் அறிமுகப்படுத் தப் படும் என்றும் கைத்தொலை பேசிகளின் எந்த வலையமைப் பினூடாகவும் தண்டப் பணங் களை செலுத்த முடியும் என் றும் அவர் மேலும் தெரிவித் தார். (ற)

## ஊழல் ஆட்சியாளரை விரட்ட முன்னிற்போம்

### சரத் பொன்சேகா சூளுரை

கொழும்பு, நவ.17

நாட்டின் தற்போதைய ஊழல் ஆட்சியாளர்களை விரட் டியடிப்பதற்கு தனது கட்சியி னர் முன்னிற்பார்கள் என்று சூளுரைத்துள்ளார் சரத் பொன்சேகா.

ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா, நேற்றுமுன்தினம் தனது கட்சி முக்கியஸ்தர்களுடன் கண் டிக்குச் சென்றிருந்தார். அங்கு அஸ்கிரிய மற்றும் மல்வத்து மகாநாயக்க தேரர்களைச் சந்தித்து ஆசி பெற்றுக் கொண்ட பின்னர், அவர் ஊடகவியலா ளர்களைச் சந்தித்தார்.

அதில் கருத்துத் தெரிவிக் கும்போதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் தொடர்ந்து தெரிவித்துள்

(22 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு ரயில் சேவையில் ஒரு மணி நேரத் தாமதம்

### எரிபொருள் ரயில் தடம்புரண்டதால் நேற்று சம்பவம்

கொழும்பு.நவ.17

எரிபொருள் ஏற்றிச்சென்ற ரயில் குருநாகல் மாவட்டம் கனேவத்தை பகுதியில் தடம் புரண்டதில் வடக்குக்கான ரயில் சேவை நேற்று காலை சுமார் ஒரு மணி நேரம் நிறுத் தப்பட்டது. உடனடியாக மீட்புப் பணியில் இறங்கிய அதிகாரி கள் ரயிலை மீண்டும் தடத்துக் குக் கொண்டு வந்து ரயில் பாதைகளைச் சீர்ப்படுத்திய தால் சேவைகள் மீண்டும் வழ மைக்குத் திரும்பின. எனினும் யாழ்ப்பாணத்துக்கான நகர்

(22 ஆம் பக்கம் பார்க்க)

## வறண்ட நிலத்திலும் மரம் வளர்க்க சிறந்த பாசன முறைமை அறிமுகம்

### தீவகத்தில் மரம் நட இனிக் கவலைப்படத் தேவையில்லை

யாழ்ப்பாணம், நவ.17

யாழ். மாவட்டத்தில் வரண்ட பிரதேசங்களில் மரக்கன்று களை உற்பத்தி செய்பவர்க ளுக்கு ஏதுவான நீர்ப்பாசன பொறிமுறையை விவசாயத் திணைக்களம் அறிமுகப்படுத் தியுள்ளது.

நீர்ப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் நோக்கில் நீரை மீதப்படுத்தி பயிர்களின் உற்பத்தித்திறனை அதிகரிப் பதற்கு ஏற்ற பொசிவு நீர்ப் பாசன முறைமையே அறிமு கப் படுத்தப்பட்டுள்ளதாக அதி காரிகள் தெரிவித்தனர்.

இந்த பொசிவு நீர்ப்பாசன முறை பெரும் எடுப்பில் வெற்றி பெற்றுள்ளது என்றும் அவர்கள் தெரிவித்தனர். இந்த முறையின் கீழ் வரண்ட பிர தேசங்கள் மரக்கன்றுகளை நடுவதற்கு பொதுமக்கள்

(22 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.பல்கலைக்கழக 30 ஆவது
பொதுப்பட்டமளிப்பு விழாவில்
(11.11.2014) அன்று கலைமாணி
(B.A Hons Economics Special)
பட்டத்தினைப் பெற்ற
Congratulation செல்வி நிறோஜா
விக்னேஸ்வரன்
அவர்களை மேன்மேலும் பல
பட்டங்கள் பெற்று சீரும்
சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ்கவென
பாராட்டி வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்: அப்பா, அம்மா, அம்மம்மா, அம்பப்பா,
பெரியப்பா, பெரியம்மா, மாமமார், அத்தை, மச்சான்,
சித்தப்பாமார், சித்திமார், தம்பிமார், தங்கைமார்.
சித்தன்குறிச்சி, பூநகரி. (54255)(4.3.6)


## பரிசளிப்பு விழா

தென்மராட்சி, நவ.17

கைதடி சேதுகாவலர் வித்தியாலய பரிசில்நாள் நிகழ்வு இன்று திங்கட்கிழமை பி.ப 1.30 மணிக்கு வித்தியாலயத்துக்கு அருகில் உள்ள மாவடிக் கந்தன் மண்டபத்தில் இடம்பெறும்.

வித்தியாலய அதிபர் திருமதி இ.திருநாகசிவம் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி முகாமைத்துவம்) திருமதி சி.சிவநாதன் கலந்து கொள்வார். (வ-9)

## பொதுக் கூட்டம்

வரணி, நவ.17

குடமியன் பிரதேச விவசாய சம்மேளனத்தின் பொதுக் கூட்டம் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு குடமியன் பொதுநோக்கு மண்டபத்தில் இடம்பெறும்.

சாவகச்சேரி கமநல சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் எஸ்.சத்தியேந்திரா தலைமையில் நடைபெறும் கூட்டத்தில் பிரதேச விவசாயிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு குடமியன் கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாகம் கேட்டுள்ளது.

(வ-122)

## முதியோர் சிறுவர் கௌரவிப்பு

முல்லைத்தீவு, நவ.17

ஒட்டுசுட்டான் பிரதேச முதியோர் மற்றும் சிறுவர் கௌரவிப்பு நிகழ்வு இன்று திங்கட்கிழமை ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் இடம்பெறவுள்ளதாக பிரதி பிரதேச செயலர் ஆர். குருபரன் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் புஸ்பராணி தொண்டு நிறுவனத்தினால் சுமார் 65ஆயிரம் பெறுமதியான பொதிகளும் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

(வ-500)

## குளிர்த்தி

யாழ்ப்பாணம், நவ.17

வேம்பிராய் கண்ணகி அம்மன் ஆலயத்தின் பயிர் குளிர்த்தி அம்மன் கும்ப ஊர்வலம் இன்று திங்கட்கிழமை காலை இடம்பெறும்.

(வ)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

Best Wishes
Congratulations



10.11.2014 நடைபெற்ற
யாழ்.பல்கலைக்கழக 30ஆவது பட்டமளிப்பு
விழாவில் தொழில் நிர்வாக
இளமாணிப்பட்டம் பெற்ற
செல்வன் சுந்தரலிங்கம் நரேஸ்
B.B.A (Hons) FM spl
Bachelor of Business Administration
Special in Financial Management.
மேலும் பல்வேறு பட்டங்கள் பெற்று,
சிறப்புடன் பல்லாண்டுகாலம் வாழ
இறையருள் வேண்டிப் பாராட்டி
வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:
அப்பா, அம்மா, அத்தான், அக்கா, தம்பி,
அண்ணா (ஆஸ்திரேலியா), சித்தி, சித்தப்பா (கனடா).
(54272)(12.6)

17 . 11 . 2014



இன்று
பவளவிழாக்
காணும்
எங்கள் நெஞ்சம்
நிறைந்த பாலா
M.பாலசிங்கம் (J.P)
Rtd. Railway போமன்
Mack- பாலா
சாவகச்சேரி கெருடாவிலைச் சேர்ந்த
M.பாலசிங்கம் அவர்கள் 75 ஆவது அகவையில்
காலடி எடுத்து வைத்து இன்று (17.11.2014)
பவளவிழாக் காணும் பாக்கியத்தை
அளித்திருக்கும் எம் பெரு மானைப் பிரார்த்தித்து
அனைத்து வளங்களும் பெற்று நலமெலாம்
ஓங்கிட வாழையடி வாழையாக வாழ்க நீடூழி!
வாழ்க! வாழ்க! வாழ்க!
எங்கள் நெஞ்சம் நிறைந்த நல்வாழ்த்துக்களைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.
அன்புடன் கனக.தவநாதன் குடும்பத்தினர்.
கருணாநிதி-கண்டி.
(54090) (4.3.6)

# அதிமேதகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களின்
## பிறந்ததினம், பதவியேற்ற நாளை முன்னிட்டு அவர்களின் வாழ்வு சுபீட்சம் பெறவும் பணிகள் சிறக்கவும்



மேன்மை தாங்கிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு அங்கஜன் இராமநாதனின் ஏற்பாட்டில் நாளை 18.11.2014 14 ஆலயங்களில் பூஜை வழிபாடுகளும் மதியம் 12 மணிக்கு அன்னதானமும் இன்னும் பல நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. வடமாகாண சபை உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஒவ்வொரு பிரதேசங்களிற்கும் விஜயம் செய்து மக்களுடன் ஜனாதிபதியின் பிறந்த நாளை கொண்டாடவுள்ளார். இதில் சகல மக்களையும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்

1. செல்வ சந்நிதி முருகன் கோவில்
2. கச்சாய் அம்மன் கோவில் (சாவகச்சேரி)
3. மூளாய் பிள்ளையார் கோவில்
4. மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில்
5. தெல்லிப்பளை துர்க்கை அம்மன் கோவில்
6. தம்பட்டி அம்மன் கோவில் ( நராந்தனை)
7. கைலாசப்பிள்ளையார் கோவில் (யாழ்ப்பாணம்)
8. கோண்டாவில் பேருந்து நிலையம்
9. துன்னாலை கலிகை முருகன் கோவில்
10. கீரிமலை சிவன் ஸ்ரீகோவில்
11. அரியாலை யுதாவியார் கோவில்
12. வல்லை வேவில் பிள்ளையார் கோவில்
13. நாகவிகாரை நயினா தீவு
14. கிளிநகர் சித்திவிநாயகர் ஆலயம்



அங்கஜன் இராமநாதன்
சிறிலங்கா சுதந்திரக்கட்சியின்
யாழ்.மாவட்ட பிரதான அமைப்பாளர்,
அங்கத்தவர்கள் மற்றும் ஆதரவாளர்கள்.
(54317)(12.6)

# பேராசிரியர் சிவசாமியின் மறைவு அறிஞர் உலகுக்கு பெரும் இழப்பு

*இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், நவ. 17

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஓய்வு நிலை பேராசிரியரான வி.சிவசாமியின் மறைவு, அறிஞர் உலகுக்கு பேரிழப்பு என்று இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன் தெரிவித்துள்ளார்.

பேராசிரியர் வி.சிவசாமியின் மறைவு குறித்து வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பேராசிரியர் வி.சிவசாமி தமது சமஸ்கிருத மொழி ஆற்றலாலும் கலைகள் பற்றிய நுண்ணிய திறனாலும் மிகப் பெரும் ஆய்வுகளை மேற்கொண்டு இந்து சமூகத்துக்கு அருந்தொண்டாற்றியவர். அவர் கடந்த 5 தசாப்தங்களுக்கு மேலாக யாழ்.பல்கலைக்கழகத்தின் சமஸ்கிருத மொழித் துறையில் விரிவுரையாளராகவும், பேராசிரியராகவும் துறைத் தலைவராகவும் கடமை புரிந்தவர்.

சமஸ்கிருத மொழியை மிகுந்த ஆர்வத்தோடும் ஈடுபாட்டோடும் நேசித்த அவர், சமஸ்கிருத மொழி இலக்கியங்களில் சிறந்த பரீட்சயம் கொண்டிருந்தார். அவ்வாறே பல நூற்றுக் கணக்கான மாணவர்கள் சமஸ்கிருத மொழியைக் கற்று தேர்ச்சி பெறுவதற்கு வழி வகுத்தார்.

நூற்றுக்கணக்கான மாணவர்கள் சமஸ்கிருத மொழியைக் கற்று, பல மாணாக்கர்கள் சமஸ்கிருத மொழிப் புலமை மிக்கவர்களாக விளங்குவது அவரது கற்பித்தல் திறனுக்கு கிடைத்த வெற்றியாகும். அவரது மாணாக்கர்கள் பலர் பல்வேறு துறைகளிலும் உயர் பதவிகளை வகித்து அவரது ஆசிரியர் பணிக்கு பெருமை சேர்க்கின்றனர். அவரிடம் கற்ற மாணவி என்ற முறையில் நானும் மிகுந்த பெருமிதம் அடைகிறேன்.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்துடன் கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக பேராசிரியர் மிகுந்த தொடர்பைப் பேணி வந்தார். குறிப்பாக திணைக்களத்தின் ஆய்வுப்பிரிவு மற்றும் அறநெறிக் கல்விப் பிரிவு என்பவை தொடர்பான செயற்பாடுகளில் பூரண ஒத்துழைப்பை வழங்கிச் செயற்பட்டவர்.

திணைக்கள ஆய்வுப் பிரிவின் வருடாந்த ஆய்வரங்குகளில் தொடர்ச்சியாக பங்கேற்று ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்துள்ளார். மேலும் நுண்கலைகளான சிற்பம், நடனம், ஓவியம் என்பவை தொடர்பாக விரிவான ஆய்வை மேற்கொண்டு கட்டுரைகளையும் நூல்களையும் அவர் வெளியிட்டுள்ளார்.

அவ்வாறே அறநெறிப் பாடசாலைகளுடைய நூலாக்கக் குழுவின் ஓர் உறுப்பினராக பணிசெய்ததோடு தர்மாச்சாரியார் என்ற முக்கியமான பரீட்சையில் வேதம், ஆகமம் என்ற வினாக்களுக்குரிய பரீட்சகராகவும் செயற்பட்டார். அவ்வகையில் திணைக்களத்துக்கு அவர் வழங்கிய பங்களிப்பு மகத்தானதாகும்.

மிகவும்எளிமையான, பழகுவதற்கு இனிய, எவரோடும் கண்ணியத்தோடு உறவாடும் பேராசிரியர் தமது கல்விப் புலமை, அறிவுத்திறன், ஆய்வு நுட்பம் போன்றவற்றால் சிறந்த ஓர் அறிஞருக்குரிய மாண்பினைக் கொண்டவராக விளங்கினார்.

அவர் விட்டுச் சென்ற ஆய்வு நூல்களும், நூற்றுக்கணக்கான ஆய்வுக் கட்டுரைகளும் எப்போதும் அவரது புலமையை பறைசாற்றுவனவாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

எமது திணைக்களத்தின் மிக நெருங்கிய உறுப்பினர் போன்று செயற்பட்ட அவரது மறைவு எமக்கு மிகவும் துயரம் தருவதாகும். பணிப்பாளர் என்ற முறையிலும், திணைக்கள அனைத்து உத்தியோகத்தர்களினது சார்பிலும் அவர் தம் உறவினர்களுக்கு எமது நெகிழ்ச்சியான அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வேண்டும் என்று எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(வ-10)

## வாசிப்பு மாத இறுதி நாள் நிகழ்வும் பரிசளிப்பும்

தென்மராட்சி, நவ.17

சாவகச்சேரி பிரதேச சபையின் மிருசுவில் பொது நூலகத்தில் கடந்த மாதம் இடம்பெற்ற தேசிய வாசிப்பு மாதம் நிகழ்வுகளின் இறுதிநாள் நிகழ்வுகளும் பரிசில் வழங்கலும் நாளை மறுதினம் புதன்கிழமை பி.ப.2 மணிக்கு பொது நூலக மண்டபத்தில் நடைபெறும்.

பிரதேச சபைத் தலைவர் சி.துரைராஜா தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை, பிரதேச சபை செயலாளர் தி.தர்சினி, உறுப்பினர் இ.தெய்வேந்திரம்பிள்ளை, உசன் இராமநாதன் மகாவித்தியாலய அதிபர் த.சோதிலிங்கம் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக பிரதேச சனசமூக நிலைய அபிவிருத்தி அலுவலர் திருமதி செ.ஜெகதீஸன், தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ. சங்க பொது முகாமையாளர் சி.தேவகுமார், மிருசுவில் அ.த.க.பாடசாலை அதிபர் எவ்.ரி.எடிசன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்கள், முன்பள்ளிகள், வாசகர்கள் ஆகியோரிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு பரிசில்கள் வழங்கலும், மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெறும்.

(வ-9)

## திருக்கல்யாணம்

தொண்டமனாறு செல்வச் சந்நிதி ஆலயத்தின் திருக்கல்யாணத் திருவிழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பமாகும்.

(வ-ரி)

## நூலகம் திறப்பு

யாழ்ப்பாணம், நவ.17

ஊர்காவற்றுறை பிரதேச சபை, புளியங்கூடலில் புதிதாக அமைக்கப்பட்ட நாரந்தனை பொது நூலகத்தை இன்று திங்கட்கிழமை திறந்து வைக்கவுள்ளது.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் நூலகத்தைத் திறந்து வைப்பார். தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி நூலகம் திறக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தவிசாளர் எஸ். ஜெயகாந்தன் தலைமையில் வைபவம் இடம்பெறும்.

(வ-7)




### பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ். பல்கலைக்கழகத்தில்
30 ஆவது பொது பட்டமளிப்பு விழாவில்
சிறப்பு கலைமாணி பட்டம்பெற்ற
**தர்மலிங்கம் அனுசியா**
அவர்களை மேலும் பல பட்டங்கள்
பெற்று பல்லாண்டு வாழ
வாழ்த்துகிறோம்.
*வாழ்த்தும்*
அப்பா, அம்மா,
அண்ணா குடும்பம், அக்கா குடும்பம்,
சின்னண்ணா,குடும்பம்,
கனகராயன்குளம் தெற்கு.

### சேவை நலன் பாராட்டு



திரு.பொன்னம்பலம் ஞானதேசிகன்
B.A Dip in Ed. M.Ed
SLPS-2
பிரதி அதிபர், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

யாழ்.இந்து அன்னையின் 125 ஆண்டுகால அகவையில் 25 ஆண்டுகள் ஆசிரியராக, பகுதித்தலைவராக, உப அதிபராக, பிரதி அதிபராகக் கல்விப்பணிபுரிந்தவர்

**அரச சேவையில்**
12.03.1984-13.08.1989 - நு/நுவரெலியா புனித சேவியர் கல்லூரி.
14.08.1989-14.11.2014- யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி.

வந்தனை செய்குவோம் வளம்பெற வாழ்த்துவோம்
இந்துவை நேசிக்கும் இனியதோர் இதயமே
பைந்தமிழ் பயிற்றிடும் பல்கலைக் கழகமே
நொந்தவர்க் கரணாய் நின்றிடும் சிகரமே
தந்தையாய் இந்து மைந்தரை தாங்கிய இமயமே
சந்ததம் சேவையால் மகிழ்ந்திடும் ஞானமே
வந்தனை செய்துனை மனமார வாழ்த்துவோம்
கந்தன் கணபதி சிவஞான வைரவர்
உந்தனுக்கருள்செய இணைந்துமே வேண்டுவோம்.

ஆசிரியர் கழகம்
**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.**
(சீ/17724)(4.3.6)

### வீடு வாடகைக்கு

Rail Road Kokuvil East Kokuvil
அமைந்துள்ள வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு: 077 080 4122 (54319) (4.6.3)

### இடமாற்றம்

டயானா பிளாஸ்ரிக்
108, பலாலி வீதி (இலுப்பையடிச் சந்தி)
* உடைந்த வாகன பிளாஸ்ரிக் ஒட்டுதல்.
* பழைய பிளாஸ்ரிக் வாங்குதல்.
* புதிய பிளாஸ்ரிக் தயாரித்தல்
(C/17542) (7.6.3)
தொடர்பு : 077 592 5088/021 222 8680

### அறைகள் உண்டு

தூர இடங்களிலிருந்து உயர்தரக்கல்வி கற்பதற்காக வருகின்ற மாணவர்கள் நால்வருக்கு யாழ்.நகர மத்தியில் தங்குவதற்கு அறைகள் உள்ளன.
(54262) (12.6) தொடர்பு: 077 614 3133

### டீசல் கார் MORRIS-OXFORD விற்பனை

நல்ல நிலையிலுள்ள 31 Sri 3006
MORRIS - OXFORD கார்.
தொடர்பு: T.சண்முகநாதன் (சுக்கிரிவீடு),
111, பூதவராயர் வீதி, திருநெல்வேலி கிழக்கு.
(54294) (12.6) TP: 077 134 6424

### காணி விற்பனை

ஆவரங்காலில் இருந்து அச்சுவேலி செல்லும் வீதியில் பிரப்பந்தாழ்வு குளத்திற்கு அருகில் அமைந்துள்ள 7 பரப்பு 4 ¼ குழி உடைய காணி விற்பனைக் குண்டு.
தொடர்பு: 077 491 1974

### பொது முகாமையாளர் பதவி ஆள்சேர்ப்பு

சண்டிலிப்பாய் கால்நடைவளர்ப்போர் கூட்டுறவு சங்கத்திற்கு பொது முகாமையாளர் பதவிக்கு பொருத்தமானவர்களிடம் இருந்து விண்ணப்பம் கோரப்படுகிறது.

விண்ணப்பதாரி 45 வயதுக்கு உட்பட்டவராகவும் H.N.D.A, B.Com மற்றும் இணையான பட்டம் உடையவராக இருப்பதுடன் கால்நடை முகாமைத்துவம் குறைந்தது 2 வருடங்கள் கூட்டுறவு தொடர்பான மேலதிக தகைமை உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

இந்த விண்ணப்பமுடிவு திகதி 18.11.2014 அன்று
சுயவிவரக் கோவையுடன் நேரில் வரவும்.
அல்லது அனுப்ப வேண்டிய முகவரி:
தலைவர், கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்கம்,
7 ஆம் கட்டை, சண்டிலிப்பாய். (54324) (4.6.3)

### பரிசுத்த ஆவிக்கு செபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நானடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே. உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக உமது அருட்கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்குத் தீங்கு செய்தோரையும் நான் மன்னிக்க அருள்புரிபவரே. என் வாழ்வில் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச் சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறித்துதிக்கின்றேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாகவிருப்பினும் உம்மிலிருந்து விலகாமல் என்றென்றும் உம்மில் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகின்றேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவிலா மகிமையில் பங்கு பெற வேண்டுகிறேன்.

ஆமென் -அடியாள்

(உங்கள் தேவை எவ்வளவு கடினமாயிருப்பினும் இச் செபத்தை 3 நாள்கள் தேவையை கேளாமல் தொடர்ந்து சொல்லிவர தேவை நிறைவேறும் இதை பிரசுரிப்பதாக வாக்குப் பண்ணவும்) (54322) (4.6.3)

### பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ். பல்கலைக் கழகத்தின்
30 ஆவது பட்டமளிப்பு விழாவில்
BBA (Hons) Spl- Fmg பட்டம் பெற்ற
Rajathurai Parthipan
மேன் மேலும் பல பட்டங்கள்பெற்று நீடூழி வளமுடன் வாழ்கவென வாழ்த்துகிறோம்.
*வாழ்த்துவோர்:*
அம்மம்மா, அம்மப்பா,
அப்பா, அம்மா, அக்காமார்,
தங்கைமார், தம்பிமார், அன்ரி,
சித்தி சித்தப்பா,
மாமாமார், மாமிமார்.
சித்தப்பா (கண்ணன்),
சித்தி (ராதா).
30/2, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

### பாராட்டி வாழ்த்துகின்றோம்



மாமூலை முள்ளியவளை
முல்லைத்தீவைச் சேர்ந்த
**கந்தையா இந்திரகுமார்**
அவர்கள் அகில இலங்கைக்குமான சமாதான நீதிவானாக 03.11.2014 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் மா.கணேசராஜா அவர்கள் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். இவர் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தின் நிர்வாக உத்தியோகத்தரும் முல்லைத்தீவு மாவட்ட றோட்டறி கழக உறுப்பினரும் ஒட்டுசுட்டான் பிரதேச மத்தியஸ்தர் சபை தலைவரும் ஆவார்.
இவர் மேலும் பல பதவிகளைப் பெற்று உயர் நிலையடைய வாழ்த்துகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

Congratulation
(54330)(4.3.6) **உறவினர்.**

# தெல்லிப்பழை மருத்துவமனைக்கு லயன்ஸ் கழகங்களால் உதவிகள்

யாழ்ப்பாணம், நவ.17

ஹெந்தல லயன்ஸ் கழகத்துடன் யாழ்.மாவட்டத்தில் உள்ள ஐந்து லயன்ஸ் கழகங்கள் இணைந்து தெல்லிப்பழை ஆதார மருத்துவமனைக்கு பல்வேறு உதவித் திட்டங்களை வழங்கியுள்ளன.

சர்வதேச லயன்ஸ் கழக 306 பி1 மாவட்டத்தின் பொதுசன தொடர்பு மாவட்டத் தலைவர் லயன் சீ.சுந்தரேஸ்வரன் தலைமையில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் - சர்வதேச லயன்ஸ் கழக 306 பி1 மாவட்ட உதவி ஆளுநர் லயன் மருத்துவர் வீ.பி.தியாகராசா உதவிப் பொருள்களை மருத்துவமனை பொறுப்பதிகாரியிடம் கையளித்தார். ஹெந்தல லயன்ஸ் கழகம், மானிப்பாய் சிற்றி லயன்ஸ் கழகம், சுன்னாகம் லயன்ஸ் கழகம், இணுவில் லயன்ஸ் கழகம், உரும்பிராய் லயன்ஸ் கழகம், மல்லாகம்- தெல்லிப்பழை லயன்ஸ் கழகம் ஆகியவை இணைந்து 30 கண் வில்லைகள், ஒரு தொகுதி ஊன்று கோல்கள், 3 சக்கர நாற்காலிகள், நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்ட வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு வழங்க 15 போசாக்குமா வகை போன்றவற்றை வழங்கினர். நிகழ்வில் ஹெந்தல லயன்ஸ் கழகத்தைச்சேர்ந்த லயன் கமிலஸ் பெர்னாண்டோ, மாவட்டப் பொருளாளார் சரித் அபேசேகர ஆகியோரும் கலந்து கொண்டனர். (வ-9)



# ரெஜினோல்ட் குரே அதிருப்தி

கொழும்பு, நவ.17

சிறுபயிர் ஏற்றுமதி அபிவிருத்தி அமைச்சர் ரெஜினோல்ட் குரே ஆளுங்கட்சி மீது கடும் அதிருப்தியை வெளிக்காட்டியுள்ளார். மாத்தறையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் அவர் ஆளுங்கட்சி தொடர்பான தனது அதிருப்திகளை பகிரங்கமாக வெளியிட்டுள்ளார். குறித்த நிகழ்வின் போது உரையாற்றிய அமைச்சர் ரெஜினோல்ட் குரே,

"முன்னைய அரசுகளில் விவசாய அமைச்சரின் கீழ் காணி, நீர்ப்பாசனம், விவசாயம் ஆகிய மூன்று துறைகளும் இருந்தன. தற்போது எனக்கு அதிலிருந்து சிறு பயிர் ஏற்றுமதி விடயம் மட்டும் அமைச்சுப் பொறுப்பாக ஒதுக்கப்பட்டுள்ளது.

இது வெறும் பெயரளவிலான அமைச்சுப் பதவி மட்டும் தான். இந்த அமைச்சுப் பதவிக்கு எந்தவித அதிகாரமும் இல்லை. சிறுபயிர் ஏற்றுமதி அபிவிருத்தி என்றிருந்தாலும் ஒரு அங்குல நிலம் கூட எனது அமைச்சின் கீழ் இல்லை"- என்றும் அமைச்சர் ரெஜினோல்ட் குரே கடுமையான முறையில் தனது அதிருப்தியை வெளிக்காட்டியுள்ளார். (ற)

# கடந்த காலச் சம்பவங்களால் வேதனை

## குமுறுகின்றார் மேர்வின் சில்வா



கொழும்பு, நவ.17

கடந்த கால சம்பவங்களால் தான் மிகவும் மன வேதனையுடன் இருக்கின்றேன் என்று கூறியுள்ளார் அமைச்சர் மேர்வின் சில்வா. பியகம பிரதேசத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது:

"எனது ஒரே மகன் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். ஆனாலும் நான் தளர்ந்து விடப் போவதில்லை. கொள்ளையடித்து, பெண்களை மானபங்கம் செய்து, ஹெரோயின் மற்றும் கஞ்சா விற்றதால் எனது மகன் சிறையில் அடைக்கப் படவில்லை. சண்டையிட்டதால் சிறையில் அடைக்கப் பட்டுள்ளார்.

ஒரு வருடமும் பல மாதங்களும் எனக்கு அதிகாரம் இருக்கவில்லை. ஒதுங்கியிருந்தேன். நான் அதனை கேட்டு வாங்கவில்லை. ஜனாதிபதி என்னை மீண்டும் களனி தொகுதியின் அமைப்பாளராக நியமித்தார்.

எந்த பதவிக்காகவும் மண்டியிட மாட்டேன். புத்த பகவானிடமும் எனக்கு வாக்களித்த மக்களிடமும் மாத்திரமே மண்டியிடுவேன். நான் ஆரம்பத்தை மறக்காதவன். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பொன்சேகா போட்டியிட்ட போது பதவி ஆசை கொண்டவர்கள் ஓடி மறைந்து கொண்டனர். களனி விகாரையிலும் கட்டுநாயக்க விமான நிலையத்திலும் சரத் பொன்சேகவை இந்த மேர்வின்சில்வாவேதடுத்து நிறுத்தினேன். இதனை முழு இலங்கையும் அறியும்"- என்று தெரிவித்துள்ளார். (ற)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி ஆராதனை அழைப்பும்

என் வசனத்தைக் கேட்டு என்னை அனுப்பினவரை விசுவாசிக்கின்றவனுக்கு நித்திய ஜீவன் உண்டு. யோவான் 5:24



தோற்றம் 10.12.1954

மறைவு 18.10.2014

கர்த்தருக்குள் நித்திரையடைந்த

சவரிமுத்து அந்தோனிப்பிள்ளை

அவர்களுடைய நன்றி ஆராதனை நிகழ்வு இன்று (17.11.2014) திங்கட்கிழமை முற்பகல் 11 மணிதொடக்கம் நண்பகல் 12 மணிவரையும் நடைபெறும். இந்த ஆராதனை நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அழைக்கின்றோம்

வித்தனை ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.

குடும்பத்தினர்.



# ஓராண்டு நினைவஞ்சலி

அமரர் அப்பையா லிங்கநாதன்



தோற்றம் 28.04.1941

மறைவு 17.11.2013

ஆண்டொன்று சென்றது ஆறவில்லை எம் துயரம்
பாசத்தின் உறைவிடமாய்
பண்பின் சிகரமாய் பாசத்தால்
அரவணைத்து வழி காட்டிய எங்கள் தெய்வமே!
உங்கள் நினைவுகளுடன்
உங்கள் ஆத்மா சாந்தியடைய அழகொல்லை
விநாயகரை வேண்டுகின்றோம்.

கணேஸ்வரம்,
அளவெட்டி.

குடும்பத்தினர்.

(54055)(4.6.3)



# வீட்டுக்கிருத்திய அழைப்பு

திருமதி தங்கம்மா வேலாயுதம்



தோற்றம் 15.06.1942

மறைவு 18.10.2014

கடந்த 18.10.2014 சனிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவியின் வீட்டுகிருத்தியம் இன்று (17.11.2014) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் இந்த நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு - அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தோப்பு

குடும்பத்தினர்.



# மரண அறிவித்தல்



திருமதி டொலறோஸ் (அருணா) தேவராசா (லெய்வோன்)

நாரந்தனை தெற்கு ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி டொலறோஸ் (அருணா) தேவராசா (லெய்வோன்) 15.11.2014 காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா - மேரிறாணி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அந்தோணி - றோசலின் தம்பதியரின் அன்பு மருமகளும், தேவராசாவின் (லெய்வோன்) அன்பு மனைவியும், அரியம், றிச்சுமன், லூட்ஸ், ஸ்ரீபன், ரூபன், அலிஸ், எக்ஸ்ரா, ஏபன், கிளமன்ற், றெஜினோள்ட் ஆகியோரின் அன்புச் சகோதரியும், நீக்கிலாஸ் (அப்பன்), கொன்செற்றா, மேனகா, மலக்கியாஸ், சோதி, விஜி, காலஞ்சென்ற சாள்ஸ் (பெரியாம்பி) மற்றும் எமிலி, அமலினி, சிறி, டேனியஸ், டிலானி, சினுசியா ஆகியோரின் அன்பு மைத்துனியும், சோபியா, டினோஜன், தீபிகா பௌஸ்தீனா ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்தில் இருந்து இன்று (17.11.2014) திங்கட்கிழமை புனித ராயப்பர் சின்னப்பர் தேவாலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு, மு.ப.11.00 மணிக்கு திருப்பலி ஆராதனை ஒப்புக்கொடுக்கப்பட்டு, பின்னர் புனித ராயப்பர் சின்னப்பர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாரந்தனை தெற்கு,
ஊர்காவற்றுறை.

(54529)
(12.6)

தகவல்:
கணவர் - தேவராசா (லெய்வோன்).
077 082 1452


# 77 பேர் நாடு திரும்பினர்

மத்திய கிழக்கு நாடுகளுக்கு தொழிலுக்காகச் சென்று பல்வேறுபட்ட இன்னல்களுக்கு முகங்கொடுத்த ஒரு தொகுதி பணியாளர்கள் நேற்றுமுன்தினம் இலங்கை வந்தடைந்தனர்.

சுமார் 77 பேர் இவ்வாறு இலங்கை வந்தடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப் படுகின்றது. அவர்கள் அனைவரும் குவைத் மற்றும் ரியாத் நகரங்களில் இருந்தே வந்துள்ளனர் என்றும் தெரியவருகின்றது. (ற)


# மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

அமரர் நாகநாதி தம்பாப்பிள்ளை



தோற்றம் 20.09.1932

மறைவு 20.11.2011

நெஞ்சோடு நினைவுகள் தேடுதய்யா
வாழ்வோடு உறவுதந்து மகிழ்ந்திருந்தாய்
பெற்றெடுத்துக் காத்ததாய் தந்தையும்
மூன்றாண்டுகள் சென்றோடி மறைந்தனவே
காலங்கள் கோலங்கள் மறைந்தாலும்
பாசத்தில் மகுடம் சூட்டியவரே
வானத்தில் ஆயிரம் வெள்ளிநிலா இருந்தாலும்
நினைவலைகள் உங்களோடு தொடர்கின்றதே
எத்தனை ஆண்டு வந்தாலும் உயிரோவியம் ஆனவரே

சிந்தாமணிபவனம்,
சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.

(54313)(4.3.6)

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## கர்நாடக சங்கீத இசை மறக்கப்பட்டு வருகிறது

### சந்நிதியான் ஆச்சிரம மடாதிபதி கவலை

வடமராட்சி, நவ.17

வடமராட்சி பிரதேசத்தில் கர்நாடக சங்கீத இசை மறக்கப்பட்டு வளர்ச்சி குன்றி வருகின்றது. இதனை இளைய தலைமுறையினர் மத்தியில் வளர்த்தெடுத்து இறைபக்தியை அதிகரிக்க சம்பந்தப்பட்ட தரப்பினர் முன்வரவேண்டும் என சந்நிதியான் ஆச்சிரம மடாதிபதி செ.மோகனதாஸ் சுவாமிகள் தெரிவித்தார்.

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் சந்நிதியான் ஆச்சிரமத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற யாழ். இந்து மகளிர் கல்லூரி சங்கீத ஆசிரியை திருமதி கனகாம்பரி சிவனேஸ்வரநாதனின் சங்கீத இன்னிசைக் கச்சேரியின் போது பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில்:

யாழ். மாவட்டத்தில் யாழ்ப்பாணம், வலிகாமம், தென்மராட்சி, தீவகம் ஆகிய பிரதேசங்களில் கர்நாடக சங்கீத இசை வளர்ச்சி பெற்று வருகின்றது. அந்தப் பிரதேசத்தில் அதற்கான நிகழ்வுகள் அடிக்கடி நடைபெற்று வருகின்றன. ஆனால் வடமராட்சிப் பிரதேசத்தில் கர்நாடக சங்கீத இசைத் துறையின் வளர்ச்சி குறைந்து வருகின்றன. இதனை வளர்த்தெடுக்க துறைசார்ந்தோர் முன்வர வேண்டும். எமது ஆச்சிரமத்தில் மாதத்தில் ஒரு தடவை கர்நாடக சங்கீத இசைக் கச்சேரியை நடத்தி வருகின்றோம். இன்றைய தினம் ஆசிரியை கனகாம்பரி சிறப்பான முறையில் கச்சேரியை நடத்தியுள்ளார். ஜனரஞ்சமாக நடத்தப்பட்ட இக்கச்சேரிக்கு அணிசேர் கலைஞர்கள் சிறந்த பங்களிப்பை வழங்கியுள்ளனர்.

கர்நாடக இசையை இளைய தலைமுறையினர் மத்தியில் வளர்த்தெடுப்பதன் மூலம் இறைபக்தியை வளர்த்தெடுக்க முடியும். இதனைக் கருத்தில் கொண்டு துறைசார்ந்தோர் கர்நாடக இசைத்துறையை வளர்த்தெடுக்க உரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்-என்றார். (த-173)

## தென்மராட்சியில் வசிப்போரில் 10 வீதமானவர்களுக்கு நீரிழிவு



தென்மராட்சி,நவ.17

தென்மராட்சிப் பிரதேசத்தில் வசிப்போரில் 10 வீதமானவர்கள் நீரிழிவு நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

இந்த அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளார் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் மருத்துவ அத்தியட்சகர் த.குகதாசன். கடந்த வெள்ளிக்கிழமை சாவகச்சேரி நகராட்சி மன்ற பொன்விழா மண்டபத்தில் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட உலக நீரிழிவு தின நிகழ்வில் உரையாற்றுகையில் இந்தத் தகவலை வெளியிட்டார் அவர்.

யாழ்.மாவட்டத்தில் ஏனைய பிரதேசங்களை விட தென்மராட்சிப் பிரதேசத்தில் நீரிழிவு நோயினால் பீடிக்கப்படுவோரின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்து வருகிறது. வருடாந்தம் 500 இற்கு மேற்பட்டோர் நீரிழிவு நோய் ஏற்பட்டிருப்பது இனங்காணப்பட்டு சிகிச்சை வழங்கப்படுகிறது. தென்மராட்சி பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்ட 80 ஆயிரம் குடியிருப்பாளர்களின் 8ஆயிரம் பேர் நீரிழிவு நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

பிரதேசத்தில் வாழ்வோரில் பெரும்பாலானோர். கடின உழைப்பாளிகளாக காணப்படுகின்றபோதிலும் நீரிழிவு நோய் பலருக்கு ஏற்பட்டுள்ளமை மருத்துவத்துறைக்கு விடும் சவாலாக கருதமுடிகிறது. பிரதேசத்தில் நீரிழிவு நோய் அதிகரிப்பதற்கான காரணங்களைக் கண்டறிய யாழ்.பல்கலைக்கழக சமுதாயப் பிரிவினர் உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

சாவகச்சேரி மருத்துவமனையில் இயங்கும் நீரிழிவுசிகிச்சை நிலையத்தினால் மாதாந்தம் கிராம ரீதியில் நடத்தப்பட்டு வரும் நீரிழிவு பரிசோதனை முகாமில் பெருமளவு நீரிழிவு நோயாளர்கள் புதிதாகக் கண்டு பிடிக்கப்படுகின்றனர். நீரிழிவு சிகிச்சை நிலைய புள்ளி விவரப்படி கடந்த 2012 ஆம் ஆண்டு 508 பேரும் 2013ஆம் ஆண்டு 526 பேரும் 2014 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் வரை 575 பேரும் புதிய நீரிழிவு நோயாளர்களாக இனங்காணப்பட்டு மருத்துவமனையில் இடம் பெறும் நீரிழிவு சிகிச்சை பிரிவில் இணைக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது.

நீரிழிவு நோய் ஒரு கொடிய உடனிருந்து கொல்லும் வியாதி என்பது பலருக்கு தெரியாமல் உள்ளது. இந்தநோய் பரம்பரை மற்றும் எம்மிடையே காணப்படும் உணவுப் பழக்க வழக்கங்களால் ஏற்படுகின்றன. பிரதேச மக்களிடையே போதிய விழிப்புணர்வு இல்லாததால் நோயின் தாக்கம் அதிகரித்த பின்னரே சிகிச்சை பெற முனைகின்றனர். 40 வயதுக்கு மேற்பட்டவர்கள் வருடத்தில் ஒரு தடவை பரிசோதனைகளை மேற்கொண்டால் நீரிழிவு ஏற்பட்டிருப்பது கண்டறியப்பட்டால் ஆரம்ப கட்டத்தில் வைத்துச் சிகிச்சை வழங்க முடியும். சிலர் குடும்ப உறவுகளால் ஒதுக்கப்பட்டு விடுவோம் என்ற அச்ச உணர்வில் சிகிச்சை பெற முயற்சிப்பதில்லை. இதன் தாக்கம் நோயின் இறுதிக் கட்டம் வரை கொண்டு சென்று கண், நரம்புத் தொகுதி, மூளை சிறுநீரகம் போன்ற உறுப்புகளைப் பாதிப்படையச் செய்கிறது. அத்துடன் அவயவங்களில் புண்கள் ஏற்பட்டு நீண்ட காலம் குணப்படுத்த முடியா மல் அவயவங்களை இழக்க வேண்டிய நிலை கூட ஏற் படுகிறது.

குறிப்பாக நீரிழிவின் இறுதிக் கட்டத்தை இன்சுலின் ஊசி மருந்து ஏற்றும் நிலைக்கு தள்ளப்படுகின்றனர். இன்சுலின் ஊசி மருந்தை அளவுப் பிரமாணம் ஏற்றிக் கொள்ள வேண்டும். சிலர் அவற்றை வீடுகளில் வைத்து அளவுக்கு அதிகமாக ஏற்றுகின்றனர். இதனால் இந்த நோயாளி கோமா நிலைக்குக் கொண்டு செல்லப்படுகிறார்.

மக்கள் தாமாக மருத்துவமனையில் அல்லது அந்தந்தப் பகுதிகளில் நடைபெறும் மருத்துவ பரிசோதனை முகாம்கள் போன்றவற்றில் தாமாக முன்வந்து பரிசோதனைகளை மேற்கொண்டு தமக்கு நீரிழிவு நோய் ஏற்பட்டிருப்பதைக் கண்டறியும் விழிப்புணர்வு ஏற்படவேண்டும்.

யாழ்.பல்கலைக்கழகத்தினர் சாவகச்சேரி மருத்துவமனை வளாகத்தில் சுகாதாரத் திணைக்களத்துடன் இணைந்து தொற்று நோயியல் ஆய்வு மையத்துக்கான கட்டடம் அமைத்து ஆய்வுகளை மேற்கொள்ளவேண்டும். கட்டடம் அமைப்பதற்கான இடவசதி மருத்துவமனை வளாகத்தில் காணப்படுகிறது.

யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்பதால் தொற்றுநோயியல் ஆய்வு மையத்தை அமைக்க முயற்சிக்க வேண்டும் -என்றார். (த-9)

## யாழ். மாநகர சபை பகுதிகளில் நுளம்பு பெருக்கத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை

யாழ்ப்பாணம், நவ.17

யாழ்.மாநகர சபைக்கு உட்பட்ட கரையோரப் பகுதிகளில் வெள்ளம் தேங்கி நிற்கும் இடங்கள் மற்றும் கைவிடப்பட்ட கிணறுகள் போன்ற இடங்களில் நுளம்புகளின் பெருக்கத்தை கட்டுப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று மாநகர சபைப் பொதுச் சுகாதார பிரதம பரிசோதகர் கே.ஏ.ஜீவநாதன் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

"கைவிடப்பட்ட கிணறுகள் போன்றவற்றில் இருந்து பெருகும் நுளம்பு குடம்பிகளை அழிப்பதற்கான மீன்குஞ்சுகள் விடப்பட்டு வருகின்றன.

அதனைவிட வெள்ளம் தேங்கி நிற்கும் இடங்களை இனம் கண்டு அவற்றின் ஊடாக நுளம்புப் பெருக்கத்தை கட்டுப்படுத்துவதற்கான 'அபேற்' என்ற இரசாயன மருந்து விசிறப்பட்டு வருகின்றது. தற்போது மழைகாலம் ஆரம்பித்துள்ளதால் மாநகரப் பகுதியில் நுளம்பு மற்றும் நீரினால் பரவும் தொற்று நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குறிப்பாக டெங்கு நோய் காணப்படும் சகல இடங்களிலும் புகையூட்டல் மேற்கொள்ளப்படுவதோடு அதற்கான விழிப்புணர்வு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதனைவிட பொதுக் கிணறுகள் மற்றும் நீரால் ஏற்படும் நோய்கள் பரவும் இடங்களும் கண்டறியப்பட்டு அந்தப்பகுதி கிணறுகளுக்கும் குளோரின் போடப்பட்டு வருகின்றது.

அதனைவிட வடிகால் வாய்கள் மற்றும் நீர் ஏரிகள் போன்வற்றில் இருந்து நுளம்பு குடம்பிகள் பெருகாதவாறு அவற்றுக்கும் 'அபேற்' விசிறப்பட்டு வருகின்றது.

இது இவ்வாறிருக்க ஒவ்வொரு செவ்வாய்க்கிழமைகளிலும் பொதுச்சுகாதார பரிசோதகர் பிரிவுகளில் விசேட சிரமதானங்கள் மற்றும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த சிரமதானம் மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் தேவைப்படும் பட்சத்தில் மேலும் அதிகரிக்கப்படும்"-என்றார். (வ-17)

## கரவெட்டியில் பனை உற்பத்தி பொருள்களுக்கு கிராக்கி

யாழ்ப்பாணம், நவ.17

பனை அபிவிருத்திச் சபையின் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் உள்ள சமரபாகு மாதிரிக் கிராம உற்பத்தியாளர்களால் உற்பத்தி செய்யப்படும் ஈக்குகூடை மற்றும் சுளகுகளுக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது. பனம் பொருளில் இருந்து உற்பத்தி செய்யப்படும் ஈக்கு கூடைகளை வெளிநாட்டவர்கள் அதிகளவில் கொள்வனவு செய்து எடுத்துச் செல்கின்றனர்.

கடந்த வெள்ளிக்கிழமையும் ஜேர்மனி நாட்டைச் சேர்ந்த ஒருவர் நாற்பதுக்கும் மேற்பட்ட ஈக்குகூடைகளை இந்த மாதிரிக்கிராம உற்பத்தியாளர்களிடம் இருந்து பெற்றுச் சென்றிருப்பதாக பனை அபிவிருத்தி சபையின் தலைவர் பசுபதி சீவரெத்தினம் தெரிவித்தார்.

சபையால் பிரகடனப்படுத்தப்பட்ட இந்த சமரபாகு மாதிரிக் கிராம பனம் கைப்பணி உற்பத்தியாளர்களின் இந்த உற்பத்தி பொருள்களுக்கு தற்போது சந்தையில் கிராக்கி ஏற்பட்டுள்ளது. குறிப்பாக இந்த உற்பத்தியாளர்களில் மற்றுமொரு உற்பத்திப் பொருளான சுளகுக்கே தற்போது பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

இந்த சுளகு உற்பத்தி குடாநாட்டில் குறைந்து செல்கின்றது. எனினும் இவ் மாதிரிக் கிராம உற்பத்தியாளர்கள் சுளகு உற்பத்தியில் அதிக ஆர்வம் காட்டியுள்ளனர்.

இதன்காரணத்தால் சமரபாகு கிராம உற்பத்தியாளர்களின் சுளகுகளை நாடு முழுவதும் அதிகளவில் சந்தைப்படுத்தவும் சபை நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

இந்த பனம் பொருள் உற்பத்தி மாதிரிக் கிராமத்தில் 150 இற்கும் மேற்பட்ட பெண்கள் கைப்பணி பொருள்கள் உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். (வ-17)

## வெளிச்சவீடு புனரமைப்பு

யாழ்ப்பாணம், நவ.17

யாழ். குடாக்கடலின் முகத்துவாரப் பகுதியில் இருந்த வெளிச்ச வீடு புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது.

துறைமுகங்கள் அதிகார சபையின் உதவியுடன் இந்த வெளிச்ச வீடு புனரமைக்கப்பட்டு ஒளி வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

குடாக்கடல் மீனவர்கள் இரவு நேரங்களில் மீன்பிடிப்பதற்காக கடலுக்கு செல்வதற்கும் திசைகளை அறிந்து கொள்வதற்கும் வெளிச்ச வீடு இன்மையால் சிரமப்பட்டு வந்தனர்.

கடந்த கால போர் இடர்களால் பூநகரியை அண்டிய முகத்துவாரப் பகுதியில் இருட்டி வெளிச்ச வீடு சேதப்பட்டுதரை மட்டமான நிலையில் காணப்பட்டது.

தற்போது அதன் அடிதளப் பகுதி சீராகக் காணப்பட்டதால் வெளிச்ச வீட்டுக்கான கோபுரம் அமைக்கப்பட்டு அதன் உச்சியில் ஒளி வசதி ஏற்படுத்தப் பட்டுள்ளது.

இந்த வெளிச்ச வீடு மீள புனரமைத்ததால் இரவில் கடலுக்குச் சென்று மீன்பிடிதொழிலில் ஈடுபடும் மீனவர்கள் சிரமம் இன்றி தமது தொழிலை மேற்கொண்டு வருகின்றனர். (வ-17)

## ஐஸ்கிறீம் நிலையங்களில் இதுவரை 38 க்கு அனுமதி

யாழ்ப்பாணம், நவ 17

யாழ் மாவட்டத்தில் இயங்கி வந்து மூடப்பட்டிருந்த 59 ஐஸ்கிறீம், ஜூஸ் உற்பத்தி நிலையங்களில் இதுவரை 38 நிறுவனங்களுக்கு மீளத் திறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

மூடப்பட்டிருந்த 59 நிலையங்களில் 32 நிலையங்களுக்கு கடந்த வாரம் அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

அடிப்படை சுகாதாரத் திருத்தங்களை மேற்கொண்ட மேலும் 6 நிலையங்களுக்கு கடந்த வெள்ளிக்கிழமை அனுமதி வழங்கப்பட்டது.

மேலும் பல நிலையத்தவர்கள் தமது அடிப்படைத் திருத்த வேலைகளை அடுத்த வாரமளவில் பூர்த்தி செய்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அந்த நிலையங்களுக்கும் அடுத்த வார மளவில் அனுமதி வழங்கப்படும். இவற்றில் சில நிலையங்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அந்த நிலையங்கள், தமது திருத்த வேலைகளை பூர்த்தி செய்த பின் நீதிமன்றின் அனுமதியுடன் மீள இயங்குவதற்கு அனுமதி வழங்கப்படும். ஏனைய ஐஸ்கிறீம், ஜூஸ் உற்பத்தி நிலையங்களும் தத்தமது பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு அவர்களின் ஆலோசனைப்படி உடனடியாக செய்ய வேண்டிய அவசர திருத்த வேலைகளை பூர்த்தி செய்தால் அவற்றை மீள இயங்குவதற்கு அனுமதி வழங்கப்படும்-என்றார். (த-4)

## சுகாதார விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயற்றிட்டம்

### துணுக்காய் கல்வி வலயத்தில் முன்னெடுப்பு

முல்லைத்தீவு, நவ.17

துணுக்காய் வலய் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை மாணவர்களிடையே சுகாதார விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் சித்திரம் வரையும் செயற்றிட்டம் முன்னெடுக்கவும் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு நிதியுதவியுடன் துணுக்காய் கல்வி வலயத்தில் உள்ள 18 பாடசாலைகளில் 3 லட்சத்து 78 ஆயிரம் ரூபா செலவில் செயற்றிட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தத் தகவலை துணுக்காய் வலய கல்விப் பணிப்பாளர் திருமதி ட.மாலினி வெனிற்றன் தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும்தெரிவித்துள்ளதாவது:-

"18 பாடசாலைகளில் தலா 21 ஆயிரம் ரூபா வீதம் நிதி செலவிடப்பட்டு செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதன் மூலம் மாணவர்களிடையே சுகாதார விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும்"- என்று தெரிவித்தார்.

அலைகல்லுப் போட்ட அ.த.க. பாடசாலை, மாமடு அ.த.க. பாடசாலை, பழப்பாசி அ.த.க. பாடசாலை, பெரிய இத்திமடு அ.த.க.பாடசாலை , கரிபட்ட முறிப்பு அ.த.க.பாடசாலை, ஒலுமடு அ.த.க.பாடசாலை, கருவேலன்கண்டல் அ.த.க. பாடசாலை, காதலியார் சமளன்குளம் அ.த.க.பாடசாலை, கூழாமுறிப்பு அ.த.க.பாடசாலை, புலுமச்சிநாதகுளம் அ.த.க.பாடசாலை, ஒட்டுசுட்டான் ஆறுமுகம் வித்தியாலயம், ஒட்டுசுட்டான். இ.த.க. வித்தியாலயம் பனிக்கன்குளம் அ.த.க., புளியங்குளம் அ.த.க, ஈஸ்வரன் அ.த.க., திருமுறிகண்டி இ.வித்தியாலயம், முத்து விநாயகபுரம் அ.த.க., சண்முகரெட்ணம் வித்தியாலயம், முத்து ஐயன் கட்டு வ/கரை அ.த.க ஆகிய 18 பாடசாலைகளிலேயே இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-500)

## தியாகங்கள், பணிகளை ஆற்றியோரை நினைவுகூர வேண்டிய தேவையுள்ளது

### கிளிநொச்சி மாவட்ட பல் சமய ஒன்றியத் தலைவர் தெரிவிப்பு

கிளிநொச்சி, நவ.17

"இறந்து போனவர்களின் நினைவுகளை எமது அகத்தினுள் கொண்டுவந்து, அவர்கள் கடந்த காலத்தில் ஆற்றிய பணிகள் நினைவு கூருகின்றோம். வார்த்தைகளால் சொல்லமுடியாத பல தியாகங்களை இறந்தவர்கள் செய்திருக்கின்றார்கள். தியாகங்கள் அல்லது பணிகளை ஆற்றியவர்கள் இறந்துபோயிருக்கின்றார்கள். உயிரிழந்தவர்களை நினைவு கூர வேண்டிய தேவையுள்ளது." - என்று தெரிவித்தார் கிளிநொச்சி மாவட்ட பல் சமய ஒன்றியத் தலைவரும் கிளிநொச்சி அரச செயலகத்தின் திட்டமிடல் பணிப்பாளருமாகிய ச. மோகனபவன்.

கடந்த வெள்ளிக்கிழமை, மலையகத்தில் ஏற்பட்ட மண்சரிவால் உயிரிழந்தவர்களுக்கும், கடந்த காலங்களில் இடம்பெற்ற இடர்களால் உயிரிழந்தவர்களுக்குமான சர்வமதப் பிரார்த்தனை புனித திரேசாள் மறைக்கல்வி நடு நிலையத்தில் நடைபெற்றது. அதில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மோகனபவன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"கிளிநொச்சி மாவட்டத்தில் தற்சமயம் பல்வேறு அரச சார்பற்ற அரச நிறுவனங்களின் உதவியோடு பல சர்வமத குழுக்கள் இயங்கிவருகின்றன. இன்று கிளிநொச்சி பல் சமய சர்வமத குழுவின் ஏற்பாட்டில், கரித்தாஸ் நிறுவனத்தின்உதவியுடன்நினைவுகூரல் நிகழ்வு நடைபெறுகின்றது.

இறந்துபோனவர்களின் நினைவுகளை எமது அகத்தினுள் கொண்டுவந்து இறந்தவர்கள், கடந்த காலத்தில் ஆற்றிய பணிகள் நினைவு கூருகின்றோம். வார்த்தைகளால் சொல்லமுடியாத பல தியாகங்களை இறந்தவர்கள் செய்திருக்கின்றார்கள். தியாகங்கள் அல்லது பணிகளை ஆற்றியவர்கள் இறந்துபோயிருக்கின்றார்கள்.

உயிரிழந்தவர்களை நினைவு கூர வேண்டிய தேவையுள்ளது. எமது அகத்தினுள் இறந்தவர்களை கொண்டுவந்து எமது உணர்வுகளுடன் இறந்தவர்களுடைய உணர்வுகளையும் நினைவுகளையும் உள்வாங்கி நினைவு கூருவது என்பது ஓர் உன்னதமான விடயம்"- என்று அவர் அங்கு மேலும் தெரிவித்தார். (ற-18)

## வவுனியாவில் குறுக்கு வீதிகளின் பெயர்ப்பலகைகள் அழியும் நிலை

வவுனியா, நவ 17

வவுனியாவில் குறுக்கு வீதிகளில் காணப்படும் பெயர்ப் பலகைகளில் ஊரின் பெயர் அழிவடைந்த நிலையில் உள்ளது இதனால் பல்வேறு அசௌகரியங்களை பொதுமக்கள் எதிர்கொண்டு வருகின்றனர். வவுனியாவில் நூற்றுக் கணக்கான குறுக்கு வீதிகள் காணப்படுகின்றன.

இவ்வீதிகளுக்கு பெயர் பொறிக்க வேண்டிய பொறுப்பு பிரதேச சபை, நகர சபை ஆகியவற்றைச் சாரும்.

1979ஆம் ஆண்டுக்குப் பின்னரும் 1990 ஆம் ஆண்டுக்குப் பின்னரும் உருவாகிய பல வீதிகள் உட்பட வவுனியாவில் கண்டிவீதி ஏ-9 வீதி, ஹொரவப்பொத்தான வீதி, மன்னார் வீதி, சிதம்பரபுரம் வீதி, குட்செட் வீதி, நேரியகுளம் வீதி ஆகியவற்றுக்கு குறுக்காகவுள்ள வீதிகள் மற்றும் ஊர்களின் பெயர்கள் குறித்த விளம்பர பலகையில் குறிப்பிடப்படாததால் குறித்த ஊரில் வசிக்கும் மக்களின் வீடுகளுக்கு உறவினர்கள் மற்றும் தூர இடத்திலிருந்து பல்வேறு தேவைகருதி வரும் மக்கள் புதிய தபால்காரர்கள் தடுமாறிக் கொள்வதுடன் குறித்த இடங்களுக்குச் செல்வதற்கு காலதாமதமும் வீண் செலவுகளும் ஏற்படுவதாக மக்கள் மற்றும் பயணிகள் பலரும் விசனம் தெரிவிக்கின்றனர்.



அழிந்து போயுள்ள பெயர்ப்பலகை ஒன்று....

பெயர்ப்பலகைகளில் உள்ள பெயர் மங்குதல், சில பலகைகளில் துண்டுப் பிரசுரங்கள் ஒட்டப்படுதல் பின்னர் அவை அகற்றப்படாமை உள்ளிட்ட பல பிரச்சினைகளை நகர சபையும் பிரதேச சபைகளும் கவனத்தில் எடுக்கத் தவறுகின்றன. இதனால் எமது பண்பாடும் எமது வரலாறுகளும் அழிவடையும் அபாயமும் காலபோக்கில் வேறு பெயர்களில் ஊர் அழைக்கப்படும் அபாயமும் உள்ளது.

எனவே விரைவில் காலத்தின் தேவை, பொதுமக்களின் தேவை கருதி வவுனியா நகர சபை, பிரதேசசபைகள் அக்கறையுடன் பெயர்ப்பலகைகளில் ஊரின் பெயர்கள், வீதிகளின் பெயர்களை குறிப்பிட வேண்டுமென்ற கோரிக்கையை பாதிக்கப்பட்ட மக்கள் முன்வைத்துள்ளனர். (த-402)

## வவுனிக்குளத்தில் 75,000 நன்னீர் மீன் குஞ்சுகள்

வலி.தென்மேற்கு, நவ.17

அம்பாள்புரத்தில் வசிக்கும் நன்னீர் மீனவ குடும்பங்களின் வாழ்வாதாரத்துக்கு உதவும் வகையில் வடக்கு மாகாண போக்குவரத்து மீன்பிடித்துறை அமைச்சு 75 ஆயிரம் நன்னீர் மீன்குஞ்சுகளை வவுனிக்குளத்தில் விட்டுள்ளது. இந்த நிகழ்வு நேற்று நடைபெற்றது.

வடமாகாண போக்குவரத்து மீன்பிடித் துறை அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் மீன்குஞ்சுகளைக் குளத்தில் விட்டார்.

மாந்தை கிழக்கு பிரதேசத்தில் அம்பாள்புரத்தில் 90 மீனவ குடும்பங்கள் நன்னீர் மீன் பிடித்தொழிலில் ஈடுபட்டு வருகின்றன.

வவுனிக்குளத்தில் நன்னீர் மீன்பிடித் தொழில் செய்து வரும் இவர்கள் மீனின் உற்பத்திப் பெருக்கம் குறைந்துள்ளதால் வருமானமின்றி வாழ்க்கை நடத்த முடியாமல் திண்டாடினார்கள்.

அவர்களின் குடும்பநிலை குறித்து அம்பாள்புரம் நன்னீர் மீன்பிடித் தொழிலாளர் சங்கம் வடக்கு மாகாண போக்குவரத்து மீன்பிடி அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரனிடம் தெரிவித்ததைத் தொடர்ந்து வருமானமின்றி பாதிக்கப்பட்ட மீனவர்களின் குடும்பங்களின் வாழ்வாதாரத்துக்கு உதவும் நோக்குடன் 75 ஆயிரம் நன்னீர் மீன் குஞ்சுகளை வவுனிக் குளத்தில் விட்டுள்ளார்.

அம்பாள்புரம் மீனவர் ஓய்வு மண்டபத்தில் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் கே.கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், வட மாகாண போக்குவரத்து மீன்பிடித்துறை அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன், கடற்றொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகள், மீனவ சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ற-115)

## தரமுயர்த்தப்பட்டுள்ளது கனகராயன்குளம் ம.வி.

கனகராயன்குளம் மகா வித்தியாலயம் தற்போது 1 'ஏபி' பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டுள்ளது என்று வடமாகாண கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. இந்தப் பாடசாலை இதுவரை 1'சி' பாடசாலையாக இருந்து வந்தது.

இந்தப் பாடசாலை தரம் 1 முதல் க.பொ.த. உயர்தரத்தில் கலைப்பிரிவுடன் இயங்கி வந்துள்ளது. அதன் பின்னர் 2011 ஆம் ஆண்டு உயர்தரம் வர்த்தகப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டு இந்த ஆண்டு தகவல் தொழில்நுட்பம், கணித. விஞ்ஞானப் பிரிவுகளும் ஆரம்பிப்பதற்கான அனுமதியும் வழங்கப்பட்டு, தற்போது அவை இயங்கி வருகின்றன.

இந்தப் பாடசாலை இசுறு மற்றும் ஆயிரம் பாடசாலை திட்டத்திலும் உள்வாங்கப்பட்டுள்ளதோடு 2010ஆம் ஆண்டுக்குப்பின்னர் இதன் வளர்ச்சியும் துரிதகதியில் வளர்ந்து கொண்டு செல்கிறது. கடந்த ஆண்டு நடைபெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் கலைப் பிரிவிலிருந்து 5 மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகியுள்ளனர். (ற-422)

## மழை பொய்த்ததால் விவசாயிகள் கவலை

முல்லை மாவட்டத்தில் போதிய மழை வீழ்ச்சியின்மையால் விவசாயிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். மழைவீழ்ச்சி இன்மையால் குளங்களின் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்து காணப்படுகின்றது. அதனால் 2014-2015 காலபோக விவசாயச் செய்கைக்கான போதியளவு நீரைப் பெற்றுக்கொள்ள முடியாதிருக்கும் என்று விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (ற-500)

## நீரிழிவு தொடர்பான விழிப்புணர்வுப் பேரணி

மன்னார், நவ.17

கடந்த வெள்ளிக்கிழமை உலக நீரிழிவு தினம் கடைப்பிடிக்கப்பட்டது. அதை முன்னிட்டு மன்னாரில் நீரிழிவு நோய் தொடர்பான விழிப்புணர்வு ஊர்வலம் நடத்தப்பட்டது.

மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் தொற்றா நோய் தடுப்புப் பிரிவின் ஏற்பாட்டில்,தொற்றா நோய் தடுப்பு பிரிவு வைத்திய அதிகாரி வைத்தியர் அன்ரன் சிசில் தலைமையில் குறித்த விழிப்புணர்வு ஊர்வலம் நடத்தப்பட்டது.





மன்னார்-தாழ்வுப்பாடு பிரதான வீதியில் அமைந்துள்ள மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் காலை 8 மணியளவில் குறித்த ஊர்வலம் ஆரம்பமானது. குறித்த ஊர்வலம் வைத்தியசாலை வீதியூடாக சென்று மன்னார் பொலிஸ் நிலைய வீதியை சென்றடைந்து பின் அங்கிருந்து மன்னார் பஸார் பகுதியூடாகச் சென்று மீண்டும் மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையைத் சென்றடைந்தது.


அதில் மன்னார் பொது வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் வி.ஆர்.சி.லெம்பேட், வைத்தியர்கள், பொது சுகாதார பரிசோதகர்கள், வைத்திய மாதுக்கள், தாதியர்கள், பாடசாலை மாணவர்கள் உட்பட பல நூற்றுக்கணக்கானவர்கள் கலந்துகொண்டனர். (ற-56)

# பொதுவேட்பாளராக போட்டியிடத் தயார்

## அர்ஜுன ரணதுங்க கூறுகின்றார்



கொழும்பு, நவ.17
எதிர்க்கட்சிகளின் ஜனாதிபதி பொதுவேட்பாளராகப் போட்டியிட தாம் தயாரென்று இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.
ஏற்கனவே மாதுலுவாவே சோபித தேரரின் பொது வேட்பாளர் நிலைப்பாட்டுக்கு அர்ஜுன ரணதுங்க ஆதரவை வெளியிட்டுள்ளார். இந்த நிலையில் தாம் எப்போதும் நாட்டுக்கு முன்னுரிமை வழங்குவதன் காரணமாக எந்தக் கட்சியும் பொதுமக்களும் விரும்பினால் பொது வேட்பாளராக போட்டியிடத் தயார் என்று அர்ஜுன ரணதுங்க குறிப்பிட்டுள்ளார்.
இந்த நிலைக்கு தகுதியானவன் என்று கருதினால் தாம் அதனை ஏற்றுக்கொள்ளத் தயார் என்றும், தாம் ஒரு போதும் பதவிக்காக பணியாற்றியதில்லை. நாட்டை பாதுகாக்கும் விடயங்களையே முன்னெடுத்தார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
எவரும் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களைக் கொண்டிருந்தாலும் தற்போது நாட்டுக்கு பொதுவான தேவையாக நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பதே காணப்படுகின்றது என்றும் ரணதுங்க தெரிவித்துள்ளார். (ற)



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று அஸ்கிரிய மற்றும் மல்வத்து மகா விகாரைகளுக்குச் சென்றிருந்தார். யாழ்ப்பாணத்துக்கான அதிவேகப் பாதையின் கண்டி வரையான கிளைப் பாதைக்கு அடிக்கல் நடும் வைபவத்துக்காகச் சென்றிருந்த ஜனாதிபதி, தனது பயணத்தின் இடையே மகாநாயக்கர்களைச் சந்தித்தார். இரண்டு மகாநாயக்கர்களுடனும் சிறிது நேரம் அளவளாவிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, சிரேஷ்ட பிரஜைகளுக்கான இலவச சிம் கார்ட் அடங்கிய கைத்தொலைபேசிகள் அடங்கிய பொதியொன்றையும் மகாநாயக்கர்களிடம் கையளித்தார். அறுபது வயதைக் கடந்த பிக்குமாருக்கு குறித்த தொலைபேசிகள் வழங்கப்படுவதற்காகவே அவை மகாநாயக்கர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன. அதன் பின்னர் தலதா மாளிகைக்கும் சென்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அங்கு விசேட வழிபாடுகளிலும் ஈடுபட்டார். (ற)

# தமிழ், முஸ்லிம் தலைவர்கள் ரணிலை ஆதரிக்க வேண்டும்

## விக்கிரமபாகு கருணாரத்ன வேண்டுகோள்



கொழும்பு, நவ.17
தமிழ், முஸ்லிம் தலைவர்கள் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளார் நவசமசமாஜக் கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன.
நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றில் கலந்து கொண்ட அவர், அங்கு இந்த வேண்டுகோளை முன்வைத்துள்ளார்.
"எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மும்முனைப் போட்டி தவிர்க்க முடியாதது. ஜாதிக ஹெல உறுமய மற்றும் ஜே.வி.பி யினர் கூட்டிணைந்து ஒரு வேட்பாளரை தேர்தலில் களமிறக்குவார்கள்.
அதன் மூலம் அரசுக்கு சார்பாகவுள்ள இனவாத அடிப்படையிலான வாக்குகள் பிரிந்து செல்லும் வாய்ப்புக் காணப்படுவதால், எதிர்க்கட்சிகளுக்கு சாதகமான நிலை ஏற்படும்.
இந்நிலையில் தமிழ், முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்க வேண்டும். அவரையே பொது வேட்பாளராக முன்னிறுத்தி, வெற்றி பெறச் செய்வதன் மூலம் இந்த நாட்டில் அதிகாரப் பரவலாக்கலுக்கான வழி பிறக்கும்"- என்று அவர் தெரிவித்துள்ளார். (ற)

# அமைச்சு பதவிகள் தேவை இல்லை

*- நிமால்*

கொழும்பு, நவ.17
அமைச்சுப் பதவிகள் கிடைத்தாலும், கிடைக்காவிட்டாலும், தேர்தலின் பொருட்டு அர்ப்பணிப்புடன் செயற்படுவேன் என்று அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.
பதுளையில் இடம்பெற்ற நிகழ்வொன்றிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.
"அரசில் எவரும் அமைச்சுப் பதவிகளுக்காகச் செயற்படவில்லை. அரசு எம்மைப் பாதுகாக்கிறது. நாங்கள் மக்களுக்காகவே அமைச்சுப் பதவிகளை வகிக்கின்றோம்"- என்று அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளார். (ற)

# இலங்கை முன்னேற்றம்

## அமைச்சர் அமுனுகம சான்றிதழ்

கொழும்பு, நவ.17
அபிவிருத்தியைப் பொறுத்தவரை உலக நாடுகளில் இலங்கை முன்னேற்றமடைந்த நாடாக மாறியுள்ளது என்று தெரிவித்துள்ளார் சிரேஷ்ட அமைச்சரும் பிரதி நிதியமைச்சருமான கலாநிதி சரத் அமுனுகம.
இந்தியப் பொருளாதார மாநாட்டின கீழ் நடைபெற்ற விவாதத்துடன் கூடிய கலந்துரையாடலில் கலந்து கொண்டு பேசும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.
பிறப்பு வீதம், கர்ப்பிணித் தாய்மார் சாவு வீதம், ஆயுட்காலம் போன்றவற்றுடன் ஒப்பிடும்போது இலங்கை உலகில் முன்னேறிய நாடுகளை போன்ற நிலைமையில் உள்ளது என்றும் அவர் அங்கு குறிப்பிட்டுள்ளார்.
'இந்தியா டுடே' சஞ்சிகையின் ஆசிரியர் சபை ஆலோசகர் ஷிகர் குப்தா வழி நடத்திய இந்த விவாத ரீதியான கலந்துரையாடலில் வர்த்தகர்களான சஞ்சிவ் மேத்தா, ஆதி கோத்ரேஜ் பிரபல நடிகை காஜல் தேவ்கன் மற்றும் சரத் அமுனுகம ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (ற)


# பதினைந்தாம், பத்தாம் ஆண்டு நினைவலைகள்



செல்வன்
பாலகிருஷ்ணன் பிரதீபன்
தோற்றம் : 17.04.1981



செல்வன்
சிவநாதன் ரவிசங்கர்
தோற்றம் : 02.02.1981



செல்வன்
சுந்தரலிங்கம் சிவோத்தமன்
தோற்றம் : 23.03.1981



செல்வன்
பூரணமூர்த்தி கந்தர்வன்
தோற்றம் : 11.05.1981



செல்வன்
மரியரட்ணம் குணரட்னம்
தோற்றம் : 04.08.1981

**17.11.1999 : மறைவு** **17.05.2004**

**இந்நாளில் ஹாட்லியின் மைந்தர்கள் ஆகிய நாம் உங்களை பெருமையுடன் நினைவு கூருகின்றோம்**

**இன்று 17.11.2014** திங்கட்கிழமை காலை **8.30** மணிக்கு ஹாட்லிக் கல்லூரியில் நடைபெறும் நினைவு நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் இரத்த தான நிகழ்விலும் அதே தினம் காலை **10.00** மணியளவில் இன்பர்சிட்டி கடற்கரையில் நடைபெறும் நினைவுகூரல் நிகழ்விலும் பெற்றோர் ஆசிரியர், உற்றார், உறவினர், நண்பர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். **"ஹாட்லியின் மைந்தர்கள் நினைவு நிதியம்"** ஏற்பாட்டாளர்கள்.

**மேலதிக விபரங்களுக்கு : அ.டொமினிக் - 0774 666 259 / அ. செந்தில்குமரன் - 0777 480 094**
**சு. கோகுலகுமார் - 0773 122 198** E-mail : hartleyboys@gmail.com

# எமது மக்கள் • எமது வளம் • எமது பெருமை

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## இன்று, புதிய 10 நாணயக் குற்றிகளின் தொடரினை வெளியிடுவதன் மூலம் நாங்கள் 25 மாவட்டங்களின் மக்களையும் கௌரவிக்கின்றோம்.



**இந்தக் குற்றிகள் நாடு முழுவதும் சுற்றோட்டத்திற்கு விடப்படுவதுடன் இவற்றை நாட்டின் எல்லாப் பாகங்களிலும் கொடுப்பனவுகளுக்குப் பயன்படுத்த முடியும்.**

### சேகரிக்கப்படக்கூடிய பொருட்கள்



25 குற்றிகளைக் கொண்ட பொதி
ரூ.2,000/- (பெட்டியுடன்)
ரூ.1,000/- (பையுடன்)



ஒய்வுநேர நூல்
ரூ.4,000/-




தனிபொரு குற்றியைக் கொண்ட அட்டை
ரூ.50/-

### விற்பனைக்குக் கிடைக்கப்பெறும் இடங்கள்

பொருளாதார வரலாற்று அரும்பொருட்காட்சிச்சாலை
இல. 54, சென்றல் பொயின்ற் கட்டடம், சதாம் வீதி, கொழும்பு 1

அநுராதபுரம்
இல. 341, ஸ்ரேஜ் 1, அநுராதபுரம்


மாத்தறை
இல. 35, அநகாரிக தர்மபால மாவத்தை, மாத்தறை

மாத்தளை
இல. 805, திருகோணமலை வீதி, மண்டண்டாவெல, மாத்தளை

யாழ்ப்பாணம்
இல. 105, அரசடி வீதி, யாழ்ப்பாணம்

திருகோணமலை
இல. 103, அஞ்சல் அலுவலக வீதி, திருகோணமலை

*இலங்கையின் தேசப்படம், நிலஅளவை அதிபதி நாயகத்தின் ஒப்புதலுடன் கூடிய இலங்கை நிலஅளவைத் திணைக்களத்தின் தேசப்படத்தினை அடிப்படையாகக் கொண்டது.



# இது எப்படி இருக்கிறது?

விடுமுறையைக் கழிக்க பல கண்டங்களை கடந்து செல்லும் சுற்றுலாப் பயணிகளை மகிழ்விப்பதற்காக பல அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படுவது வழக்கம். இதற்காக சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில், அவர்களின் தலையை கிறுகிறுக்க வைக்கும் கண்ணாடியிலான ஒரு பாலத்தை பிரிட்டன் அரசு அமைத்துள்ளது.

குறித்த பாலம் 120 வருடங்கள் பழமையானதாயினும் அதனை புதுப்பிக்கும் முகமாக அதே பாலத்தில் சிறிய தூரத்துக்கு கண்ணாடி பொருத்தப்பட்டுள்ளது. 36 அடி நீளத்தையும் 6 அடி அகலத்தையும் கொண்டுள்ள நடைபாதையானது, தற்போது மக்களின் பாவனைக்காக் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கிட்டத்தட்ட லண்டனில் உள்ள தோமஸ் நதிக்கும் மேலே 140 அடி உயரத்துக்கு பாலத்தின் உயர்மட்ட நடைபாதை முழுவதும் நீடிக்கும் படியாக இந்தக் கண்ணாடி நடைபாதை அமைக்கப்பட்டுள்ளது. லண்டன் வாழ்க்கையில் எப்போதுமே கண்டிராத இந்தப் பாலமானது 20 வலுவான தொகுதி கண்ணாடிகளையும் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. இந்தப் பாலத்தில் நடப்பவர்கள் கீழே பார்த்தார்களாயின் பறப்பது போன்றதொரு உணர்ச்சி ஏற்படும். இதனுள் பிரவேசிப்பதற்கான கட்டணம் அறவிடப்படும்.



# மோசமான கணவன்

பிரபல விஞ்ஞானி அல்பேர்ட் ஐன்ஸ்டீன் தான் உலகிலேயே மிக மோசமான கணவர் என்று ஒரு கூறியிருந்ததாக புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.


உலகின் மிகப் பெரிய விஞ்ஞானிகளில் ஒருவரான ஐன்ஸ்டீனை பற்றி வோல்டர் ஐக்சன் என்பவர் நூல் ஒன்றை எழுதியுள்ளார். அந்தப் புத்தகத்தில், ஐன்ஸ்டீன் தன்னுடன் பணியாற்றிய விஞ்ஞானி மிலவா மாரிக்கை திருமணம் செய்து கொண்டு வாழ்க்கை நடத்தியதை பற்றி தெரிவித்துள்ளார்.

11 ஆண்டு காலமே நீடித்த இவர்களது திருமண வாழ்க்கையில், ஐன்ஸ்டீனிடம் எந்தவிதமான காதல் அணுகு முறையும் இருந்ததில்லை என்று தெரிவித்துள்ளார். தனது மனைவியை வேலைக்காரி போல நடத்தியதோடு, அன்பையும், பரிவையும் அவரிடம் காட்டியதில்லை என்றும் கூறப்பட்டுள்ளது.

ஐன்ஸ்டீனின் அறையை மனைவி மாரிக் மிகச் சிறப்பாக பராமரித்ததோடு, அவருக்கு மூன்று வேளை உணவை தவறாமல் அவரது அறைக்கே கொண்டு வந்து கொடுத்தார். உடைகளைச் சுத்தமாக துவைத்து தேய்த்துக் கொடுத்து, படுக்கை அறையைச் சுத்தமாக வைத்திருந்தார். ஆனால் பதிலுக்கு மனைவிக்கு எந்த கைமாறையும் ஐன்ஸ்டீன் செய்ததில்லை.

இந்நிலையில் தனது மனைவியிடம், அருகில் வந்து உட்காரக் கூடாது, வெளியில் கூட்டிச் செல்லுமாறு வற்புறுத்தக் கூடாது, தேவையில்லாமல் தன்னுடன் பேசக் கூடாது, வெளியுலக தொடர்புகளை அதிகம் வைத்துக் கொள்ளக்கூடாது போன்ற பல நிபந்தனைகளை போட்டுள்ளார். இதையடுத்து 11 ஆண்டு கால வேதனை வாழ்க்கைக்குப் பின்னர் தனது பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு ஐன்ஸ்டீனை விட்டு அவரது மனைவி பிரிந்து சென்றுவிட்டார்.

# ரிலாக்ஸா வாசியுங்க



இருதய அறுவைச் சிகிச்சை மருத்துவர் தனது காரை எடுத்துக் கொண்டு எப்போதும் செல்லும் அவருடைய மெக்கானிக் நண்பரிடம் சேர்வீஸ் செய்யப் போனார். சேர்வீஸ் முடிந்த பின்னர் அந்த மெக்கானிக் நண்பர் கொஞ்சம் தயங்கிய படியே மருத்துவரிடம் ஏதோ பேச முற்பட்டார். அதை கவனித்த மருத்துவர் அவரிடம் ஏன் தயங்குகிறீர்கள் என்று கேட்டார். அதற்கு மெக்கானிக் நண்பர், 'நான் ஒன்று கேட்பேன். எதையும் த்வறாக் எடுத்துக் கொள்ளக் கூடாது' என்றார். சரி கேளுங்கள் என்று வைத்தியர் சொன்னார்.

அதற்கு மெக்கானிக் நண்பரோ, 'காரோட இதயம் போன்றது என்ஜின். இந்த என்ஜினை நான் சேர்வீஸ் செய்கின்றேன். மனிதனுடைய என்ஜின் போன்றது இதயம். இந்த இதயத்தை நீங்க சேர்வீஸ் செய்கின்றீர்கள். நான் கார் மெக்கானிக்! நீங்க ஹார்ட் (இதயம்) மெக்கானிக்! இரண்டு பேரும் ஒரே வேலையத் தான் செய்கின்றோம். ஆனால் உங்களை மட்டும் வைத்தியர் என்று பெருமையாகச் சொல்லுறாங்கள், ஏன் ?' என்று கேட்டார்.

அதற்கு வைத்தியர், லேசாக சிரித்தபடி, கார் அருகில் சென்று அதனை ஸ்ராார்ட் செய்தார். 'காருக்கு இதயம் போன்றது என்ஜின், ஓடிக்கொண்டிருக்கும் என்ஜினில் நீங்க சேர்வீஸ் செய்யுங்க என்று' மெக்கானிக் நண்பரிடம் சொன்னார். உடனே மெக்கானிக் நண்பர் ஓடிக் கொண்டிருக்கும் என்ஜின்ல எப்படி சேர்வீஸ் செய்வது ? என்று கேட்டார். என்ஜினை நிறுத்துங்க. சேர்வீஸ் செய்கின்றேன் என்று சொன்னார். உடனே வைத்தியர் சொன்னார். 'நீங்கள் வேண்டுமென்றால் என்ஜினைநிறுத்தி விட்டுவேலைபார்க்கலாம்! நான் என்ஜினை நிறுத்தி விட்டால், எனக்கு வேலையே இருக்காது—என்றார்.

# கொஞ்சம் நடிங்க பாஸ்



ஆதித்தியாக நகைச்சுவைத் தொலைக் காட்சியில், எல்லோரையும் கொஞ்சம் நடிங்க பாஸ் என்று தொல்லைப்படுத்திக் கொண்டிருந்த ஆதவன், தற்போது சினிமாவில் கதாநாயகனாக அறிமாகவுள்ளார்.

'ரொம்ப நல்லவன்டா நீ' என்ற முழுநீள நகைச்சுவைத் திரைப்படத்திலேயே கதாநாயகனாக அறிமுகமாகவுள்ளார். அத்தோடு கானா பலாவின் ஒரு பாடலுக்கும் அவர் நடனம் ஆடியுள்ளார். 'பல்லாண்டு வாழ்க' என்ற திரைப்படத்திலும் நகைச்சுவை நடிகராக கலக்குகின்றார்.

இது தொடர்பில் ஆதவன் தெரிவிக்கையில்; என்னோட இருக்கிறவர்கள் எல்லாம் சின்னத் திரையிலிருந்து சினிமாவுக்கு தாவிக் கொண்டிருக்கின்றனர். அதைப் போன்றே, நானும் சினிமாவுக்குள் நுழைந்திருக்கின்றேன்.

முதல்ல நல்ல நகைச்சுவை நடிகனாக நாம் மக்கள் மத்தியில் பெயர் எடுக்க வேண்டும். அதன்பின்னர் கதாநாயகன் என்ற அந்தஸ்து தானாகவே கிடைத்துவிடும்.

நீங்கள் எல்லாம், 'நல்லா நடிங்க பாஸ்' என்று கிண்டலடிக்காத அளவுக்கு நன்றாக நடிப்பேன் என்றார் ஆதவன்.

## பாவம் உடுப்பு வாங்க காசு இல்லை போல... அப்போ வாங்கின உடுப்பு தானா இப்பவும் போடுறாங்க...!!!







# முடிக்குப் பதில் நகம்

அமெரிக்காவில் பெண் ஒருவரின் உடலில் முடிக்கு பதிலாக நகங்கள் முளைப்பது ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்காவில் உள்ள பால்டிமோர் பகுதியைச் சேர்ந்த ஷஜுனைனா இசோம் (வயது-32). கடந்த ஐந்து ஆண்டுகளாக வித்தியாசமான நோயால் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்.

தோலில் முடிகள் முளைக்க வேண்டிய இடங்களில் எல்லாம் நகங்கள் முளைத்துள்ளன. இந்த நோய்க்கான சரியான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. ஆஸ்துமாவுக்காக மருத்துவமனையில் சிகிச்சை பெற்றபோது, அளவுக்கு அதிகமான மருந்துகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அது அலர்ஜிக்காக மாறி, தோலில் கடுமையான அரிப்பை உண்டாக்கியிருக்கிறது. அரிப்பைத் தடுக்க மேலும் சில மருந்துகள் கொடுக்கப்பட்டபோது, நிலைமை இன்னும் மோசமாகி விட்டது. முடிகளுக்குப் பதிலாக நகங்கள் உடல் முழு வதும் முளைத்து விட்டன. கால்கள் இரண்டும் கறுப்பாகி விட்டன. அவரது பார்க்கும் திறன் குறைந்துவிட்டது. எலும்புகள் வலு விழுந்துவிட்டன, உடல் எடையும் வேகமாகக் குறைந்து வருகிறது. மேலும், இவர் மருத்துவச் செலவைக் கவனிக்க முடியாமல் திண்டாடி வருகின்றார்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## முன்னாள் போராளிகளுக்கு அளிக்கப்படும் புனர்வாழ்வு

முன்னாள் போராளி ஒருவர் மன்னாரில் பயங்கரவாத தடுப்புப் பிரிவு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். 20 வருடங்களுக்கு முன் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்த இவருக்கு மனைவியும் 5 பிள்ளைகளும் இருக்கின்றனர் என்று தெரிகின்றது. மன்னார் நீதிமன்றத்தில் உள்ள வழக்கொன்றின் விசாரணைக்குச் சென்றுவிட்டு திரும்புகையில் மன்னார் பனங்கட்டுக்கொட்டு கிராமத்தைச் சேர்ந்த தங்கத்துரை ஜெயின்ஸ் என்பவர் வவுனியாவிலிருந்து சென்ற பயங்கரவாத தடுப்புப் பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டு வவுனியாவுக்கு கொண்டு செல்லப்பட்டார். 1994 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் இயக்கத்தில் சேர்ந்த அவர் அடுத்த ஆண்டே அதாவது ஓராண்டுக்குப் பிறகு அந்த இயக்கத்திலிருந்து விலகி திருமணம் செய்து கொண்டு 5 பிள்ளைகளுக்கும் தந்தையாகி குடும்ப வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்த நிலையில் பயங்கரவாதத் தடுப்பு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டிருக்கிறார் என்பது அவரது மனைவி தெரிவித்திருக்கும் விவரம். அவர் முன்னாள் போராளி என்பதால் அவருக்கு புனர்வாழ்வு அளிக்க வேண்டியிருப்பதாக பொலிஸார் தமக்குத் தொலைபேசியில் அறிவித்தார்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

1994 இல் இருந்து 1995 வரை ஒரு வருட காலமே இயக்கத்திலிருந்து பிரிந்து குடும்ப வாழ்வில் இணைந்தவருக்கு புனர்வாழ்வு அளிக்க வேண்டிய கட்டாயம் உள்ளது என்றால், வருடக்கணக்கில் புலிகள் இயக்கத்திலும் வேறு இயக்கங்களிலும் கட்டளையிடும் அதிகாரிகள் நிலையில் இருந்த பலர் இன்றைய அரசுடன் இணைந்து கொண்டிருக்கிறார்களே அவர்களுக்கெல்லாம் புனர்வாழ்வு அளிக்கப்பட்டதா என்ற கேள்வி எழுகின்றது. இல்லையெனில் இனிமேலாகுதல் புனர்வாழ்வு அளிக்கப்படுவதற்காக கைது செய்யப்படுவார்களா என்றும் கேட்கத் தோன்றுகிறது. அவ்வாறு அரசுடன் இணைந்து கொண்டு பெரிய பதவிகளில் அமர்ந்து சுகபோகம் அனுபவித்துக் கொண்டிருக்கிறவர்களான கருணா அம்மான், சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்), குமரன் பத்மநாதன் மற்றும் டக்ளஸ் தேவானந்தா போன்றவர்களை எந்த ஒருவரும் பட்டென்று சுட்டிக்காட்டுவர். டக்ளஸ் தேவானந்தாவின் ஆயுதக் குழுவொன்று பிற்காலத்திலும் செயற்பட்டமை குறித்து கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவும் தன் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. ஆக ஆயுதம் தூக்கி போர்புரிந்தவர்கள். புனர்வாழ்வு அளிக்கப்படாவிட்டாலும்கூட அரசுடன் இணைந்து கொண்டு அவர்களின் செயற்றிட்டங்களை அவை தமிழ் பேசும் மக்கள் நலன்களுக்கு மாறானவையாக இருந்தாலும் கூட வாயாரப் புகழ்ந்து கொண்டிருந்தால் தப்பிவிடலாம், பதவிகளிலும் அமரலாம். அதனால் வரும் சுகபோகங்களையும் அனுபவிக்கலாம் என்று தோன்றுகின்றது.

புனர்வாழ்வு அளிக்கப்பட்டவர்களும் கூட உயிர் தப்பி வாழ்வதென்பது அவ்வளவு இலகுவான காரியமாகத் தென்படவில்லை. தமிழீழ விடுதலைப் புலிகளின் காவல்துறையில் பணியாற்றியிருந்தவரான கிருஷ்ணசாமி நகுலேஸ்வரன், அண்மையில் துப்பாக்கியால் சுடப்பட்டு கொல்லப்பட்டவரும்கூட அரசினால் புனர்வாழ்வு அளிக்கப்பட்டவர்தான்.

குடும்பஸ்தரான அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தீவிர ஆதரவாளராகவும் பொதுப்பணிகளில் ஈடுபட்டுவந்தவருமாவார் என்று கூறப்படுகின்றது. இந்தக் கொலைக்கான காரணமும் அதனை யார் செய் தார்கள் என்ற உண்மையும் இன்னமும் தெரியவர வில்லை. ஆனால் பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டு சகல இடங்களிலும் இராணுவம் பரவலாக தன் கட்டுப் பாட்டுக்குள் வைத்திருப்பதாகக் கூறப்படும் நிலையில் இந்தக் கொலை எவ்வாறு? எதற்காக நடைபெற்றது என்பது குறித்து அந்தப் பகுதி மக்கள் மத்தியில் பலவாறான சந்தேகங்களையும் மனக்குமுறல்களையும் ஏற்படுத்தியிருக்கிறது.

இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள ஒரு பகுதியில் துப்பாக்கியால் முன்னாள் போராளியும் புனர்வாழ்வு அளிக்கப்பட்டவருமான ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டிருப்பாரானால் மக்கள் அச்சம் கொள்வதும் பல்வேறு சந்தேகங்களை வெளியிடுவதும் தவிர்க்க முடியாத ஒன்று. இந்தச் சம்பவத்தில் பாவிக்கப்பட்டதாகக் கருதப்படும் ரி - 56 துப்பாக்கியொன்றை பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர். இந்தச் சம்பவத்தின் சூத்திரதாரிகள் யார் என்பதை கண்டுபிடிக்க பொலிஸாருக்கு இது உதவியாக இருக்க வேண்டும். இந்தச் சம்பவம் குறித்து பொலிஸார் மேற்கொண்டு எடுக்கின்ற நடவடிக்கைகளும் குற்றவாளிகள் எவராய் இருந்தாலும் தயவு தாட்சண்யம் பாராட்டாமல் அவர்களைக் கைது செய்து நீதியின் முன்னிறுத்துவதும் மக்கள் மனங்களில் உள்ள சந்தேகங்களைக் போக்கும். அந்தப் பகுதியில் ஏற்பட்டுள்ள பதற்றத்தையும் நீக்கும் - என்று கூறத்தேவையில்லை.

# ஜனாதிபதித் தேர்தலில் சிறுபான்மையினரின் பங்கு

சேரலாதன்

ஜனாதிபதித் தேர்தலில் மூன்றாவது தடவையாகவும் தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ போட்டியிடுவது உறுதியாகிவிட்டது. உயர் நீதிமன்றமும் அவருக்குச் சாதகமான சமிக்ஞையைக் காட்டிவிட்டது. இதனால் மஹிந்த மூன்றாவது தடவையாகவும் போட்டியிடுவதற்கு எதிராக எழுப்பப்பட்ட குரல்கள் அடங்கிவிடப் போகின்றன.

தற்போதைய ஜனாதிபதி தொடர்ந்தும் பதவியில் அமர்ந்திருக்க வேண்டியதொரு அவசியமான நிலை உருவாகியுள்ளதால் அதை எய்துவதற்கு அவர் எதனையும் செய்வாரென்பதை எதிர்பார்க்க முடியும். இதைத்தான் நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியால் அண்மையில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு- செலவுத் திட்டத்தில் காண முடிந்தது.

இந்த வரவு- செலவுத் திட்டத்தை ஜனாதிபதி தேர்தலையொட்டி வழங்கப்பட்ட ஒருவகை லஞ்சம் என எதிர்க்கட்சிகள் வர்ணித்த போதிலும் இதன் மூலம் கிடைக்கப் போகும் நன்மைகளை அனுபவிக்கப் போகின்றவர்கள் வாழ்த்தவே செய்வார்கள். இவர்களில் கணிசமானவர்கள் தமது நன்றிக் கடனாக மஹிந்தருக்குத் தமது வாக்குகளைச் செலுத்துவார்கள் என்பதில் ஐயமில்லை.

ஆனால் எதிர்க்கட்சியினர் இன்னமும் ஜனாதிபதித் தேர்தலுக்குத் தயாரானதாகத் தெரியவில்லை. தமக்குள் ஒரு பொது வேட்பாளரைத் தெரிவு செய்ய முடியாத இவர்கள் விரைவில் இடம்பெறப்போகும் இந்தத் தேர்தலில் எவ்வாறு செயற்படப் போகின்றனர் என்பது கேள்விக் குறியாகவே உள்ளது.

எதிர்க்கட்சிகளின் பலவீனத்தை நன்கு புரிந்துகொண்ட மஹிந்தர் அதனைத் தமது வெற்றிக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளப் போகின்றார். இந்த நிலையில் மங்கள சமரவீர ஆளும் கட்சிக்குத் தாவப் போகின்றார் என்றும், அமைச்சர் மைத்திரிபால சிறிசேன எதிரணியின் சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவாரென்றும் வதந்திகள் தாராளமாக உலவுகின்றன.



### அரசியலில் எந்தநேரத்திலும் எதுவும் நடக்கலாம்

இந்த நிலையில் தமிழ், முஸ்லிம் மக்களை அதிகளவில் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் யாருக்கு ஆதரவு என்பது தொடர்பாக இதுவரை அறிவிக்கவில்லை. தற்போது அரசுடன் ஒட்டிக் கொண்டிருக்கும் முஸ்லிம் காங்கிரஸ் அரசுடனான தனது உறவை முறித்துக் கொள்ளுமென நிச்சயமாகக் கூறமுடியாது. ஏனென்றால் தாம் அனுபவித்து வரும் பதவிச் சுகத்தை இழப்பதற்கு அந்தக் கட்சியின் தலைவர்கள் இலேசில் விரும்பமாட்டார்கள். ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் நிலை அவ்வாறில்லை. தாம் சார்ந்த சமூகத்தின் விருப்பத்துக்கு மாறாக அவர்கள் செயற்படுவார்களாயின் அவர்களுக்கு ஆதரவு வழங்கிய மக்களே அவர்களைப் புறக்கணிக்கும் நிலை ஏற்பட்டுவிடும். எதிர்வரும் ஜனாதிபத் தேர்தலைப் பொறுத்த வரையில் பெரும்பான்மை மக்களால் முடிவுகளைத் தீர்மானிக்கும் ஒன்றாக அது அமைந்துவிடப் போவதில்லை. சிறுபான்மை இனங்களைச் சேர்ந்த மக்களே அதன் வெற்றி, தோல்விகளை முடிவு செய்யும் சக்திகளாக மாறப் போகின்றனர்.

இந்த நாட்டின் சிறுபான்மை இன மக்களைப் பார்க்கும்போது அனைவருமே ஏதோ ஒரு வகையில் பாதிக்கப்பட்ட நிலையிலேயே காணப்படுகின்றனர். இதில் அரசுக்கு முண்டு கொடுத்துக் கொண்டிருக்கும் மலையகத்தின் பெரும்பகுதி மக்களும், முஸ்லிம் கட்சிகளைச் சேர்ந்த மக்களும் அடங்குவார்கள். இதில் வேடிக்கையான விடயமொன்றையும் குறிப்பிட்டே தீர வேண்டும். மலையகத்தைச் சேர்ந்த தொழிற்சங்கங்களுடன் இணைந்த அரசியல் கட்சிகள் தமக்கு வேறுபட்டு நின்றாலும் அரசுக்கு ஆதரவு வழங்குவதில் போட்டிபோடுகின்றன. இதற்குப் பிரதியுபகாரமாகக் கிடைத்த அரைகுறை அமைச்சுப் பதவிகளுடன் இவை திருப்தி அடைந்தும் விடுகின்றன. ஆனால் அங்கு வாழும் மக்களின் நிலைதான் தொடர்ந்தும் அவலங்களுக்குள் ஆழ்ந்து கிடக்கின்றது.

அண்மையில் பதுளை மாவட்டம் மீரியப்பெத்தவில் நிகழ்ந்த மண்சரிவு இடர் இவர்களின் அவல வாழ்க்கையை வெளி உலகுக்கு எடுத்துக் காட்டிவிட்டது. அந்தப் பகுதியில் மண்சரிவு அபாயம் ஏற்படுமென ஏற்கனவே எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள போதிலும் அங்கு வாழ்ந்த மக்கள் தொடர்பாக மலையகத்தின் அரசியல்வாதிகள் அக்கறை காட்டியதாகத் தெரியவில்லை. இவர்கள் பொறுப்புணர்வுடன் செயற்பட்டு அந்த மக்களை வேறு இடங்களில் குடியமர்த்தியிருந்தால் தற்போதைய அவலநிலை தவிர்க்கப்பட்டிருக்கும். ஆனால் அந்த அரசியல்வாதிகள் இந்த இடருக்கும் தமக்கும் பொறுப்பொன்றும் இல்லை என்ற வகையில் செயற்பட்டு வருவதுதான் வெறுப்பை ஏற்படுத்துகின்றது. அதைவிடக் கொத்தடிமைகள் போன்று அடக்கி ஒடுக்கி வைக்கப்பட்டிருக்கும் அந்த மக்களை வெளியிடங்களைச் சேர்ந்தவர்கள் சென்று பார்வையிடுவதைக் கூட இந்த அரசியல்வாதிகள் விரும்பாததோடு அங்கு செல்பவர்கள் மீது தவறான கருத்துக்களைக் கூறுவதுடன் பிரதேச வாதத்தையும் கிளப்பிவிடுகின்றனர். இலங்கையின் வட, கிழக்குப் பகுதிகளில் அங்குள்ள மக்களுடன் இரண்டறக் கலந்து வாழும் மலையக மக்களை இவர்கள் மறந்துவிட்டவர்களைப் போன்று நடந்து கொள்கின்றனர். இந்த அரசியல்வாதிகள் தமது மக்களைவிடத் தமது சுகபோகங்களையே குறியாகக் கொண்டிருப்பதால் என்ன தான் நேர்ந்தாலும் ஏதோவொரு ஆளும் தரப்புடன் ஒட்டிக் கொண்டிருக்கவே விரும்புவார்கள். ஆகவே இந்த முறையும் அவர்கள் மஹிந்த ராஜபக்ஷவை ஆதரிக்கப் போகின்றார்கள் என்பதில் ஐயமில்லை.

மற்றுமொரு சிறுபான்மை இனமான முஸ்லிம்களும் ரவூப் ஹக்கீம், அதாவுல்லா, ரிஷாத் பதியுதீன் ஆகியோரின் தலைமையிலான கட்சிகளின் கீழ் பிரிந்து காணப்படுகின்றனர். ஐக்கிய தேசியக் கட்சியிலும் கணிசமான முஸ்லிம் மக்கள் அங்கம் வகிக்கின்றனர். தற்போது மூன்று கட்சிகளாக உடைந்த முஸ்லிம் காங்கிரஸின் ஒட்டுமொத்த ஆதரவு அரசுக்குக் கிடைத்து வருகின்றது. மலையகத்தின் நிலைதான் இங்கும் காணப்படுகின்றது. ஆனால் பெரிய சிறுபான்மை இனமான இலங்கைத் தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு தொடர்ந்தும் எதிரணியாகவே இயங்கி வருகின்றது. ஆளும் தரப்புக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வளைத்துப்போடும் முயற்சிகள் தற்போது முழு அளவில் இடம்பெறுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. கூட்டமைப் பினர் இதற்கு இணக்கம் தெரிவித்தால் மஹிந்த ராஜபக்ஷவின் வெற்றி உறுதியாகிவிடும். ஆனால் தமிழ் மக்கள் இதை அனுமதிப்பார்களா என்பதுதான் கேள்வியாக எழுந்து நிற்கின்றது. இந்த அரசின் செயல்களால் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டவர்கள் தமிழ் மக்கள்தான். அவர்களின் அவலங்கள் இன்னமும் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன. இனப்பிரச்சினைக்கான தீர்வுகளைக் காண்பதிலும் தமிழர்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதிலும் தற்போதைய ஆட்சியாளர்கள் விருப்பமின்றியே செயற்படுகின்றனர்.

மேலும் இறுதிப் போரின்போது அனுபவித்த கொடுமைகளைத் தமிழ் மக்கள் இன்னமும் மறந்துவிடவில்லை. அதன் வடுக்களைச் சுமந்தபடியே தான் அவர்கள் காணப்படுகின்றனர். போர்க்குற்ற விசாரணைகளை இலங்கை நிச்சயமாக எதிர்கொள்ள வேண்டியதொரு நிலை உறுதியாகிவிட்டது. இதனைத் தவிர்ப்பதற்கு மூன்றாவது தடவையும் மஹிந்தர் ஜனாதிபதிப் பொறுப்பை ஏற்றுக் கொள்வது அவசியமாகிவிட்டது. மேலும் வடமாகாண சபையை இந்த அரசு செல்லாக்காசாக்கிவிட்டதையும் கூட்டமைப்பினர் மறந்துவிட முடியாது. ஆகவே தமிழ் மக்களின் ஒட்டுமொத்த நலனையும் கருத்தில் கொண்டு நல்லதொரு முடிவை கூட்டமைப்பினர் தாமதமின்றி வெளியிட வேண்டும். இதில் ஒளிவு மறைவுக்கு இடமேயில்லை.

தமிழ் மக்களின் விருப்பம் தான் கூட்டமைப்பின் விருப்பமாகவும் அமைந்து விடுதல் வேண்டும். இதில் ஒரு சிறிய சறுக்கல் ஏற்பட்டாலும் வரலாறு அவர்களை ஒருபோதுமே மன்னிக்காது.

உலக சகிப்புத் தன்மை தினம் நேற்றாகும். இதனையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.

# சகிப்புத்தன்மையும் சகிக்காத தன்மையும்

பிரகாஸ்

அவன் ஒரு வழிக்கு வரமாட்டான் இதுகள திருத்தேலாது; உது சாத்தியப்படாது; இவ்வாறான வசனங்கள் அனைத்தும் இவற்றில் குறிப்பிடப்படுபவர்களின் குணாதிசயங்களைக் குறிக்கின்றன. அதையும் தாண்டி இந்த வசனங்களைக் கூறும் நபர்களின் சகிப்புத்தன்மையையே பெரிதும் வெளிப்படுத்துகின்றது.

அனைத்தும் இலகுவாக்கப்பட்டுள்ள இந்த உலகில் போக்குவரத்து தொடர்பாடல், உணவுப்பழக்கங்கள், அபிவிருத்தித் தொழில்நுட்பங்கள் என அனைத்தாலும் நாம் முன்னேறிக் கொண்டிருக்கின்றோம். ஆனால் எமது குணாதிசயங்கள், பண்பாடுகள் என்பவற்றை அன்றாடம் தவறவிட்டவர்களாகவே நாம் காணப்படுகின்றோம். அவ்வாறு தவறவிடப்பட்ட குணாதிசயங்களில் ஒன்றாகவும் மிகவும் தேவைப்படும் குணாதிசயங்களில் ஒன்றாகவும் விளங்குவது சகிப்புத்தன்மை.

காலையில் நித்திரையில் இருந்து எழுந்தது முதல் மீண்டும் இரவு நித்திரைக்குப் போகும்வரை குடும்பம், வீதி, நண்பர்கள், அலுவலகம், உறவினர்கள் என நாம் எதிர்கொள்ளும் அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் சகிப்புத்தன்மையே எம்மைக் காப்பாற்றி வழிநடத்துகின்றது. அதே நேரம் சில சமயங்களில் கைவிடவும் செய்கிறது.

குடும்பத்தில் சகிப்புத்தன்மையின் செல்வாக்கு என்ன என்பதனைச் சிந்தித்துப் பார்த்தால் பொதுவாகத் திருமணம் என்பது உடல் மற்றும் உள்ளம் சார்ந்த ஒரு வலுவான அடிப்படைத்தேவையாகும். இந்தத் தேவையுடன் அன்பு, ஆறுதல், நம்பிக்கை மற்றும் சகிப்புத்தன்மை ஆகியன இணைந்ததுதான் மண வாழ்க்கை. இந்த வாழ்வில் கருத்து முரண்பாடுகள் சங்கடநிலைமைகள் நிச்சயம்வரும். இதன்போது பொறுத்துக்கொள்ளவும், சகித்துக்கொள்ளவும், அனுசரித்து நடக்கவும் நிச்சயம் பழகிக்கொள்ள வேண்டும்என்ற உண்மையையும்நடைமுறைச் சாத்தியத்தையும் புரிந்தவர்கள் வாழ்வில் வெற்றி காண்கிறார்கள். புரியாதவர்கள் விவாகரத்து என்ற தீர்ப்பை எதிர்நோக்குகின்றனர். ஒவ்வொரு திருமணத்தின் பின்பும் எதிர்பார்ப்பில் வெவ்வேறுபட்ட காரணங்கள் உள்ளன. ஆனால் ஒவ்வொரு விவாகரத்தின் பின்பும் இருக்கும் ஒரே காரணம் சகிப்புத்தன்மை அற்ற நிலைமையே. இதனைத்தான் தத்துவஞானியான வேதாத்திரி மகரிஷி திருமணம் நிலைத்திருக்க வேண்டுமாயின், விட்டுக்கொடுத்தல், தியாகம், சகிப்பு ஆகிய மூன்று மந்திரங்கள் தேவை என்றார்.

குடும்பத்தின் மற்றுமொரு சிறப்பம்சமான குழந்தைச் செல்வம் விடயத்தில் பெற்றோருக்கு இருக்கும் மிக முக்கிய கடமை சகிப்புத் தன்மையே. குழந்தைகளின் குறும்புத்தனங்களிலும் தோல்விகளிலும் கோபப்படும்படியான செயற்பாடுகளிலும் பெற்றோர் சகிக்கும் தன்மை உடையவர்களாக இருக்கக் கடமைப்பட்டுள்ளனர். இதனைத்தான் கிறிஸ்தவர்களின் புனித நூலான விவிலியம், "பெற்றோரே உங்கள் குழந்தைகளுக்கு எரிச்சல் மூட்டாதீர்கள். அவர்களின் காரியங்களில் நீங்கள் சகிப்புத் தன்மை உடையவர்களாக இருங்கள்" என்று குறிப்பிடுகின்றது.

ஒரு சமூகத்தில் இருக்கும் பாடசாலைகள் மற்றும் கோயில்கள் அமையப் பெற வெவ்வேறுபட்ட காரணங்கள் பல இருக்கும். ஆனால் அதே சமூகத்தில் இருக்கும் நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் அமையப் பெற காரணமாய் இருக்கும் ஒரே விடயம் சகிப்புத் தன்மை அற்ற நிலைமையே.

சமூகத்தில் சகிப்புத்தன்மையின் செல்வாக்கு என்ன என்பதைச் சிந்தித்துப் பார்த்தால், பெரும்பாலும் சாதிகளும் சமயங்களுமே சமூக உறவுகளையும் தனிப்பட்ட விருப்பு மற்றும் வெறுப்புக்களைத் தீர்மானிக்கும் இந்தக் காலத்தில் சகிப்புத் தன்மை என்பது சமூகத்திலும் சாத்தியப்படாததாகவே காணப்படுகின்றது. எமது எண்ணங்களும் கருத்துக்களும் எப்பொழுது நிராகரிக்கப்பட ஆரம்பிக்கிறதோ அப்பொழுது நாம் சகிக்கும் தன்மையை இழந்து மாறாக சலிக்கும் தன்மையைப் பின்பற்றத் தொடங்குகின்றோம். எமக்கு எதிராக அல்லது எம்மை நிராகரித்து மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு கருத்துக்கள் மற்றும் நடவடிக்கைகளின் போதும் எமக்கு எதிரானவர்கள் மீது சலிப்புக் கொள்கிறோம். குரோத உணர்வுகளும், பழிவாங்கும் எண்ணங்களும் எம்மை ஆட்கொள்ள அனுமதிக்கின்றோம். இந்த நிலைமையே எம்மைப் பொய்யர்களாகவும், திருடர்களாகவும், சமூகத்துடன் முரண்பாடு கொண்டவர்களாகவும் இறுதியில் கொலைக்காரர்களாகவும் மாற்றக் காரணமாகின்றது. ஒரு சமூகத்தில் இருக்கும் பாடசாலைகள் மற்றும் கோயில்கள் அமையப்பெற வெவ்வேறுபட்ட காரணங்கள் பல இருக்கும். ஆனால் அதே சமூகத்தில் இருக்கும் நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் அமையப்பெற காரணமாய் இருக்கும் ஒரே விடயம் சகிப்புத்தன்மை அற்ற நிலைமையே.

இற்றைக்குப் பல தசாப்தங்களுக்கு முன்னர் உலக அளவில் முன்னெடுக்கப்பட்ட உலகப் போர்களும், உள்நாட்டு போர்களும் இந்த உலகில் சகிப்புத்தன்மை எந்த மட்டத்தில் இருந்தது; இருக்கின்றது; இருக்கும் என்பதனைப் பறைசாற்றும் உதாரணங்களாகவே அமைகின்றன. இரண்டாம் உலக மகா யுத்தத்தின்போது அரசியல், பொருளாதாரம், ஆயுதம் என அனைத்து விதத்திலும் வல்லரசாகத் திகழ்ந்த ஜப்பானின் ஹிரோசிமா, நாகசாகி நகரங்கள் மீது வீசப்பட்ட அணுகுண்டுகளால் பல லட்சம் மக்கள் உயிரிழந்தனர். இந்தச் செயற்பாடு ஜப்பானின் ஆதிக்கத்தின் மீது சில நாடுகளுக்கிருந்த சகிப்புத்தன்மை அற்ற நிலைமையாகவே வரலாற்றில் பதிவாகியுள்ளது.

இன்றைய காலங்களில் மதம், மொழி, இனம் ஆகியவற்றின் அடிப்படையில் உலகத்திடம் இருந்து பிரிந்து அடாவடித்தனங்களிலும் அடக்குமுறைகளிலும் செயற்பட்டுக் கொண்டிருக்கும் ஐ.எஸ். ஐ.எஸ். மற்றும் போக்கோ ஹராம் போன்ற தீவிரவாத அமைப்புக்கள் சாத்தியப்படாத சலிப்புத்தன்மையின் நிகழ்கால பிரதிநிதிகளாகவே எழுந்து நிற்கின்றன.....

## இது மரநடுகை மாதம்



# ஆரோக்கிய வாழ்வுதரும் கற்பகதரு

ராஜராஜன்

கற்பகதரு என்ற சிறப்புப் பெயருடன் அழைக்கப்படும் பனை மரங்கள் மனிதர்களுக்கு எண்ணற்ற பயன்களைத் தருகின்றன. பனை மரங்கள் இலங்கையின் வறண்ட பிரதேசங்களில் காணப்படுகின்றன. இந்த வகையில் இந்த நாட்டின் வடக்குப் பிரதேசத்தில் இவற்றை அதிகளவில் காணலாம்.

எமது முன்னோர்கள் பனையின் மூலமாகக் கிடைத்த உணவுகளையே அன்று அதிகளவில் உண்டு வந்தனர். பனம் பழத்தைக் கூட அப்படியே உண்ணும் வழக்கமும் அவர்களிடம் காணப்பட்டது. மேலும் நுங்கு, பனாட்டு, கிழங்கு, ஒடியல், புளுக்கொடியல், பனை வெல்லம், பதநீர், பனங்கள்ளு ஆகியனவும் அவர்களின் பயன் பாட்டில் இருந்து வந்துள்ளன. பதநீரைக் காய்ச்சிப் பதப்படுத்தி வைப்பதன் மூலமாகத் தயாரிக்கப்படும் கல்லாக்காரம் மருந்தாகவும் பயன்படுகின்றது. பனங்கள்ளிலிருந்து தற்போது பனஞ்சாராயமும் தயாரிக்கப்பட்டு வருகின்றது. பனங்கள்ளில் குறைவான மதுசாரம் உள்ளதுடன் உயிர்ச் சத்துக்கள் பலவும் அடங்கியிருப்பதாகக் கூறுவார்கள்.

பனம் பொருள்களை உணவாகக் கொண்ட அன்று வாழ்ந்த எமது முன்னோர்கள் நோய் நொடிகள் குறைந்து ஆரோக்கியமான வாழ்வை வாழ்ந்திருக்கின்றனர். பனை மரத்தைப் போன்று உறுதியான உடலமைப்பையும் அவர்கள் கொண்டிருந்தனர்.

இந்த நாட்டின் வடக்குப் பிரதேசங்களில் போர் அரக்கனின் கொடிய கரங்கள் நீண்டதன் பின்னர் பெருமளவு பனைமரங்கள் அழிக்கப்பட்டன. இவை லட்சக் கணக்கில் வெட்டி சாய்க்கப்பட்டதை எண்ணும்போது மனதில் இனம்புரியாதொரு துயரம் எழுகின்றது. மேலும் எறிகணைத் தாக்குதல்களாலும் பெருமளவு பனை மரங்கள் பாதிப்புக்களை எதிர்கொண்டன. போர்க் காலத்தில் எறிகணைகளைத் தம்மீது தாங்கிய பனை மரங்கள் மக்களைப் பாதிப்பிலிருந்து காப்பாற்றிய சம்பவங்கள் ஏராளம் உண்டு. ஆனால் இத்தகைய மரங்கள் தலையிழந்து முண்டங்களாகக் காணப்பட்டதுதான் வேதனைக்குரியது.

பனை ஓலையிலிருந்து ஏராளமான பனைசார் உற்பத்திகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவற்றுக்கு அன்னிய நாடுகளில் பெரும் மதிப்பு உண்டு.

மேலும் இங்குள்ள மக்கள் தமது வீடுகளை அமைப்பதற்குப் பனை மரங்களையே அதிகளவில் பயன்படுத்துகின்றனர். இவை அதிக காலம் பழுதடையாமல் இருக்கும் தன்மையும் கொண்டன.

ஓங்கி உயர்ந்து வளரக்கூடியதன்மையுள்ள பனை மரங்கள் அடர்த்தியாகக் காணப்பட்டாலும், அதனால் பாதிப்பு எதுவும் ஏற்பட்டு விடமாட்டாது. மேலும் மிகக் குறைவான நீர் ஆதாரங்களுடன் வறட்சியைத் தாங்கி வளரும் சிறப்பு இயல்பும் பனை மரங்களுக்கு உரியது.

இத்தகைய பல்வேறு சிறப்பு இயல்புகளைக் கொண்ட பனையைத் தற்போதுள்ள மனிதர்கள் அவ்வளவாகப் பயன்படுத்துவதில்லை என்றே கூறவேண்டும். நாகரிக மோகத்தில் உழலும் மனிதர்கள் நாவுக்குச் சுவைதரும் ஏதோ உணவுகளையெல்லாம் உண்டு நோயைத் தேடிக்கொள்கின்றனர்.

கற்பக தருவான பனை மரங்கள் எப்போதுமே போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டியன. அவற்றின் பயன்கள் முழுவதும் மக்களைச் சென்றடைய வேண்டும். அப்போதுதான் ஆரோக்கியம் நிறைந்த வாழ்வை நாம் எதிர்பார்க்க முடியும்.



# சச்சினின் சுயசரிதை நூல்

பூ.கொ.சரவணன்

*(சென்றவாரத் தொடர்ச்சி...)*




இங்கிலாந்தில் கவுண்டி கிரிக்கெட் ஆடிய பொழுது நேராக இடம் போய் சேர்வதற்காக போக்குவரத்துப் பொலிஸ் வண்டியைப் பின்தொடர்ந்து சென்றிருக்கிறார் சச்சின். அப்பொழுது அவரது வண்டியை நிறுத்திய காவலர் கவுண்டி கிரிக்கெட்டுக்கு ஒப்பந்தமான முதல் அயல் நாட்டு வீரர் என்று தெரிந்ததும் கண்ணியமாக அனுப்பி விட்டார்.

**ராசியான கீரிப்பிள்ளை:**

ஹீரோ கப் போட்டியில் சச்சின் இறுதி ஓவர் வீசி வெற்றியைப் பெற்றுத்தந்தது தெரியும். அந்த போட்டியில் ஒரு கீரிப்பிள்ளை மைதானத்தில் அடிக்கடி எட்டிப்பார்த்ததாம். அ... எட்டிப்பார்க்கும் பொழுதெல்லாம் தென் ஆபிரிக்க அணியில் ஓர் இலக்கு வீழ்த்தப்பட்டது. நவ்ஜோத் சித்துவுக்கு கழுத்து சுளுக்கிக்கொண்டதால் நியூஸிலாந்து அணியுடனான போட்டியில் தானே கேட்டு வாங்கி துவக்க ஆட்டக்காரராக களம் புகுந்து சச்சின் ஆடிய ருத்ரதாண்டவம்.

1994ஆம் ஆண்டில் மேற்கிந்திய அணிகளுடனான ஒருநாள் போட்டித்தொடரி... தொடர்ந்து இரண்டு போட்டிகளில் டக் அவுட்டாக சச்சின் அவ்வளவுதான் என்று பத்தி... கைகளில் எழுத ஆரம்பித்தார்கள். இறுதிப்போட்டியில் அறுபத்தி ஆறு ஓட்டங்கள் எடுத்... அணியின் வெற்றியை உறுதி செய்தவர். அடுத்தடுத்து இரண்டு போட்டிகளில் அ... சதமடித்து மற்றொரு தொடரையும் வெல்லக் காரணமானார்.

1996 ஆம் ஆண்டு உலகக்கோப்பையில் காய்ச்சலுடன் ஆடிய கென்யா அணியுடனா... போட்டியில் எழுபது ஓட்டங்கள் எடுத்து அணியின் வெற்றிக்கு உதவினார். பாகிஸ்தா... அணியுடனான போட்டியில் பாகிஸ்தானின் அமீர் சொஹைல் சிறப்பாக ஆடி வெங்கடே... பிரசாத்தின் பந்தை எல்லைக்கு விளாசிவிட்டு அவரை வசைபாடினார். அதற்கு பதிலடியாக அடுத்த பந்தில் அவர் வெளியேற்றப்பட்டார். மேலும் இரண்டு இலக்குகளை வெங்கி கைப்பற்றினார். இலங்கை அணியுடனான போட்டியில் ஆஸ்தி ரேலியாவி... இருந்து கொண்டுவரப்பட்ட மண்ணைக்கொண்டு இடப்பட்ட ஆடுகளத்தை சரியா... கணிக்காமல் துடுப்பாட முடிவு செய்து இந்திய அணி தோற்று வெளியேறியது. அடுத்... இந்திய அணியின் தலைவர் பொறுப்பு சச்சின் வசம் வந்திருந்தது.

# கறுப்புப் பணத்தை மீட்பதற்கு ஒத்துழைப்புத் தேவை

## ஜி- 20 மாநாட்டில் மோடி வலியுறுத்து

கறுப்புப் பண விவகாரத்தில் பெரிய நாடுகளிடையே கொள்கை ஒருங்கிணைப்புத் தேவை என்று பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

ஆஸ்திரேலியாவின் பிரிஸ்பேன் நகரில் நடைபெற்று வரும் ஜி-20 மாநாட்டில் உரையாற்றிய மோடி, கறுப்பு பணத்தை திரும்பக் கொண்டு வர தகவல் பரிமாற்றமே சிறந்த வழி என்றும்- கூறியுள்ளார். அதிகளவில் கறுப்புப் பணம் பதுக்கப்பட்டுள்ளவர்கள் குறித்த தகவல்களை வெளியிட வேண்டும் என்றும் மோடி வலியுறுத்தியுள்ளார்.

தீவிரவாதம் மற்றும் போதை மருந்து கடத்தலை தடுக்க அனைத்து நாடுகளும் ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும் என்று மோடி கேட்டுக் கொண்டுள்ளார். முன்னதாக மாநாட்டில் பங்கேற்ற தலைவர்களுக்கு ஆஸ்திரேலிய பிரதமர் டோனி அபாட் விருந்தளித்தார். இதில் பேசிய மோடி, பொருளாதார சீர்திருத்தங்கள் மக்களை மையமாகக் கொண்டும், மக்கள் பங்கேற்கும் வகையிலும் செய்யப்பட வேண்டுமே தவிர, இரகசியமாக செய்யப்படக் கூடாது என்று தெரிவித்தார்.

சீர்திருத்தங்கள் எளிமையாக்கப்பட வேண்டும் என்றும், அதற்கு ஏற்ற வகையில், நிர்வாக முறையிலும் சீர்திருத்தம் செய்ய வேண்டியது அவசியம் என்றும் அவர் கூறினார். (வ)



## சதீஷ்கரில் கருத்தடை முகாமில் கொடுத்த மருந்தில் எலி விஷம்

சதீஷ்கரில் நடைபெற்ற குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை முகாமில், பெண்கள் உட் கொண்ட நோய் நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்தில் எலி விஷம் கலந்திருந்ததாக அதிர்ச்சித் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பிலாஸ்பூர் புறநகர் பகுதியான பென்தாரி கிராமத்தில் கடந்த சனிக்கிழமை தேசிய குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தின் கீழ் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை முகாமுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த முகாமுக்கு வந்த 22 வயது முதல் 32 வயது வரையிலான 83 பெண்களுக்கு மருத்துவர்கள் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை மேற்கொண்டனர்.

இந்நிலையில், அறுவை சிகிச்சை செய்து 24 மணி நேரம் கூட கடக்காத நிலையில் இவர்களில் 60 இற்கும் மேற்பட்ட பெண்களுக்கு வாந்தியும், குமட்டலும் ஏற்பட்டுள்ளது. அதையடுத்து, அவர்கள் அனைவரும் சிகிச்சைக்காக பிலாஸ்பூர் நகரில் உள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அங்கு சிகிச்சை பயனின்றி 14 பெண்கள் இறந்ததோடு, 8இற்கும் மேற்பட்ட பெண்கள் மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளனர். (வ)

# பாகிஸ்தானுடன் பேச இடமில்லை

## மத்திய அரசு திட்டவட்டம்

டில்லி, நவ.17



எல்லையில் தாக்குதல் நிறுத்தப்படாவிட்டால், பாகிஸ்தானுடன் பேச்சு கிடையாது என்று மத்திய அரசு மீண்டும் திட்டவட்டமாகக் கூறியிருக்கிறது.

ஜம்மு காஷ்மீர் மாவட்டம் அர்னியாவில், சர்வதேச எல்லையை ஒட்டியுள்ள இந்திய எல்லைப் பாதுகாப்பு நிலைகளை குறிவைத்து பாகிஸ்தான் படையினர் நேற்று முன்தினம் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியதாக, பாதுகாப்புப் படையின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பாகிஸ்தானின் தாக்குதலுக்கு தகுந்த பதிலடி கொடுக்கப்பட்டதாகவும், இதில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்றும் அவர் கூறினார்.

கடந்த 12 ஆம் திகதி பாகிஸ்தான் படையினர், ஜம்முவின் சம்பா பகுதியில் சிறிய வகை ஆயுதங்கள் மூலம் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தினர். கடந்த மாதத்தின் முதல் 15 நாள்களில் பாகிஸ்தானின் அத்துமீறிய தாக்குதல்களில் 11 பேர் கொல்லப்பட்டனர்.

இதனிடையே, எல்லையில் தாக்குதல் நடத்துவதை பாகிஸ்தான் நிறுத்திக் கொள்ளும் வரை, அந்த நாட்டுடன் பேச்சு கிடையாது என்று வெளியுறவுத்துறை இணை அமைச்சரும், முன்னாள் இராணுவத் தளபதியுமான வி.கே. சிங் தெரிவித்துள்ளார்.

இதனை பாகிஸ்தானிடம் ஏற்கனவே மத்திய அரசு தெரிவித்துள்ளதாகவும் வி.கே. சிங் கூறினார். (வ)

## ‘தனுஷ்’ ஏவுகணை வெற்றி

அணு ஆயுதத்தைத் தாங்கிச் சென்று தாக்கும் வல்லமை கொண்ட, உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட தனுஷ் ஏவுகணை, ஒடிஸாவில் கடந்த வெள்ளிக்கிழமை வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டது.

ஒடிஸா மாநிலத்தின் வீலர் தீவில் உள்ள ஒருங்கிணைந்த பரிசோதனை மையத்தில் இருந்து கடந்த வெள்ளிக்கிழமை இரவு 7.40 மணிக்கு, தனுஷ் ஏவுகணையைப் பாதுகாப்புப் படையின் சிறப்பு பிரிவினர் பரிசோதனை செய்தனர்.

இந்த ஏவுகணையின் செயற்பாடுகள் சந்திராபூரில் உள்ள ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டு மையத்தில் இருந்து கண்காணிக்கப்படும் என்று அதன் இயக்குநர் எம்.கே. எம்.வி. பிரசாத் தெரிவித்தார்.

தனுஷ் ஏவுகணை, 500 கிலோ முதல் 1,000 கிலோ எடை வரையுள்ள அணு ஆயுதத்தைத் தாங்கிச் சென்று, நிலத்திலும், நீரிலும் தாக்கும் சக்தி கொண்டதாகும். (வ)



## காஷ்மீர் மக்கள் வாக்களிக்க தீவிரவாதிகள் கடும் எதிர்ப்பு

இந்தியா நடத்தும் தேர்தலில் காஷ்மீர் மக்கள் வாக்களிக்கக் கூடாது என்று ஹிஸ்புல் முஜாகிதீன் தீவிரவாதிகள் மிரட்டல் ஒன்றை விடுத்துள்ளனர். ஜம்மு-காஷ்மீரில் எதிர்வரும் 25 ஆம் திகதி ஆரம்பித்து அடுத்த மாதம் 5 ஆம் திகதி வரை 5 கட்டங்களாக சட்ட சபைத் தேர்தல் நடைபெற உள்ளது. அதையடுத்து இந்தியா நடத்தும் தேர்தலில் காஷ்மீர் மக்கள் வாக்களிக்கக் கூடாது என்று, ஹிஸ்புல் முஜாகிதீன் தீவிரவாத அமைப்பு போஸ்டர்களை ஒட்டி மக்களுக்கு மிரட்டல் விடுத்துள்ளது. இதனால் மக்கள் பீதியில் ஆழ்ந்துள்ளனர்.

தேர்தல் பாதுகாப்புக்கு என்று காஷ்மீர் முழுவதும் 60 ஆயிரம் பொலிஸார் மற்றும் பாதுகாப்புப் படையினர் குவிக்கப்பட்டு உள்ளனர்.

மேலும் 3 பட்டாலியன் பாதுகாப்புப் படை வீரர்கள் குவிக்கப்பட உள்ளனர் என்றும் தகவல் வெளியாகியுள்ளது. (வ)



குழந்தைகள் தின விழாவை முன்னிட்டு, சென்னை வேலம்மாள் பாடசாலையில் கடந்த வெள்ளியன்று 76 ஜோடி இரட்டை மாணவர்கள், ஒரே மேடையில் தோன்றி அசத்தியுள்ளனர். (வ)

## மீண்டும் வாக்கெடுப்புக்கு உத்தரவிடுக

*ஆளுநரிடம் சிவசேனா வலியுறுத்தல்*

மும்பை, நவ.17

மகாராஷ்டிர சட்டசபையில் மீண்டும் வாக்கெடுப்புக்கு உத்தரவிட வேண்டும் என்று ஆளுநரிடம் சிவசேனா வலியுறுத்தி உள்ளது.

இது தொடர்பாக ஆளுநர் வித்யாசாகர் ராவைச் சந்தித்து சிவசேனா சட்டசபை உறுப்பினர் பாரதிய ஜனதா அரசு, மகாராஷ்டிரா சட்டசபையில் பெரும்பான்மை பலத்தை நிரூபிக்கும் வகையில் மீண்டும் வாக்கெடுப்புக்கு உத்தரவிட வேண்டும். மகாராஷ்டிராவை ஆளும் தகுதியை முதல் நாளிலேயே பா.ஜ.க. இழந்துவிட்டது.

குரல் வாக்கெடுப்பின் மூலமாக அல்லாமல், வாக்குகளின் அடிப்படையில் அரசு தனது பெரும்பான்மை பலத்தை நிரூபித்தால் மட்டுமே ஏற்றுக் கொள்வோம் என்று வலியுறுத்தி உள்ளனர் சிவசேனா கட்சியினர். (வ)

# தீவிரவாதத்தைக் கட்டுப்படுத்த இந்தியா- மியன்மார் உறுதி

இந்தியா - மியன்மார் எல்லையில் அதிகரித்து வரும் பயங்கரவாதிகளின் ஊடுருவல்கள், ஆயுதக் கடத்தல் உள்ளிட்டவற்றைக் கட்டுப்படுத்துவதில் இணைந்து செயற்பட இரு தரப்பு அதிகாரிகளும் முடிவெடுத்துள்ளனர்.

இதுதொடர்பாக, இரு நாடுகளைச் சேர்ந்த அதிகாரிகளிடையே மியன்மாரில் நான்யான் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை பேச்சு நடைபெற்றது. இதில் இந்தியா சார்பில் அருணாசலப் பிரதேசத்தின் சங்லாங் மாவட்ட பொலிஸ் துணை ஆணையாளர் சாஞ்சல் யாதவ் தலைமையிலான அதிகாரிகள் பங்கேற்றனர்.

இந்திய-மியன்மார் எல்லையில் பயங்கரவாதக் குழுக்களின் நடவடிக்கைகள், ஆயுதக்கடத்தல், போதைப்பொருள் கடத்தல் ஆகியவை குறித்து உளவுத் தகவல்களை பரிமாறிக் கொள்ள இரு நாட்டு அதிகாரிகளும் ஒப்புக்கொண்டனர்.



எல்லைப் பகுதிகளில் செயற்பட்டு வரும் நாகலாந்து தேசியவாத சோஷலிஸக் குழுக்கள் அதிக பலம் பெற்று வருவதாகவும், உல்ஃபா பயங்கரவாத அமைப்பின் உதவியுடன் அவற்றின் நடவடிக்கைகள் பெருகி வருவதாகவும் மியன்மார் அதிகாரிகளிடம் இந்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

அந்த அமைப்புக்களைக் கட்டுப்படுத்த இரு நாடுகளிடையேயான ஒத்துழைப்பின் அவசியம் குறித்து ஆலோசிக்கப்பட்டது. மியன்மாரிலிருந்து பயங்கரவாதிகள் ஊடுருவலைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அந்தநாட்டு அதிகாரிகள் உறுதியளித்தனர்.

மேலும், இரு நாடுகளிடையேயான பாதுகாப்பு உள்ளிட்ட விவகாரங்களில் ஏற்படும் தொய்வைத் தடுக்கும் வகையில் வீதிப் போக்குவரத்தை சீர்செய்ய வேண்டும் என்றும் அவர்கள் கேட்டுக் கொண்டனர். (வ)

# வட கொரியாவில் தொடரும் மனித உரிமை மீறல் குற்றங்கள்

## ஆதாரங்கள் இருப்பதாக ஐ.நா. தெரிவிப்பு

நியூயோர்க், நவ.17
வடகொரியா தொடர்ந்து மனித உரிமை மீறல் குற்றத்தில் ஈடுபட்டு வருவதாக சர்வதேச அளவில் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.
தற்போது சமகால உலகில், மனித உரிமை மீறலில் பிற எந்தவொரு நாட்டுடனும் ஒப்பிட முடியாத அளவுக்கு அங்கு மனித உரிமைகள் மீறப்படுவதாகக் கூறப்படுகிறது.
அந்த நாட்டின் அரசியல் சட்டத்தில் மனித உரிமைகளுக்கு வகை செய்யும் சட்டப்பிரிவுகள் இருந்தாலும் கூட, அவை ஏட்டளவில்தான் உள்ளன. அங்கு பேச்சுரிமை கூட கிடையாது. தகவல் தொடர்பு என்றால் அரசின் வானொலி, தொலைக் காட்சி தான். வடகொரியாவின் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஐ.நா. விசாரணை நடத்தியது. அதன் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
வடகொரியாவின் பாதுகாப்புப் படை தலைவர்கள், ஆட்சியாளர் கிம் ஜாங் உன் உள்ளிட்டவர்கள் சித்திரவதை, பட்டினி, கொலை செய்தல் போன்றவற்றைத் தூண்டிய குற்றச்சாட்டுகளின் பேரில் விசாரணையை எதிர்கொள்ள வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.
மேலும், நாட்டில் ஒரே ஒரு மனிதரின் கைகளில் அதிகாரம் குவிந்திருப்பதன் காரணமாகத்தான் இத்தகைய மனித உரிமை மீறல்கள் நடைபெறுகின்றன என்று சந்தேகத்துக்கு இடமின்றி சுட்டிக்காட்ட முடியும். எனவே வடகொரியாவில் நடைபெற்று வரும் மனித உரிமை மீறல்களுக்கு அந்த நாட்டின் தலைவர் கிம் ஜாங் உன்னை நேரடியாக குற்றம் சாட்ட முடியும் என்று கூறப்பட்டுள்ளது.
இது தொடர்பாக ஐ.நா. விசாரணையாளர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், "வடகொரியாவில் நடைபெற்று வரும் மனித உரிமை மீறல்கள், சித்திரவதைகளுக்கு அந்த நாட்டின் தலைவர் கிம் ஜாங் உன்னுக்கு எதிராக போதுமான ஆதாரங்கள் உள்ளன" என்றார். இந்தநிலையில் ஐ.நா. அறிக்கையை வட கொரியா நிராகரித்துள்ளது. வட கொரியாவின் அரசியல் அமைப்பை சீர்குலைக்கும் வகையில் அமெரிக்கா மேற்கொண்ட சதி இது என்று அது கூறி உள்ளது. இருப்பினும் அந்த வரைவுத் தீர்மானம் ஐ.நா. பொதுச் சபையில் மனித உரிமைகள் பற்றி கவனிக்கும் குழுவின் முன் அடுத்த வாரம் வைக்கப்படும். அந்தக் குழு, தீர்மானத்தை அனுமதித்து விட்டால், பொதுச்சபையில் அடுத்த மாதம் வாக்கெடுப்புக்கு விடப்படும்.
ஐ.நா. பாதுகாப்புச்சபை தான் வடகொரியா மீதான வழக்கை சர்வதேச கிரிமினல் நீதிமன்ற விசாரணைக்கு அனுப்பி வைக்க முடியும். ஆனால் வடகொரியாவுடன் நட்புறவு வைத்துள்ள சீனா, இதற்கு எதிராக தனது வீற்றோ அதிகாரத்தை (மறுப்புரிமை) பயன்படுத்தக்கூடும் என்று தகவல்கள் கூறுகின்றன. (வ)

### ஐ. எஸ். பணம் திருடிய ஜிகாதி தலைதுண்டித்து படுகொலை

ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்தில் பணத்தை திருடிய மூத்த ஜிகாதி தலை துண்டித்து கொலை செய்யப்பட்டுள்ளதாகச் சிரியா மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.
சிரியாவைச் சேர்ந்த, ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்தின் மூத்த ஜிகாதி இஸ்லாமியர்களிடம் இருந்து பணம் பெற்றுள்ளான் என்றும் ஐ.எஸ். தீவிரவாத அமைப்பின் பணத்தை கையாடல் செய்துள்ளான் என்றும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.
அதையடுத்து டீர் எசார் மாகாணத்தில் தலை துண்டித்து கொலை செய்யப்பட்டு அவனது உடல் தொங்க விடப்பட்டுள்ளது என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.
மேலும், தீவிரவாத குழு தண்டிக்கப்பட்ட ஜிகாதியின் ஒளிப்படத்தை வெளியிட்டுள்ளது என்றும், அவனுடைய பெயர் ஜலாய்பீப் அபு முன்தார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

### உலகின் பசுமைக்காக ஒபாமா 3 பில்லியன் டொலர் நிதி உதவி

பிரிஸ்பன், நவ.17
பூமி வெப்பமயமாதலால் குறைந்து வரும் பசுமைச் சூழல்களை அதிகரித்திட அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா 3 பில்லியன் டொலர்களை பசுமைக் காலநிலை நிதியத்துக்கு வழங்குவதாக அறிவித்துள்ளார்.
இதுதொடர்பாக ஆஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் ஜி 20 மாநாட்டில் பங்கேற்று பேசிய அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, "வளரும் நாடுகளில் மேற்கொள்ளப்படும் பசுமை நிதியத்தின் செயற்பாடுகளை அதிகரிக்க அமெரிக்காவின் பங்களிப்பாக 3 பில்லியன் டொலர்கள் வழங்கப்படும். இது உலக பசுமைக் காலநிலையை அதிகரிக்க அமெரிக்கா எடுத்துவைக்கும் முக்கியமான அடி என்று கூறினார்.
இந்த நிதியத்துக்கு மற்ற நாடுகள் நிதி வழங்க எதிர்வரும் 20 ஆம் திகதி இறுதி நாளாக அறிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (வ)



ஆஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் ஜி-20 கூட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னர் நேற்று முன்தினம் சனிக்கிழமை அந்தநாட்டுப் பிரதமர் டோனி அபோட் மற்றும் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவைச் சந்தித்தபோது ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த சிறிய விலங்கு ஒன்றை அணைத்து தழுவியபோது.... (வ)

### வானில் திடீரென தோன்றி மறைந்த மர்மப்பொருள்

பிரிட்டனில் பெண்மணி ஒருவர், வானத்தில் அடையாளம் காண முடியாத பறக்கும் பொருள் ஒன்றை தனது கமராவில் படம் பிடித்துள்ளார்.
பிரிட்டனின் லிவர்பூல் நகரைச் சேர்ந்த கிடேயர் (வயது 28) என்ற பெண்மணி தனது கணவருடன் வெளியில் நின்று கொண்டிருந்தபோது வானத்தில் நீல நிறமாக பறக்கும் பொருள் ஒன்றை கண்டுள்ளனர். இதனை அந்த பெண்மணி தனது கமராவில் பதிவு செய்துள்ளார்.
இதுகுறித்து அவர் கூறுகையில், நான் எனது கணவருடன் நின்று கொண்டிருந்த போது வானத்தில் நீல நிற பொருள் ஒன்று தெரிந்தது. பின்னர் சிவப்பு நிறமாக மாறி மறைந்த அந்த பொருள், பின்னர் 10 நிமிடங்கள் கழித்து மீண்டும் தோன்றியதாக கூறியுள்ளார்.
மேலும் இது விமானம் இல்லை என்று தான் உறுதியதாக நம்புகிறேன் என்றும் இதற்கு முன்பு நான் இதுபோல் எதையும் பார்த்ததில்லை என்றும் தெரிவித்துள்ளார். இந்த மர்ம பொருளை பற்றி டுவிட்டர் வலைத்தளத்தில் ஏராளமானோர் பகிர்ந்துள்ளனர். (வ)


### அதிபயங்கர தீவிரவாதி சமந்தா சுட்டுக்கொலை

உலகின் அதிபயங்கர பெண் தீவிரவாதி, உக்ரைன் நாட்டில் சுட்டுக்கொல்லப்பட்டு விட்டதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. உலகின் அதிபயங்கர பெண் தீவிரவாதியான 'ஒயிட் விடோ' என்ற சமந்தா லெவ்த்வெயிட் 2 வாரங்களுக்கு முன் உக்ரைன் சென்று அங்கு அரசுக்கு ஆதரவான படையில் சேர்ந்து, குறி பார்த்து சுடும் வீராங்கனையாக செயற்பட்டு வந்ததாகக் கூறப்படுகிறது. அப்போது நடைபெற்ற சண்டையில், அவரை குறி பார்த்து சுடுவதில் வல்லவரான ரஷ்ய வீரர் ஒருவர் சுட்டுக்கொன்று விட்டதாக இப்போது ஊடகத் தகவல்கள் கூறுகின்றன.
இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து, சமந்தாவை சுட்டுக்கொன்ற ரஷ்ய வீரரின் தலைக்கு 6 லட்சத்து 30 ஆயிரம் அமெரிக்க டொலர் (ரூ.3 கோடியே 78 லட்சம்) பரிசாக வழங்கப்படும் என்று உக்ரைன் சிறப்பு பணிகள் பிரிவு அறிவித்துள்ளது. (வ)




### உலக நாடுகள் ரஷ்யா மீது கடும் குற்றச்சாட்டுக்கள்

ஆஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் ஜி.20 மாநாட்டில் ரஷ்யாவுக்கு எதிராக கடுமையான குற்றச் சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டுள்ளன.
உக்ரைன் விவகாரத்தில் ரஷ்யாவின் தலையீடு தொடர்பில் அமெரிக்கா, பிரிட்டன், கனடா உள்ளிட்ட மேற்கத்தேய நாடுகள் ரஷ்யாவுக்கு எதிர்ப்பை வெளியிட்டன.
ரஷ்யா உக்ரைனில் இருந்து வெளியேற வேண்டும் என்று, கனடாவின் பிரதமர் ஸ்டீபன் ஹாப்பர் தெரிவித்திருந்தார்.
'ரஷ்யாவின் செயற்பாட்டில் மாற்றம் ஏற்படாவிட்டால், மேலும் பல பொருளாதாரத் தடைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும் என்று பிரிட்டனின் பிரதமர் டேவிட் கமரூன் எச்சரித் துள்ளார். உக்ரைனில் ரஷ்யா முன்னெடுக்கும் செயற்பாடுகளுக்கு, உலகத்துக்கே அச்சுறுத்தலாக அமைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.
இதேவேளை உக்ரைன் வளர்ச்சிக்கு ரஷ்யா பாடுபடுவதாகப் பிரதமர் விளாடிமிர் புடின் தெரிவித் துள்ளார். ரஷ்யாவின்



வங்கிகட்டமைப்பை சீர் குலைக்க அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் முயன்று வருவதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார். (வ)

### ஐ.எஸ். தீவிரவாத அமைப்பு வெளியிடவுள்ள நாணயங்கள்

சிரியா மற்றும் ஈராக்கில் ஐ.எஸ். வசமுள்ள பகுதிகளில் சொந்தமாக நாணயங்களை வெளியிட உள்ளதாக ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பு தெரிவித்துள்ளது.
சிரியா, ஈராக்கில் ஆதிக்கம் செலுத்தி வருகிற ஐ.எஸ். தீவிரவாதிகள் முக்கிய நகரங்களை பிடித்து வைத்திருக்கின்றனர்.
இந்தநிலையில் ஐ.எஸ். வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில், சிரியாவிலும், ஈராக்கிலும் ஐ.எஸ். வசமுள்ள பகுதிகளில் புழக்கத்தில் விட சொந்த மாக நாணயங்கள் வெளியிடப்படவுள்ளன.
நவீன நாணயங்களைப்போல் சாதாரண உலோகத்தில் அல்லாமல், தங்கம், வெள்ளி, செம்பு ஆகியவற்றில் இந்த நாணயங்கள் அச்சிடப்படும் எனறு தெரிவிக்கப்பட்டுள்ளது.
தற்போது அங்கு பரவலாகப் பயன்படுத்தப்படும் அமெரிக்க டொலருக்கு மாற்றாக



வும், வட்டி லாபம் ஈட்டும், சாத்தான்களுக்குரிய பொருளாதார அமைப்பின் பிடியிலிருந்து முஸ்லிம்களை விடுவிக்கவும் இந்த நாணயங்கள் வெளியிடப்புடுவதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ)

### ஒசாமா உருவப் பொம்மைகளை இணையத்தில் ஏலம்விட முடிவு

வொஷிங்டன், நவ.17
ஒசாமா பின்லேடனின் 3 விகார பொம்மைகளை அமெரிக்காவின் உளவு நிறுவனம் சிஐஏ இணையத்தில் எதிர்வரும் 20 ஆம் திகதி ஏலம் விடுகிறது. இதற்கான ஏலத் தொகையை இணையம் அதிகரித்து வருகிறது.
அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் இரட்டை கோபுரங்களை விமானம் மூலம் தகர்த்து, உலகையே நடுநடுங்கச் செய்தவர் அல்குவைதா தீவிரவாத இயக்கத் தலைவர் ஒசாமா பின்லேடன். பின்னர் ஒசாமா பின்லேடன் பாகிஸ்தானில் பதுங்கியிருந்தபோது, அமெரிக்க உளவு படையினர் சுற்றி வளைத்து சுட்டுக் கொன்றனர்.
இதற்கிடையில் 2005 ஆம் ஆண்டு ஒசாமாவின் விகார பொம்மைகளை ஜிஜோ பொம்மை நிறுவனம் தயாரித்து விற்பனை செய்தது. 30 செ.மீ. நீளமும், இரத்த சிவப்பும் கறுப்பும் நிறைந்த முகமும், பச்சைநிற கண்களையும் உடைய இந்த பொம்மைகள் பின்னர் பாகிஸ்தானில் கராச்சி நகருக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டன.
ஒசாமா பின்லேடன் பிடிபட்டால் எப்படியெல்லாம் சித்திரவதை செய்யப்பட வேண்டும் என்பதை எடுத்துக்காட்ட, அந்தப் பொம்மைகளை சிஐஏ உளவு நிறுவனமும் பயன்படுத்தியதாகக் கூறப்படுகிறது.
இந்தநிலையில், அமெரிக்காவில் ஒசாமாவின் விகார பொம்மைகள் தயாரிப்புக்கு தடை விதிக்கப்பட்டது. ஒசாமா பொம்மைகள் அழிக்கப்பட்டன. இந்நிலையில் சிஐஏ வசம் இருந்த ஒசாமாவின் 3 விகார பொம்மைகள் எதிர்வரும் 20 ஆம் திகதி இணையம் மூலம் நேட் டி சான்டர்ஸ் ஏல நிறுவனம் ஏலம் விடுகிறது. இதற்கு ரூ.1.50 லட்சம் குறைந்தபட்ச கேட்பு தொகையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
கடந்த சில நாள்களாக ஏராளமானவர்கள் இணையம் மூலம் ஏலத் தொகை வருவதாக வாஷிங்டன் போஸ்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டு உள்ளது. (வ)



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**: உங்களுக்கு வரவேண்டிய பண மிகுதிகள் வந்து சேரும். நீண்ட நாள்களாக இருந்த கடமைகளை நிறைவேற்றிக் கொள்ள சந்தர்ப்பங்களை உருவாக்கிக் கொள்வீர்கள். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் ஏற்படும்.



**இடபம்**: சுபகாரிய விடயமாக வெளியூர் செல்ல நேரிடலாம். குடும்பத்தில் நிலவிய கருத்து வேறுபாடுகள் முடிவுக்கு வரும். வீடு மாற்றிக் கொள்ள விரும்புபவர்கள் மாற்றிக் கொள்ளத்தக்க தருணம் வந்து சேரும்.



**மிதுனம்**: உங்களுக்கு சம்பந்தமில்லாத பிரச்சினைகளில் தலையிடுவதும் கருத்துச் சொல்வதையும் தவிர்த்தல் நலம். முன் எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும். குடும்பத்தில் சிற்சில சண்டைகள் வரலாம்.



**கடகம்**: செலவுகளைத் திட்டமிட்டு செய்வது நல்லது. புதிய காரியங்களைச் செய்யத் தொடங்குவதற்கு முன் நல்ல நேரம் காலம் பார்த்து செய்வது நல்லது. வேலையில் இருந்த பளு ஓரளவு குறையும். அதில் இருந்து வந்த தாமத நிலையும் மாறும்.



**சிங்கம்**: வெளிநாட்டு வேலை எதிர்பார்த்து காத்திருப்பவர்களுக்கு நல்ல செய்தி வந்து சேரும். வியாபாரிகளுக்கு நீண்டநாள்களாக இருந்து வந்த கடன்கள் தீரும். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படுவீர்கள்.



**கன்னி**: புதிய இட ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். வியாபாரிகளுக்கு நல்ல இலாபம் கிடைக்கும். பொதுவான விடயங்களில் தலையிடுவோருக்கு உங்கள் கருத்துக்களை மற்றவர்கள் ஆமோதிப்பார்கள்.



**துலாம்**: பணத்தேவைகள் பூர்த்தியாகும். அயலாரின் ஆதரவு கிடைக்கும். குறுகிய பயணங்கள் அதிகரிக்கும். கலைத்துறையினருக்குச் சாதகமான முன்னேற்றம் ஏற்படப்போவது உறுதி. உறவினருடன் வீண் வாதங்களில் ஈடுபடவேண்டாம்.



**விருச்சிகம்**: நல்ல அறிமுகம் கிடைக்கப் பெற்று முன்னேற்றம் உண்டு. மாணவர்களுக்கு கேளிக்கையில் நாட்டம் அதிகரிக்கும். பெற்றோர்கள் பிள்ளைகளின் மீது தனிக்கவனம் செலுத்துவது நல்லது.



**தனுசு** :வெற்றிகளைக் குவித்து வாழ்வில் வசந்தம் வீசப் போகும் நாளிது. குடும்பத்தை சாராத ஒருவரால் தொழிலில் சிரமம் ஏற்பட்டு பின் மறையும். பதற்றத்தைத் தவிர்த்து நிதானத்தைக் கடைப் பிடியுங்கள்.



**மகரம்**: சிற்சில விரயங்கள் ஏற்பட்டாலும் அவை யாவுமே சுபச்செலவுகள் தான் என்பதை உணருங்கள். எனினும் பணவரவு திருப்திகரமாக இருக்கும். உங்கள் தன்னம்பிக்கை, திறமை திறன் அதிகரிக்கும்.



**கும்பம்**: நுண்கலை, கட்டடக்கலை சார்ந்த தொழில் செய்பவர்களுக்கு நன்மை கிடைக்கும். உடலைப் பற்றி தவறான எண்ணங்கள் தோன்றி மறையும். குடும்பத்தில் நல்ல சந்தோஷ தருணங்கள் ஏற்படும்.



**மீனம்**: விலகி நின்ற உறவுகளும் உரிய நேரத்தில் கை கொடுப்பார்கள். பிள்ளைகள் உயர்கல்விக்கான ஒழுங்குகளை ஆரம்பிப்பது நல்லது. குடும்பத்தில் இருந்த மனக்கசப்புகள் நீங்கி உற்சாகம் பிறக்கும்.

## நாளை

**கார்த்திகை-02 செவ்வாய்க்கிழமை | 18.11.2014**

திதி: ஏகாதசி
பி.ப.04.16 வரை
நட்சத்திரம்: உத்தரம்
மு.ப.9.12 வரை

சுபநேரம்:10.38-12.08 வரை
இராகுகாலம்:03.08-04.38 வரை
**ஏகாதசி விரதம்**

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## யாத்திரிகன் போன்று உலகத்தில் வேலை செய்

பற்றற்றிரு; செயல்கள் நடைபெறட்டும். மூளை மையங்கள் செயற்படட்டும். இடைவிடாமல் செயலில் ஈடுபடு. ஆனால் ஓர் அலை கூட மனத்தை வெல்ல அனுமதிக்காதே. அன்னியன்போல், ஒரு யாத்திரிகன்போல் இந்த உலகத்தில் வேலை செய். இடைவிடாமல் வேலை செய். ஆனால் உன்னைப் பந்தப்படுத்திக் கொள்ளாதே. பந்தம் என்பது பயங்கரமானது. இந்த உலகம் எமது நிலையான இருப்பிடம் அல்ல. நாம் கடந்து செல்கின்ற பல தளங்களுள் இதுவும் ஒன்று, அவ்வளவுதான். இயற்கை அனைத்தும் ஆன்மாவுக்கே தவிர, ஆன்மா இயற்கைக்காக அல்ல என்னும் மகத்தான கூற்றை நினைவில் கொள். இயற்கை இருப்பதன் ஒரே காரணம் ஆன்மா பண்படுவது மட்டுமே. இயற்கையின் இருப்புக்கு வேறு எந்தப் பொருளும் இல்லை. ஆன்மா ஞானம் பெறவேண்டும், அதன் மூலமாக முக்தி பெற வேண்டும். அதற்காகவே இயற்கை இருக்கிறது. இது எப்போதும் எமது நினைவில் இருக்குமானால், நாம் எம்மை இயற்கையுடன் பிணைத்துக் கொள்ள மாட்டோம். இந்த உலகம் நாம் படிப்பதற்கான புத்தகம். வேண்டிய ஞானத்தை நாம் பெற்றுக் கொண்ட பிறகு, அந்தப் புத்தகத்தால் எமக்கு எந்தப் பயனும் இல்லை என்பதை அறிந்துகொள்வோம். எப்படியோ, இந்த உலகம் தான் நாம் என்றே, நாம் எண்ணுகிறோம். உலகுக்காகத்தான் ஆன்மா, உடலுக்காகத்தான் உயிர் என்று எண்ணத் தலைப்படுகிறோம். பொதுவாகச் சொல்வார்களே, அது போல் மனிதன் உண்பதற்காகவே வாழ்கிறான், வாழ்வதற்காக உண்பதில்லை என்றே நாம் நினைக்கிறோம். இந்தத் தவறையே தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறோம். உலகத்தையே நாம் என்று கருதி, அதில் பற்றுக் கொள்கிறோம். இந்தப் பற்று மனத்தில் ஆழ்ந்த பதிவை உண்டாக்குகிறது. இது எம்மைக் கட்டுப்படுத்தி சுதந்திரமாகச் செயல் புரிய விடாமல் அடிமைகள் போல் வேலை செய்ய வைக்கிறது. ஆகவே ஒவ்வொருவரும் ஓர் எஜமானனைப் போல் வேலை செய்ய வேண்டும்.

CMK

# பாலைவனத்தில் பூக்கள் பூக்குமா? இதோ வியக்க வைக்கும் அதிசயம்



பாலைவனம் என்றாலே கண்ணுக்கு எட்டிய தூரம் எங்கும் வறண்ட நிலம் மட்டுமே தான் இருக்கும் என்று நினைக்கும் வேளையில், பல வகையான வண்ண மலர்கள் இந்தப் பாலைவனத்தில் ஆண்டின் குறிப்பிட்ட நேரத்தில் பூத்துக் குலுங்குகின்றன.

சிலி நாட்டில் உள்ள அடாகாமா என்ற பாலைவனத்தில் வருடத்தில் செப்ரெம்பர் முதல் நவம்பர் மாதம் மட்டும் 200 இற்கும் மேற்பட்ட வகையான வண்ண மலர்கள் அதிகளவில் பூத்துக் குலுங்குகின்றன.

சிலியில் உள்ள இந்த பாலைவனத்தில் ஆண்டுதோறும் செப்ரெம்பர் தொடக்கம் நவம்பர் மாதம் பெய்யும் அதிகபட்ச கனமழையால் ஏற்கனவே கடந்த பருவத்தில் பூக்கவும், காய்க்கவும் தயாராக இருந்த விதைகள் மற்றும் மொட்டுக்கள் நன்கு வளர்ந்து பூக்கத் தொடங்குகின்றன.

எல் நினோ என்று அழைக்கப்படும் இயற்கை நிகழ்வால் நடக்கும் இந்த அதிசயக் காட்சியைக் காண பல சுற்றுலாவாசிகளும் வரத் தொடங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மழையின் அளவை பொருத்தே மலரும் பூக்களின் அளவு இருக்கும் என்று தெரிகிறது. சில சமயங்களில் மட்டுமே அளவுக்கு அதிகமாக மழைப் பொழிவு இருக்கும்.

இவ்வாறு அளவுக்கு அதிகமான மழைப் பொழிவு இருக்கும் போதுதான் அதிகளவிலான மலர்கள் பூக்கத் தொடங்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், வறண்ட நிலமான பாலைவனத்தில் காணும் திசையெங்கும் அழகான பூக்கள் பூத்துக் குலுங்குவதற்கு இயற்கையின் இரகசியம் மட்டுமே முக்கிய காரணம் ஆகும். (வ)

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 5 | 4 | 9 | | | 6 | 1 | |
| 7 | | | | 4 | | | | |
| | 1 | 3 | | 2 | 7 | | 9 | |
| 5 | 6 | | | | | 2 | | |
| 8 | 4 | | 2 | | 5 | | 3 | 6 |
| | | 2 | | | | | 4 | 1 |
| | 2 | | 3 | 5 | | 4 | 6 | |
| | | | | 6 | | | | 2 |
| | 8 | 6 | | | 2 | 7 | 5 | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 6 | 2 | 9 | 4 | 1 | 7 | 8 | 5 |
| 5 | 8 | 9 | 3 | 6 | 7 | 2 | 4 | 1 |
| 4 | 7 | 1 | 5 | 2 | 8 | 3 | 6 | 9 |
| 9 | 4 | 6 | 1 | 3 | 2 | 8 | 5 | 7 |
| 8 | 5 | 3 | 7 | 9 | 4 | 1 | 2 | 6 |
| 1 | 2 | 7 | 6 | 8 | 5 | 4 | 9 | 3 |
| 6 | 1 | 4 | 2 | 5 | 3 | 9 | 7 | 8 |
| 2 | 3 | 5 | 7 | 9 | 6 | 6 | 1 | 4 |
| 7 | 9 | 8 | 4 | 1 | 6 | 5 | 3 | 2 |

## மைலோ கிண்ண வலிகாமம் லீக் ஆட்டங்கள்

# சென்.பீற்றர்ஸ், நாமகள் அடுத்த சுற்றுக்குத் தகுதி





யாழ்ப்பாணம், நவ. 17
மைலோ கிண்ணத்திற்காக வலிகாமம் லீக் காலிறுதியாட்டம் ஒன்றும் அரையிறுதியாட்டங்களும் நேற்று ஞாயிற்றுக்கிழமை மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடந்தன.

முதலாவது அரையிறுதியாட்டம் நவாலி சென். பீற்றர்ஸ் மற்றும் அராலி ஜேம்ஸ் அணிகள் இடையே இடம்பெற்றது. இரு அணிகளுமே பலமானவை. 5ஆவது நிமிடத்திலேயே முதல் கோல் விழுந்தது. சென். பீற்றர்ஸ் பகீதரன் அதனை அடித்தார். ஆட்டம் பலமான பலப்பரீட்சையாக அமைந்த போதும் இடைவேளை வரை அந்த ஒரு கோல் மட்டுமே அடிக்கப்பட்டது. 49 ஆவது நிமிடத்தில் சென்.பீற்றர்ஸ் மீண்டும் ஒரு கோல் அடித்தது. தண்டனை உதை மூலம் அது கிடைத்தது. தண்டனை உதையை நீகன் கோலாக்கினார். முடிவில் சென். பிற்றர்ஸ் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இரண்டவது அரையிறுதியாட்டம் தெல்லிப்பழை நாமகள் மற்றும் மாதகல் சென். லூட்ஸ் அணிகள் இடையே இடம்பெற்றது. 18 ஆவது நிமிடத்தில் தெல்லிப்பழை நாமகள் கோலடித்தது. கலிஸ்ரன் அடித்த அந்த கோலைத் தொடர்ந்து 26ஆவது நிமிடத்தில் யஸ்மிலன் தனது அணிக்கான இரண்டாவது கோலை அடித்தார். சென். லூட்ஸ் வீரர்களும் பலமான போட்டியை வழங்கியபோதும் 38ஆவது நிமிடம் வரை கோல் அடிக்க முடியவில்லை. அணியின் ஒரேயொரு கோலை 39ஆவது நிமிடத்தில் கீயூட் அடித்தார். நாமகள் 2:1 என்ற கோல் கணக்கில் வென்றது.

அரையிறுதிகளில் வென்ற நவாலி சென். பீற்றர்ஸ் மற்றும் தெல்லிப்பளை நாமகள் அணிகள் மைலோ கிண்ண லீக் சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளன.

முன்னதாக, காலிறுதியாட்டத்தில் றெட்றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் வெற்றிபெறும் அணி அரையிறுதியாட்டத்திற்குத் தகுதிபெறும் என்ற நிலையில் ஆட்டம் ஆரம்பமானது. ஆட்டம் தொடக்கம் முதலே விறுவிறுப்பாக இருந்தது.

நாமகள் வீரர் யஸ்மிலன் 6ஆவது நிமிடத்தில் கோலடித்து ஆட்டத்தை விறுவிறுப்பாக்கினார். அதே அணியின் ஜெகதீஸ் 10 ஆவது நிமிடத்தில் கோலடித்தார். அணியின் மற்றொரு வீரரான கினிஸ்ரன் 15 ஆவது நிமிடத்தில் கோலடித்தார். ஆட்டம் ஆரம்பித்த 15 ஆவது நிமிடங்களிலேயே 3 கோல்கள் அடுத் தடுத்து நாமகளால் அடிக்கப்பட்டது. ஆட்டம் முழுவதும் கோல் மழை பொழியப் போகிறதோ என்ற அச்சத்தை ஏற்படுத்தியது. ஆனால் நல்ல வேளையாக சுதாகரித்துக் கொண்ட றெட்றேஞ்சர்ஸ் நாமகளின் ஆட்டத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தது. ஆனால் எவ்வளவு முயன்றும் இடைவேளை வரை அந்த அணியால் பதில் கோல் எதனையும் அடிக்க முடியவில்லை.

இடைவேளையின் பின்னர் ஆட்டம் ஆரம்பமாகியது. 26ஆவது நிமிடத்தில் றெட்றேஞ்சர்ஸ் வீரன் ஜீவராஜ் தனது அணிக்கான முதல் கோலை அடித்தார். பதிலுக்கு யஸ்மிலன் 38ஆவது நிமிடத்தில் தனது இரண்டாவது கோலினை அடித்தார். அணி 4 கோலினைப் பெற்றது. முடிவில் 4:1 என்ற கோல் கணக்கில் நாமகள் வென்றது. (உ-23)

## வடமராட்சி லீக் ஆட்டங்கள் நாளை

மைலோ கிண்ண வடமராட்சி லீக் முதல் சுற்று ஆட்டங்கள் நாளை செவ்வாய்க்கிழமை இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன. 18 கழகங்கள் போட்டியில் மோதவுள்ளன என ஏற்பட்டளார்கள் தெரிவித்துள்ளனர். (உ-23)

## வலிகாமம் லீக் ஆட்டங்கள் இன்று



யாழ்ப்பாணம், நவ. 17
வலிகாமம் உதைபந்தாட்ட லீக் தனது 'ஏ' பிரிவு அணிகள் இடையே நடத்தும் ஆளுநர் கிண்ணத்திற்கான உதைபந்தாட்ட போட்டி இன்று திங்கள்கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின்றது. பி.ப 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து திருமகள் மோதும். மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் ஆதவன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பிறைற் ஸ்ரார் மோதும். (உ-23)

# வீறுகொண்டது நவஜீவன்ஸ் பணிந்தது கொலின்ஸ்

## திக்கம் கிண்ணம் இறுதியாட்டம் நேற்று

உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியின் வீரர் கௌதமனின் அபார கோலினால் திக்கம் இளைஞர் அணியின் கிண்ணம் நவஜீவன்ஸ் வசம் சாய்ந்தது.

திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம் நடத்திய அணிக்கு 11 பேர் கொண்ட உதைபந்தாட்ட தொடரின் இறுதியாட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை கழக மைதானத்தில் நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் கொலின்ஸ் அணியை எதிர்த்து நவஜீவன்ஸ் அணி மோதியது. இரு அணிகளும் மிகவும் விறுவிறுப்புடன் மோதின. இருந்தபோதும் ஆட்டம் தொடங்கி 10 ஆவது நிமிடத்தில் மழை பெய்ய ஆரம்பித்தது. எனினும் இரு அணி வீரர்களும் சளைக்காமல் விளையாட்டை தொடர்ந்தனர். 11ஆவது நிமிடத்தில் கொலின்ஸ் அணி வீரர் விஸ்ணு அடித்த பந்து கோல்காப்பாளரை ஏமாற்றி கோலாகியது. இடை வேளையின் முன்னர் மழையில் இரு அணிகளும் பலமாக மோதிக் கொண்டபோதும் காலநிலையின் குழப்பத்தால் தமது முழுத் திறமையையும் காட்ட முடியாமல் திணறின.

இடைவேளையின் பின்னர் மழையும் நிற்க இரு அணிகளும் புதிய வியூகங்களுடன் களமிறங்கின. இடைவேளையின் பின்னரான நவஜீவன்ஸ் அணியின் ஆட்டம் அனல் பறந்தது. இது கொலின்ஸ் வீரர்களுக்கு சவாலாகவே அமைந்தது. கொலின்ஸ் அணி வீரர்கள் முன்னேற்றத்தை குறைத்து தடுப்பாட்டத்தில் ஈடுபட்டனர். நவஜீவன்ஸ் அணி வீரர்களால் அந்தத் தடுப்பாட்டத்தை உடைத்து முன்னேற முடியவில்லை.

இடையில் நவஜீவன்ஸ் அணியின் வீரர்கள் பொப், சங்கர் தமக்குக் கிடைத்த அரிய வாய்ப்புக்களை கோலாக்கத் தவறினர். கொலின்ஸ் அணி வீரர் விஸ்ணு முறையற்ற ஆட்டத்தை வெளிப்படுத்த அவருக்கு நடுவரால் மஞ்சள் அட்டை காட்டப்பட்டது. இதே போல் அவ்வணி வீரர் தர்சனும் தனக்கு கிடைத்த வாய்ப்பை நழுவவிட்டார்.



கோலடிப்போம் என்ற உறுதியுடன் நவஜீவன்ஸ் அணியும் மோதியது. இதன் விளைவாக ஆட்டம் முடிவடைவதற்கு ஒரு நிமிடம் இருக்கும்போது நவஜீவன்ஸ் அணி வீரர் கௌதமன் அபார கோலைப் போட ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

சமநிலை தகர்ப்பு உதைகளில் நவஜீவன்ஸ் அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தை சுவீகரித்தது. 2ஆம் இடத்தை கொலின்ஸ் அணியும், 3ஆம் இடத்தை யங்கம்பன்ஸ் அணியும் பெற்றன.

இதில் வளர்ந்து வரும் அணியாக அண்ணாசிலையடி அணியும், மக்கள் மனம் கவர் வீரராக சென்சேவியர் அணியைச் சேர்ந்த கனியூட், வளர்ந்து வரும் வீரராக அண்ணாசிலையடி அணியைச் சேர்ந்த சிந்துஜன், சிறந்த கோல் காப்பாளராக நவஜீவன்ஸ் அணியைச் சேர்ந்த நிருசாந், அதிக கோல் போட்ட வீரராக நவஜீவன்ஸ் உஷானந், தொடர் ஆட்ட நாயகனாக நவஜீவன்ஸ் அணியைச் சேர்ந்த கௌதமனும் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களுக்கான வெற்றிக் கிண்ணங்களை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் வழங்கி வைத்தார். (422)





# சிம்பாப்வேக்கு வெள்ளையடித்தது பங்களாதேஷ்

பங்களாதேஷ் சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் பங்களாதேஷ் அணி 186 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. அத்துடன் தொடரையும் 3-0 என முழுமையாகக் கைப்பற்றியது.


நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. அதன்படி பங்களாதேஷ் அணி தனது முதல் இன்னிங்ஸில் சகல இலக்குகளையும் இழந்து 503 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக கயிஸ் 130 ஓட்டங்களைப் பெற்றார். சிம்பாப்வே சார்பாக பந்து வீச்சில் றசா 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு தமது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த சிம்பாப்வே அணி சகல இலக்குகளையும் இழந்து 374 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. அதிகபட்சமாக சிக்கும்புறா 88 ஓட்டங்களைப் பெற்றார். பங்களாதேஷ் சார்பாக பந்து வீச்சில் கொசைன் 5 இலக்குகளைக் கைப்பற்றினார். 129 ஓட்டங்கள் முன்னிலையுடன் தமது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த பங்களாதேஷ் அணி 5 இலக்குகள் இழப்புக்கு 319 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது ஆட்டத்தை இடைநிறுத்தியது. அதிகபட்சமாக கக்கியூ இறுதிவரை ஆட்டமிழக்காது 131 ஓட்டங்களைப் பெற்றார். ஸிம்பாப்வே சார்பாக பந்து வீச்சில் பன்யங்கரா 2 இலக்குகளைக் கைப்பற்றினார்.

449 ஓட்டங்கள் வெற்றியிலக்காக நிர்ணயிக்கப்பட தமது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த ஸிம்பாப்வே அணி நேற்று ஐந்தாம் நாளில் சகல இலக்குகளையும் இழந்து 262 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. அதிகபட்சமாக சக்கபவ இறுதிவரை ஆட்டமிழக்காது 89 ஓட்டங்களைப் பெற்றார். பங்களாதேஷ் சார்பாகப் பந்து வீச்சில் கொசைன் 2 இலக்குகளைக் கைப்பற்றினார்.

மூன்றாவது டெஸ்ட்டின் ஆட்டநாயகனாக கக்கியுவும் தொடரின் ஆட்டநாயகனாக சகிப் அல் கசைனும் தெரிவாகினர். (ற-ரி)







# பழி தீர்த்தது தென்னாபிரிக்கா

ஆஸ்திரேலியா மற்றும் தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான ஒரு நாள் தொடரின் இரண்டாவது ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணி வெற்றி பெற்றது.

இரண்டாவது ஆட்டம் ஆஸ்திரேலியாவின் பேர்த் மைதானத்தில் நேற்று நடைபெற்றது. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்கள் உட்பட எவருமே நிலைக்கத் தவறினர். வோர்ணர் 0, பின்ச் 8, வற்சன் 11, சிமித் 10, மக்ஸ்வெல் 0 என சொற்ப ஓட்டங்களுடன் வெளியேற ஆஸ்திரேலியாஅணி 41.4 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 154 ஓட்டங்களை மட்டுமே பெற் றது. அதிகபட்சமாக மார்ஷ் 67 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் தென்னாபிரிக்கா சார்பாக மோர்கல் 5 இலக்குகளையும் ஸ்ரீன் 3 இலக்குகளையும் பிலண்டர் மற்றும் பெகர்டீன் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். 155 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா அணிக்கு அதன் முன்வரிசை வீரர்களான கொக் 4, அம்லா 10, பிளாசிஸ் 19, பிகார்டின் 0 என சொற்ப ஓட்டங்களுடன் வெளியேறி ஏமாற்றம் கொடுத்தாலும் மத்திய வரிசை வீரர்களின் நிதான ஆட்டத்தால் 27.4 பந்துப் பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 157 ஓட்டத்தைப் பெற்று வெற்றியீட்டியது.

பந்து வீச்சில் ஆஸ்திரேலியா சார்பாக கசீல்வூட் 5 இலக்குகளையும், ஜோன்சன் மக்ஸ்வெல் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். ஆட்ட நாயகனாக மோர்கல் தெரிவானார்.

5 போட்டிகளைக் கொண்ட தொடரில் இரு அணிகளும் தலா ஒரு ஆட்டத்தை வெற்றி கொண்டு சமநிலையில் உள்ளன. (ற-ரி)



## முதலிடத்தில் ஜோகோவிச்



2014ஆம் ஆண்டுக்கான ஏடிபி ரென்னிஸ் தொடர் முடிவில், ஒற்றையர் பிரிவு தரவரிசையில் முதலிடத்தை உறுதி செய்த செர்பிய வீரர் நோவாக் ஜோகோவிச்சுக்கு ஏடிபி கோப்பை வழங்கப்பட்டது. அவர் 3ஆவது முறையாக ஆண்டு இறுதி முதலிட அந்தஸ்தை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. முன்னதாக 2011 மற்றும் 2012ஆம் ஆண்டுகளில் அவர் இந்தச் சாதனையை நிகழ்த்தியிருந்தார். தொடர் முடிவில் முதலிடத்தை பிடிக்கும் சாதனையை 3 அல்லது அதற்கு மேற்பட்ட முறை நிகழ்த்திய 7ஆவது வீரர் என்ற பெருமையும் அவருக்குக் கிடைத்துள்ளது.

பீட் சாம்பிராஸ் 6, ஜிம்மி கானார்ஸ், ரோஜர் பெடரர் தலா 5, இவான் லெண்டில், ஜோன் மெக்கன்ரோ தலா 4, ரபேல் நடால் 3 முறை இந்தச் சாதனையை நிகழ்த்தியுள்ளனர். லண்டனில் நடந்து வரும் ஏ.டி.பி. உலக சுற்றுலா இறுதியாட்டத் தொடரில் ஜோகோவிச் ஹட்ரிக் வெற்றியுடன் அரை இறுதிக்கு முன்னேறியுள்ளார். (ற)

# சிலிர்த்த சிங்கத்தை அடக்கியது இந்தியா

## ஐந்தாவது ஆட்டமும் இந்திய அணி வசமானது





சர்வதேச ஒரு நாள் போட்டியின் நடப்புச் சம்பியனான இந்திய அணியும் சர்வதேச 'ரி/20' நடப்புச் சம்பியனான இலங்கை அணியும் மோதிக் கொண்ட, சம்பியன்களுக்கிடையிலான தொடர் என்று வர்ணிக்கப்படும் இந்திய மற்றும் இலங்கை அணிகளுக்கிடையிலான தொடரில் அனைத்து போட்டிகளிலும் இலங்கை அணியை மண் கௌவ வைத்து, தொடரை வழித்துத் துடைத்துள்ளது இந்திய அணி.

முதல் நான்கு ஆட்டங்களிலும்படுமோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தி தோல்வியைச் சந்தித்திருந்த இலங்கை அணி, நேற்று றாஞ்சியில் நடைபெற்ற இறுதி ஒரு நாள் ஆட்டத்தில் வெற்றிக்காக கடுமையாக போரிட்டும் நூலிழையில் அதை பறிகொடுத்தது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இலங்கை அணியின் முன்னணி வீரர்களான டிக்வெல்ல 4, சந்திமால் 5 என சொற்ப ஓட்டங்களுடன் வெளியேறி ஏமாற்றமளித்தனர். ஆயினும் மத்தியூஸ் மற்றும் திரிமன்னேயின் சிறப்பான இணைப்பாட்டம் இலங்கை அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தியது. இலங்கை 50 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 286 ஓட்டங்களைக் குவித்தது. அதிரடியாக ஆடி இறுதிவரை களத்தில் நின்ற மத்தியூஸ் 10 ஆறுகள் 6 நான்குகள் உட்பட 139(116) ஓட்டங்களை குவித்தார்.

பந்து வீச்சில் இந்திய அணியின் சார்பாக குல்கர்ணி 3 இலக்குகளையும், அஸ்வின் மற்றும் அக்சர் பட்டேல் தலா 2 இலக்குகளையும், பின்னி ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

287 ஓட்டங்கள் என்னும் கடினமான இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய இந்திய அணி ஆரம்பத்தில் தடுமாற்றத்தை வெளிப்படுத்தியது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான ரகானே 2, றோஹித் சர்மா 9 என சொற்ப ஓட்டங்களுடன் நடையைக் கட்ட, இந்திய அணி 14 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளை இழந்து விழி பிதுங்கியது. ஆனாலும்பின்னர் இணைந்த ஹோக்லி மற்றும் றாயிடு இலங்கை அணியின் மகிழ்ச்சிக்கு உலைவைத்தனர். அவர்களைப் பிரிக்க முடியாது இலங்கைப் பந்துவீச்சாளர்கள் திக்கித் திணற, இந்திய அணியின் ஓட்ட எண்ணிக்கை கிடுகிடுவென உயரத் தொடங்கியது.. இருவரும் இணைப்பாட்டமாக 136 பகிர்ந்தனர்.

இறுதி வரை ஆட்டமிழக்காது இருந்த ஹோக்லி 126 பந்துகளில் 136 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். இலங்கை அணியின் போராட்டங்கள் எல்லாம் சிதறடிக்கப்பட, இந்திய அணி 48.4 பந்துப் பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 288 ஓட்டங்களைப் பெற்று திரில் வெற்றி பெற்றது. இலங்கை அணியின் ஆறுதல் வெற்றிக் கனவும் தகர்ந்து போனது.

பந்து வீச்சில் இலங்கை அணி சார்பாக மென்டிஸ் 4 இலக்குகளையும், மத்தியூஸ் 2 இலக்குகளையும் கைப்பற்றினர். தொடரை 5:0 என்று வழித்துத் துடைத்தது இந்தியா.

ஆட்ட நாயகனாக மத்தியூஸ் தெரிவானார். தொடரின் ஆட்ட நாயகனாக ஹோக்லி தெரிவானார். (ற-ரி)

> “ முதல் நான்கு ஆட்டங்களிலும் தோல்வியைத் தழுவி நெந்து போயிருந்த இலங்கை அணி, நேற்றைய ஆட்டத்திலாவது ஆறுதல் வெற்றியைப் பெற்றுக் கொள்ளுமா என்று இரசிகர்கள் ஆவலுடன் காத்திருந்தனர். ஆயினும் அவர்களின் ஆசையில் மண்ணைப் போட்டது இலங்கை அணி.


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



திதி: தசமி

மலர்வு 10.03.1937

உதிர்வு 25.11.2012

அமரர்

### பொன்னையா சண்முகரத்தினம்

ஆண்டு இரண்டு ஆனாலும்
ஆறவில்லை எம்துயரம்
மீண்டும் ஒரு பிறப்புண்டேல்
எம்மிடத்து வந்துடுவீர்
இன்றேல்
காண்டற்கரிய கடவுள் திருவடிக்கீழ்
நீண்டு நிலையான சாந்தி அடைந்திடுவீர்.

டச்சுறோட்,
சோலை அம்மன் கோவிலடி
சாவகச்சேரி வடக்கு.

(54339)

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 18.10.2014 சனிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர்

### மயில்வாகனம் கனகரட்ணம்

மண்ணில் 30.04.1932

விண்ணில் 18.10.2014

அவர்களின் வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் 17.11.2014 திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை யிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

67/41, சீனிவாசகம் வீதி,
தர்மலிங்கம் அவனியூ,
யாழ்ப்பாணம்.

காந்தரூபன். மகன்

## மரண அறிவித்தல்



### நாகலிங்கம் குணரத்தினம்

(பெரியவிளான் - இளவாலை)

பெரியவிளானைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கனடாவில் சில காலம் வசித்தவருமான நாகலிங்கம் குணரத்தினம் (15.11.2014) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் செல்லம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - தங்கமுத்து தம்பதியினரின் மருமகனும், மனோரஞ்சிதத்தின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற ராசதுரை, மனோன்மணி, துரைராசா, ருக்குமணி (UK), பூமணி (கனடா), இரத்தினசபாபதி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் மாலதி (UK), மாதினி (கனடா), மாதவி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரவிராஜ் (UK), இரத்தினராஜா (கனடா), மாயகேசரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும், சாயினி (UK), சாயி கௌரி (UK), சஞ்ஜேய் (கனடா), காயத்திரி (கனடா), பிரியங்கா (கனடா), ரூபிணி (கனடா), கார்த்தீபன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும், மகேஸ்வரி, காலஞ்சென்ற சபாரட்ணம், Dr. தர்மராசசிங்கம் (Mcleod Hospital Inuvil), யோகரட்ணம் (Germany), இராசரத்தினம், காலஞ்சென்ற தளையசிங்கம், சிவராசரட்ணம், பராசக்தி (கனடா), ஈஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.11.2014) திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரிகைகளுக்காக பெரிய விளான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்: மனைவி, பிள்ளைகள்,
மைத்துனர் சிவம், பெறாமகன் M.சாந்தகுமார்

## இயந்திர இயக்குநர் பகுதி நேரம்

திருநெல்வேலி நொதன் சென்றல் வைத்தியசாலையில் இயந்திர இயக்குநருக்கான பதவிக்கு விண்ணப்பங்கள் ஆண் பாலாரிடம் மட்டும் கோரப்படுகின்றது. கடமை நேரம் சுழற்சி முறையில் மாலை 6.00 மணி தொடக்கம் இரவு 12.00 மணிவரையும் அடுத்து இரவு 12.00 மணி தொடக்கம் காலை 6.00 மணிவரையாகும். தகுதியுடையோர் தங்கள் விண்ணப்பங்களை நேரடியாக கொடுக்க முடியும். விண்ணப்பங்கள் 22.11.2014 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

தலைவர்.

## மரண அறிவித்தல்



யாழ். நெடுந்தீவு 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் மு/உடையார்கட்டு வடக்கை வதிவிடமாகவும் கொண்ட ஜேம்ஸ் றெயீனம்மா அவர்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை (16.11.2014) அன்று காலமானார்.

அன்னார் அருளப்பு ஜேம்ஸ்சின் மனைவியும் இந்திராணி, புஸ்பறஞ்சினி, ஜீவறோயினி (ஆசிரியை), ஜீவசாந்தினி (லண்டன்) ஆகியோரின் தாயாரும் அமலராஜன், ஜெஸ்ரின் றொபேட், அல்பிறட்(லண்டன்) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று இன்று (17.11.2014) மாலை 3.00 மணிக்கு மு.உடையார்கட்டு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(மு.உடையார்கட்டு)

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### மாணிக்கம் யோகேஸ்வவரன் (பெரியதம்பி)



கும்பப்பிள்ளை கோப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் யோகேஸ வரன் நேற்று (16.11.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம்- இரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற விநாசித்தம்பி மற்றும் கமலாதேவி தம்பதியரின் அன்பு மருமகனும், விமலாசனியின் அன்புக் கணவரும், அபிராமன் (கிறிஸ்தவ கல்லூரி), பவித்திரன், சிவராம் (நாவலர் தமிழ் வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.11.2014) திங்கட் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் 11 மணியளவில் தகனக்கிரியைக்காக இருபாலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குப்பப்பிள்ளை, கோப்பாய் தெற்கு.
0778575198

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### இளையவர் மாணிக்கம்

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், உடுவில் செப்பாலை மாதா கோவில் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட இளையவர் மாணிக்கம் (ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை) (15.11.2014) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையவர் - சீதேவி தம்பதியரின் புதல்வனும், சின்னத்தம்பி- சின்னப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், அமரர் பூரணம் (ஓய்வுபெற்ற மருத்துவ மாதர்) அவர்களின் பாசமிகு கணவரும், சரஸ்வதி, ஆறுமுகம், காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, மார்க்கண்டு, சின்னப்பிள்ளை, இராசதுரை, காந்தி, பாலு ஆகியோரின் சகோதரரும், சிறீஸ்கந்தராசா (சாரதி), வேல்வராணி (மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், வலி தெற்கு), லுகிர்தராணி (ஆசிரியை, யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி), தயாராணி (ஆசிரியை, கிளி/ விவேகானந்த வித்தியாலயம்), திருஸ்கந்தராஜா (மேற்பார்வையாளர், மாருதி றெடிமிக்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், மனோரஞ்சினி, நல்லகுமார்(அதிபர், யா/ஏழாலை புனித இசிதோர் றோ.க.த.க. பாடசாலை), ஜெனீஸ்வரன் (உரிமையாளர், ஜெயராணி எலக்றிக்கல்), ஆனந்தராசா (சாரதி), விமலாவதி ஆகியோரின் அன்பு மாமனாரும், கஜந்திகா, அர்க்கவின், மனோஜின், கஜனி, தனுசிகா, வினுசிகா, ஜஸ்மிகா, டிசாந், பங்கயன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.11.2014) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

# மட்டு. வைத்தியசாலை அபிவிருத்தி; பல்வேறு மட்டத்தில் குழு தெரிவு

மட்டக்களப்பு, நவ.17
அமைச்சர்கள், மற்றும் பிரதி அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களின் பரிந்துரையின் பேரில் சுகாதார அமைச்சினால் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் புதிய மூன்று ஆண்டுகளுக்கான அபிவிருத்தி குழு உறுப்பினர்களாக பிரதேச செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர்கள், வர்த்தகர்கள், முன்னாள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், அமைச்சர்களின் பிரத்தியேகச் செயலாளர்கள் என சுமார் 85 க்கும் மேற்பட்டோர் நியமிக்கப்பட்டிருந்தனர்.

அவர்களுக்கான முதலாவது கூட்டமும் புதிய நிருவாகத் தெரிவும் கடந்த சனிக்கிழமை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் கேட்போர் கூடத்தில் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் எம்.எப்.இப்றாலெவ்வை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை தற்போது எதிர் நோக்கியுள்ள இடப்பற்றாக்குறை மற்றும் அடிப்படைத் தேவைகள் எதிர்காலத்தில் பூர்த்தியாக்கப்படவுள்ள கட்டடங்கள் புதிதாக எதிர்காலத்தில் அமைக்கப்பட வேண்டிய கட்டடங்கள் பற்றிய விபரங்களை புதிய அபிவிருத்திக்குழு உறுப்பினர்களுக்கு தெரியப்படுத்தியதுடன் மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையை சிறப்பாக இயக்குவதற்கு அனைவரினதும் ஒத்துழைப்பையும் வழங்குமாறு கேட்டுக் கொண்டார்.

அதனைத் தொடர்ந்து புதிய நிருவாகத் தெரிவு இடம்பெற்றது புதிய அபிவிருத்திக் குழுவின் தலைவராக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர் ராஜன் மயில்வாகனமும், உபதலைவராக முன்னாள் மட்டக்களப்பு மாநகர சபையின் உறுப்பினர் என்.கே.றம்ழானும் செயலாளராக வைத்தியசாலையின் செயலாளர் ரீ.குகராஜாவும் தெரிவு செய்யப்பட்டதுடன் பதினைந்து பேர் கொண்ட செயற்பாட்டுக் குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர்களான வைத்தியர் திருமதி எல்.எம்.நவரட்ணராஜா, வைத்தியர் திருமதி கே.கணேசலிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.(ஓ-10)


## 10 ஆவது பிறந்த நாள் வாழ்த்து



திரு திருமதி இரகுலேசன்
நளாயினி தம்பதியரின் புதல்வி
**நர்த்தனா**
இன்று (17.11.2014)
திங்கட்கிழமை தனது 10 ஆவது பிறந்த நாளை சிவகுருநாதர் வீதியிலுள்ள தனது இல்லத்தில் கொண்டாடுகிறார். இவர் ஆரம்பக் கல்வியை எவர்சைன் முன்பள்ளியிலும் தரம் 5 வரை யாழ். இந்து ஆரம்ப பாடசாலையிலும் கற்று 2014 புலமைப்பரிசில் பரீட்சையில் 164 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார்.
இவரை பல்கலையும் கற்று மேலும் கல்வியில் சிறப்புற கடவுள் அருள் வேண்டி
வாழ்த்துவோர்:
அம்மா, அப்பா, தாத்தா, அம்மம்மா, அப்பப்பா, சாவகச்சேரி பூட்டி, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமிமார், மச்சாள்மார், அண்ணாமார், அக்காமார், தம்பிமார்,
அத்துடன் இவருக்கு கல்வியூட்டிய அதிபர், ஆசிரியர்களுக்கும் எமது நன்றிகள்.
18 ஏ, சிவகுருநாதர் வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.
(54337)(4.3.6.)
இ.பரமானந்தன்


## மீண்டுமொரு போரை உருவாக்க முயலும் சர்வதேச சக்திகளுக்கு இடமளிக்கக் கூடாது

காத்தான்குடி, நவ.17
அரசை தோற்கடிப்பதன் மூலம் நாட்டில் மீண்டுமொரு போரை உருவாக்க சில சர்வதேச சக்திகள் முயற்சிக்கின்றன. இதற்கு ஒரு போதும்இடமளிக்கக்கூடாது என பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர், எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;
30 வருட உள்நாட்டுப் போரில் இருந்து நாட்டை மீட்டெடுத்த ஜனாதிபதி அபிவிருத்திக்கு பெரும் தொகை நிதியை செலவிட்டு நாட்டை கட்டியெழுப்பப் பாடுபட்டார். எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் வளமான மக்களை உருவாக்கும் பாரிய வேலைத் திட்டமொன்றினை எமது அமைச்சு முன்னெடுக்கவுள்ளது.
ஆசியாவிலேயே பொருளாதாரத்தில் வளர்ச்சியடைந்த நாடாக எமது நாட்டைக் கட்டியெழுப்ப உறுதியான தலைமைத்துவமும் உறுதியான அரசும் தேவை எனத் தெரிவித்தார். (10)

## நெஞ்சக் கதவை கொஞ்சம்........

### எடுபடும் வெள்ளையடிப்புகள்

அரசினர் ஆயுள்வேத வைத்தியசாலை முறிவு நெரிவுப் பிரிவுக்கு முழங்கால் மூட்டு பாதிப்புக்குள்ளாகி சிகிச்சை பெற வந்த ஒருவருக்கு கபில நிறமான கழி மருந்தை பழைய துணியில் பூசி நோவுள்ள இடத்தைச் சுற்றி பற்றுப் போட்ட வைத்தியர் "ஐயா, எத்தனை தரம் சொல்லியாச்சு பழைய துணி கொண்டு வாங்கோ என்று. அடுத்த முறை கட்டாயம் கொண்டு வர வேணும்" என்கிறார். தலையை யாட்டிவிட்டு வெளியே வந்தவரோ, "பழைய பருத்தித்துணி இப்ப எங்கை இருக்கு. எங்கட சனங்கள் அதுகளைக் கைவிட்டு வருசாதி காலமாச்சு. இனி அதுக்கும் வெளிநாட்டுக்குத்தான் போக வேணும் போலை" என்றவர்று வெளியே வருகிறார். இவர் சலித்துக் கொள்வது போல் இங்கு பருத்தியாடைகளின் பாவனை வெகுவாகக் குறைந்து விட்டது.

எமது சூழலுக்கு பருத்தியாடைகளே உகந்தவை எனத் தெரிந்தும் துவைப்பது, உலர்த்துவது, செம்மையாக்குவது வரையான நேர விரயம் கருதியே இந்த மாற்றத்துக்கு நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறோம். சில நோய்களுக்கு, அதுவும் தோல் நோய்களுக்கு சிந்தெட்டிக் ஆடைகளும் காரணம் எனப்படுகிறது. வீடுகளில் பருத்திச் சேலைகளை உடுப்போரும், நிகழ்வுகளுக்கு வேட்டி உடுப்போரும் குறைந்து வருகின்றனர். கைத்தறி நெசவு நிலையங்களிலும் வீடுகளிலும் பகுதிநேர, முழுநேர குடிசைக் கைத்தொழிலாக நெசவு எத்தனையோ குடும்பங்களின் பசிக்குப் பாதை காட்டியது. அப்போதெல்லாம் பழைய சேலைகள், வேட்டிகளை வெளுத்து, மடித்து அடிப்பெட்டியில் வைத்திருப்பார்கள் இது மாதிரித் தேவைகளுக்கு உதவுமென.

சப்த தீவுகள் ஒன்றின் பெயர் கொண்ட நிறுவனம் உற்பத்தி செய்த பருத்தி பெனியன் இலங்கை முழுவதும் பேர் பெற்றிருந்தது. அது கூட இப்போ இறக்குமதி தான். இறக்குமதி உற்பத்திகளின் மோகம் உள்ளூர் கைத்தொழில்களை ஓரம் கட்டிவிட்டுள்ளது. தும்புத்தடி, கால்மிதி, ஊதுபத்தி, அப்பளம், கொப்பிகள், அழைப்பிதழ்கள் என்று இன்னும் அடுக்கலாம். முன்பெல்லாம் நெடுந்தீவு போன்ற இடங்களிலிருந்து பசுவின் சாணத்தை எரியூட்டிப் பெறப்பட்ட திருநீறு, யாழ். சத்திரம் சந்தியில் மூடைகளாக வந்திறங்கும். தருவித்தவர்களது கைவண்ணத்தில் வாசனையூட்டப்பட்டு அழகிய பைகளில் "பழநி விபூதி" என்று விற்பனையானது. இன்று இதுவும் கூட இறக்குமதிதான். சும்மா சொல்லக்கூடாது. எவ்வாறு பெறப்படுகிறதோ தெரியாது. வெள்ளையிலும் வெள்ளைதான். எமது சமூகம் கூட இப்போது வெள்ளையடிப்புகளுக்குத்தானே எடுபடுகிறது.

செல்வவேலாயுதம்


## 10 ஆம் ஆண்டு நீங்கா நினைவலைகள்

அமரர்
**V.N. செல்வராசா**
(நாடகஜோதி, கலாபூஷணம்)



தாயின் மடியில்
29 . 09 . 1934
அம்பாள் அடியில்
07 . 11 . 2004
திதி: 17.11.2014

ஈன்ற தாய் தந்தையரின் இதயமதை குளிர்வித்த தனையன் நீங்கள்
ஈழத்து தலைசிறந்த கலைஞன் நீ என கலைத்தாய் வாழ்த்திய கலைஞன் நீங்கள்
பாசமலரை தோற்கடிக்கும் பாசமிகு சகோதரன் நீங்கள்
பார்த்தவர் போற்ற பண்ணோடு இசைபோன்று இல்லறம் கண்ட இமயம் நீங்கள்
பித்துப்பிடித்தவரோ என எண்ணவைக்கும் பிள்ளைப்பாசம் மிக்கவர் நீங்கள்
பிறமனைகளில் இருந்து வந்த பிள்ளைச்செல்வங்கள் என எண்ணும் மாமனார் நீங்கள்
உற்றார், உறவினரை, உளம் மகிழ்ந்து உவகையுடன் உண்ணவைக்கும் உத்தமர் நீங்கள்
கலைஞானம் மிக்க கற்றவர் வாழ்த்தும் போது கண்டு களிப்படைந்தோம்
கர்வம் கொண்டோம்
ஈரைந்து ஆண்டுகள் நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்தாலும் ஈரவிழிகள் காயவில்லை எமக்கு
முத்தமிழ் வாழும் வரை உங்கள் புகழும் வாழும்.

சீரணி அம்மன் கோயிலடி,
சண்டிலிப்பாய்.
(48608) (4.6.3)
என்றும் உங்கள் நினைவுகளுடன்
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


## இலவச கொரிய ஆயுள்வேத வைத்திய முகாம்

மட்டக்களப்பு, நவ.17
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் 69வது பிறந்த தினத்தை முன்னிட்டு உற்பத்தி திறன் ஊக்குவிப்பு அமைச்சர் பசீர் சேகுதாவூத் ஏற்பாடு செய்துள்ள இலவச கொரிய ஆயுள்வேத வைத்திய முகாம் நாளை முதல் 20 ஆம் திகதி வரை 3 தினங்கள் மட்டக்களப்பு புதுக்குடியிருப்பு சித்த வைத்திய ஆயுள்வேத மாவட்ட வைத்திய சாலை மற்றும் ஏறாவூர் ஆயுள் வேத வைத்திய சாலை ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளது.
மேற்படி இலவச ஆயுள்வேத வைத்திய முகாமில் நாள்பட்ட குறுகிய கால நோய்களுக்குசிகிச்சை வழங்கப்படும் என உற்பத்திதிறன் ஊக்குவிப்பு அமைச்சின் மக்கள் தொடர்பாடல் அதிகாரி யூ.எல்.எம். என்.முபீன் தெரிவித்துள்ளார்.
கொரிய சர்வதேச கூட்டுத்தாபன ஒன்றியம், கிழக்கு மாகாண ஆயுர்வேத திணைக்களம் ஆகியவற்றின் பங்களிப்புடன் நடைபெறவுள்ள இந்த வைத்திய முகாமின் பிரதான வைபவம் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 8 மணிக்கு மட்டக்களப்பு புதுக்குடியிருப்பு சித்த வைத்திய ஆயுள்வேத மாவட்ட வைத்தியசாலையில் இடம்பெறவுள்ளது.
இதில் உற்பத்தி திறன் ஊக்குவிப்பு அமைச்சர் பசீர் சேகுதாவூத், மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி பீ.எஸ்.எம்.சார்ள்ஸ் உட்பட அதிகாரிகள் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ-10)


## கண்ணீர் காணிக்கை



எமது பாடசாலையின் சிரேஷ்ட ஆசிரியரும்
உயர்தரப்பிரிவு பகுதித்தலைவருமான
தேவகாந்தி அவர்களின் அன்புக் கணவர்
**பேரம்பலம் ஞானசூரியன்**
(ஓய்வுபெற்ற உள்ளூராட்சி மன்ற எழுதுவினைஞர்)
அவர்களின் மறைவினால் கல்லூரிச் சமூகம் துயருறுகின்றது. அன்னாருக்கு எமது கண்ணீரை சமர்ப்பிக்கின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவிக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
கே.கே.எஸ்.றோட்,
யாழ்ப்பாணம்.
(54332)(4.3.6)
ஆசிரியர்கள்,
யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்.

## மரண அறிவித்தல்

### திருமதி பத்மினி விக்கினேஸ்வரவேல்



அரியாலையைப் பிறப்பிடமாகவும், டென்மார்க்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பத்மினி விக்கினேஸ்வரவேல் 09.11.2014 ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசிங்கம்-பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், செல்லத்துரை விக்கினேஸ்வரவேலின் அன்பு மனைவியும், சங்கீதா, நிஷானி, சாந்தி ஆகியோரின் பாசமிகு தாயாரும், இந்திராணி காலஞ்சென்ற ஸ்ரீகாந்தா மற்றும் தேவிகா, மகேந்திரன், ரவீந்திரன், நிர்மலா (நிம்மி), வசந்தகுமாரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.
அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (18.11.2014) செவ்வாய்க்கிழமை டென்மார்க்கில் நடைபெறும்.
125/4, ஆனந்தன் வடலி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.
(54333)(4.3.6)
தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



## திருமதி
## பத்மாசினி அம்மா
## சிவபாதசுந்தரம்

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும், 118/4 பிறவுண் வீதியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பத்மாசினி அம்மா சிவபாத சுந்தரம் நேற்று (16/11/2014) ஞாயிற்றுக் கிழமை இறை பதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீர சிங்கம் (புவனேஸ்வரி மருந்துக்கடை) - பாக்கி யலட் சுமி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற சிவபாதசுந்தரம் (ஓய்வுபெற்ற அதிகாரமளிக்கப் பட்ட உத்தியோகத்தர் - யாழ் மாநகரசபை) அவர்க்ளின் பாச மிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான கோணேசபிள்ளை (பிரபல வர்த்தகர் - அக்குரஸ்ஸ) - ஆச்சிமுத்து தம்பதிகளின் பாசமிகு மருமகளும் யோகநாதன் (கனடா), அமரர் உலகநாதன் (கனடா), இராஜேஸ்வரி (ஜேர்மனி), பரமநாதன் (கனடா), தரும்நாதன் (ஜேர்மனி), கேதாரநாதன் (பிரான்ஸ்), தேவமலர் (கனடா), புவனேஸ்வரி (பிரான்ஸ்), பரமகுருநாதன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், அமரர் சோமாவதி இராசலிங்கம் (ஓய்வு பெற்ற ஆசிரியர் - லண்டன்), வேதவதி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், கமலாதேவி, விமலா தேவி, சச்சிதானந்தம், ஞானாம்பிகை, உஷாராணி, தவமலர், சிவதாஸ், இரா ஜேந்திரன், சகிலா, கந்தையா, பரமேஸ்வரி, இராஜேஸ்வரன் ஆகியோரின் பாச மிகு மைத்துனியும் வைத்திய கலாநிதி அச்சுதன் ( மயக்க மருந்து நிபுணர்- ஆஸ் திரேலியா), கனகதாரணி (ஆசிரியை - நல்லாயன் கன்னியர் மடம் - கொழும்பு - 13), எந்திரி விகிர்தன் (நீர்ப்பாசனப் பொறியியலாளர் - கிளிநொச்சி) ஆகி யோரின் பாசமிகு தாயாரும், வைத்திய கலாநிதி சுபத்திரா (ஆஸ்திரேலியா), ஞானவேல் (விரிவுரையாளர் - தேசிய கல்வியற் கல்லூரி - கோப்பாய்) சைலஜா (அபிவிருத்தி உத்தியோகத்தர் - கிராம அபிவிருத்தித் திணைக்களம் - கச்சேரி, கிளிநொச்சி), ஆகியோரின் பாசமிகு மாமியாரும், அச்சயன், சாம்பவி, மேத்ரா, அவிக்னா, சதுசிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப் படும்.

இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**118/4, பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(543386)

நாய்க்குட்டிகள் விற்பனைக்கு
நல்லின 2 மாதம் நிரம்பிய அல்சேஷன். கொக்கஸ்பனியல். பொமேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.
917. நட்டாதெருச் சந்தி. யாழ்ப்பாணம்.
0777070711. 0759910060

உதயன்
advt@uthayan.com
0215671111

# மரண அறிவித்தல்



## வேலாயுதர்
## நாகமுத்து

**(நடராசா - ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியர்)**

கைதடி நுணாவிலைப் பிறப்பிடமாகவும், புதிய செம்மணி வீதி கல்வியங் காட்டை வசிப்பிடமாக்வும் கொண்ட வேலாயுதர் நாக முத்து (14.11.2014), வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதர் தங்கமுத்து தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் திலகவதி தம்பதி களின் மருமகனும், சறோஜினி தேவியின் அன்புக் கணவரும் காலஞ் சென்றவர் களான செல்லையா, காமாட்சி, சதாசிவம், நாகம்மா ஆகியோ ரின் சகோ தரனும் Dr. சிவகுமார் (Canada), சிவச்செல்வி (France), சிவநந்தினி (Germany), சிவநங்கை (Canada), சிவமதி (ஆசிரியர் - யா/ கோப்பாய் ம.வி.), சிவச்செல்வன் (Canada), சிவ கௌரி, சிவகரன் (Engineer - CEB, சுன்னாகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சசிதேவா (Canada), ரவீந்திரன் (France), ஜேசுதாசன் (Germany), சுதர்சன் (Canada), மோகனதாஸ் (Agency Supervisor. Ceylinco Life Jaf), திவிஷா (Canada), Dr. விக்னரூபன் (Senior Lecturer Physics. Jaffna University) ஆகியோரின் மாமனாரும், அக்ஷன், திபிக்கா, சஜன், அபினாஸ், அபிசியா, சாகித்தியா, ஆரபி, விதுரன், கரிஷன், மைதிலி, கபிலன், ஹர்ஷினி, அஜேஷ், றோஜன், பிரணவன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.11.2014) செவ்வாய்க் கிழமை மு.ப. 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூத வுடல் தகனக்கிரிகைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற் றுக்கொள்ளவும்.

புதிய செம்மணி வீதி,
நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(சி/17732)

# எவறெடி கல்வி நிலையம் விசுவமடு - முல்லைத்தீவு
# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2014

மேற்படி எமது கல்வி நிலையத்தில் 2014 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலைமைப்பரிசில் பரீட்சையில் 100 மாணவர்கள் தோற்றி 62 மாண வர்கள் சித்தியடைந்துள்ளனர். ஏனைய மாணவர்கள் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர். அம் மாணவர்களின் விவரங்கள் வருமாறு

| முல்லை மாவட்டம் | புள்ளி | |
|---|---|---|
| கெ.ஆதித்தியா | 193 | மாவட்டநிலை- 1<br>தேசிய நிலை- 4<br>மாகாண நிலை- 2 |
| | | மாவட்ட நிலை |
| யோ.சங்கீத் | 188 | 04 |
| கோ.சரண்யா | 187 | 06 |
| ம.அபிதரன் | 186 | 07 |
| க.கௌதமன் | 184 | 08 |
| ச.சங்கீர்த்தன் | 183 | 09 |
| இ.கீர்த்திகன் | 183 | 09 |
| க.சரணிகன் | 181 | 13 |
| க.புகழேந்திரன் | 180 | 16 |
| ஈ.அபிவர்ணன் | 180 | 16 |
| கு. துசானா | 178 | 22 |
| சி.திலக்சிகா | 175 | 34 |
| ச.சாஜித்தியன் | 175 | 34 |
| ச.மலர்விழி | 173 | 43 |
| செ.திலக்சி | 173 | 43 |
| ச.சுபாகரன் | 172 | 48 |
| ப.தனோஜன் | 172 | 48 |
| செ.கயல்விழி | 171 | 53 |
| ஜெ.அபிசன் | 171 | 53 |
| கோ.பிரணவன் | 171 | 53 |
| ல.பிரசாந் | 171 | 53 |
| ச.ஜெகஜீவன் | 171 | 53 |
| ஜீ.கபின்ஷன் | 170 | 66 |
| மு.நிருசன் | 169 | 71 |
| வி.கெஸ்லி | 168 | 82 |
| வி.சயிதா | 167 | 87 |
| த.விபுசாயினி | 167 | 87 |
| ம.தமிழ்மாறன் | 167 | 87 |
| உ.பகலோன் | 165 | 105 |
| வி.புங்கவி | 164 | 113 |
| ரா.லோஜிகா | 164 | 113 |
| சு.தம்ஜா | 157 | 170 |
| பி.வினிதன் | 165 | 105 |
| மோ.அபிநயன | 162 | 125 |
| ப.சதுரங்கா | 161 | 132 |




| வவுனியா மாவட்டம் | | |
|---|---|---|
| மோ.கிருஷிகா | 186 | 11 |
| **கிளிநொச்சி மாவட்டம்** | | |
| சி.கயல்விழி | 183 | 01 |
| ஜீ.விதுர்சன் | 183 | 01 |
| சு.அச்சுதன் | 172 | 33 |
| ரா.அனுஜன் | 176 | 15 |
| ம.டினேஸ் | 165 | 79 |
| த.சதுர்ஜன் | 163 | 101 |
| வி.விதுசன் | 167 | 63 |
| மோ.நிகிதா | 166 | 71 |
| து.நேருஜன் | 155 | 188 |
| த.சாருஜன் | 170 | 49 |
| த.சரண்யா | 170 | 49 |
| மு.ரதீசனா | 163 | 101 |
| சே.சஜன்சன் | 166 | 71 |
| உ.கோபிசன் | 173 | 22 |
| ஞா.டிலக்சன் | 171 | 39 |
| ட.அன்பு | 166 | 71 |
| உ.சஉமிதன் | 152 | 185 |
| ர.பிரணவன் | 163 | 101 |
| பா.தனுசிகன் | 163 | 101 |
| ஜெ.கிந்துஷா | 156 | 156 |
| ச.லக்சனா | 159 | 142 |
| ச.கயல்விழி | 155 | 180 |
| சூ.சனோஷா | 153 | 184 |
| த.கோயிகா | 155 | 180 |
| சூ.இசைநிலா | 173 | 43 |
| ர.மோசயன் | 163 | 58 |

## தொடர்ச்சிகள்

### ஊழல்

எதாவது. "கடந்த முறை போன்று இந்த முறையும் பொது வேட்பாளர் ஒருவரை முன்னிறுத்தினால் மட்டுமே இந்த ஊழல் ஆட்சியாளர்களை விரட்டியடிக்க முடியும். அதற்கான முயற்சியில் எனது கட்சி முன்னிற்கும்"- என்று தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகாவுடன் அவரது மனைவி அனோமா, நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த கெடகொட, மாகாண சபை உறுப்பினர் சுசில் கிந் தெல்பிடிய ஆகியோரும் சென்றிருந்தனர். (ற)

### நேபாளம்

பங்களாதேஷ், பூட்டான், நேபாளம், பாகிஸ்தான் மற்றும் மாலைதீவு தலைவர்களு டன் இணைந்து ஜனாதிபதி இந்த உச்சி மாநாட்டில் கலந்து கொள்கிறார்.

இந்திய பிரதமர் நரேந்திர மோடி தரை வழியாக நேபாளம் செல்ல உள்ளார் என்று இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன. சார்க் மாநாட்டின் நடுவே மோடி, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும் சந்தித்து பேசவுள்ளார். இருவரும் சட்டவிரோத மீன்பிடி சம்பந்தமாக பேசலாம் என கூறப்படுகிறது.

சார்க் மாநாட்டில் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப், ஆப்கான் ஜனாதிபதி அஷ்ரப் காஹானி, பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா, பூட்டான் பிரதமர் டிசெரிங் தொப்காய், மாலைதீவு ஜனாதிபதி அப்துல்லா யாமீன் ஆகியோரும் கலந்து கொள்கின்றனர். (ற)

### நிறைவேற்று

யல் ஸ்திரமின்மையை ஏற்படுத்துவதற்காகவே சர்வதேசத்தின் அனுசரணையுடன் நிறைவேற்று ஜனாதிபதி முறைமைக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கோஷம் எழுப்புகின்றன.

அதேவேளை, சர்வதேச அளவில் விடுதலைப் புலிகள் இயக்கம் வலுவடைந்து வருவதுடன், இதனுடன் தமிழ் தேசிய கூட்டமைப்பு நெருங்கிய தொடர்பு வைத்து வருகின்றது.

அண்மையில் மலேசியாவில் இடம்பெற்ற புலிகள் இயக்கத்தின் மாநாடொன்றிலும் இவர்கள் கலந்து கொண்டுள்ளனர். இந்நிலையில் அரசுக்கு நாட்டின் பாதுகாப்புக் கருதி நிறைவேற்று அதிகார முறையை ஒழிக்க முடியாதுள்ளது.

ஐ.தே.கவுக்கு நிறைவேற்று முறையை ஒழிக்க வேண்டும் என்று எந்தவித நோக்கமும் கிடையாது. ராஜபக்ஷ அரசை வீழ்த்த முடியாத விரக்தியினாலேயே நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதாக கூறி பொய்ப் பிரச்சாரங்களைச் செய்து வருகின்றது. ஒரு நாட்டின் ஸ்திரத் தன்மையை இல்லாது செய்ய நாட்டின் தலைவரின் அதிகாரத்தை முடக்கவே சர்வதேசம் முயல்கின்றது .இதற்கு ஒரு போதும் நாங்கள் இடம் கொடுக்க மாட்டோம்.

ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு 3 தடவையாகவும் போட்டியிட முடியும் என்று உச்ச நீதிமன்றம் வழங்கிய சட்ட விளக்கத்துக்கு அமைய ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷ என்பது உறுதியாகியுள்ளது.

அது மட்டுமல்லாது தேர்தலுக்கான அனைத்து முன் ஆயத்தங்களையும் நாங்கள் செய்துள்ளோம். இதற்காக எல்லா பிரதேசங்களையும் உள்ளடக்கியவாறு 2912 கட்சி அரசியல் வாதிகளுக்கு இது தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, எதிர்கட்சிகளுக்கு இன்னும் ஜனாதிபதி பொது வேட்பாளரை தெரிவு செய்து கொள்ள முடியாத குழப்பத்தில் உள்ளன. ஒரு வேட்பாளரை தெரிவு செய்து கொள்ள முடியாத எதிர்க்கட்சி எவ்வாறு ஒரு நாட்டை நிலையான விதத்தில் ஆட்சி செய்ய முடியும் - என்றார்.

### ஜனாதிபதியை

சர் நிமாலை கேட்டுக்கொண்ட ஜனாதிபதி தேர்தல்கள் முடிவடைந்த பின்னர் இந்த விடயம் குறித்து தான் கவனம் செலுத்துவதாகவும், அதனால் தற்போதைக்கு இது தொடர்பான பரப்புரைகள் முன்னெடுக்கவேண்டாம் எனவும் சோபித தேரரை கேட்டுக் கொண்டார்.

ஜனாதிபதியினுடனான இந்த சந்திப்பின்பின்னர் சோபித தேரர் வேறு எந்த நடவடிக்கைகளிலும்பங்குகொள்ளவில்லை. இதன்பின்னர் அவர் வெள்ளிக்கிழமை மாலபேயில் உள்ள மருத்துவமனையொன்றில் சேர்க்கப்பட்டார். அவருக்கு இதயநோய்க்கான பரிசோதனைகள் இடம்பெற்றுள்ளன.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர்கள் மத்தியில் பொதுவான கருத்து காணப்படாதது குறித்தும், ஜாதிக ஹெல உறுமய உறுதியான நிலைப்பாட்டை எடுக்காதது குறித்தும் சோபித தேரர் கவலை கொண்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-சி)

### பொய்

ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசுடன் இணையப் போகின்றனர் என்று பொய்ப் பரப்புரைகள் முன்னெடுக்கப்படுகின்றன. நாட்டு மக்கள் ஆட்சி மாற்றத்தை விரும்புகின்ற தொரு நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து எவரும் ஆளுந்தரப்புடன் இணையப் போவதில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்பட்டமைக்கு, ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் மீது குற்றஞ் சாட்டப்படுகின்றது. ஐரோப்பாவில் விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குமாறு கோரி புலம்பெயர்ந்தோர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தனர். அந்த வழக்கு நான்கு வருடங்கள் நீடித்த போதிலும் அரசு அதுகுறித்து எதுவிதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. இதனை மறைத்து, தமிழீழ விடு தலை புலிகள் மீதான நீக்கத்துக்கு ஐக்கிய தேசியக் கட்சியின்மீது குற்றம்சாட்டுவதில் பயனில்லை.

இன்னும் சில தினங்களில் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான அறிவிப்பு வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஐக்கிய தேசிய கட்சி எந்தத் தேர்தல்களுக்கும் தயாராகவுள்ளது"- என்று தெரிவித்துள்ளார்.(ற)

### வறண்ட

அச்சப்படத்தேவையில்லை என்று அதிகாரிகள் உறுதி கூறுகின்றனர்.

2012ஆம் ஆண்டு தீவகம் மற்றும் தென்மராட்சி உட்பட்ட வரண்ட பிரதேசங்களில் பொசிவு நீர்ப்பாசன முறைமை அறிமுகம் செய்யப்பட்டு பரிசோதனை செய்யப்பட்டது. மரக்கன்றுகளை நட்டு, அவற்றின் வேர்த்தொகுதிக்கு நெருக்கமாக இரு பக்கங்களிலும் மட்பானையின் கழுத்துப்பகுதி வெளியில் தெரியக்கூடியதாக நிலத்தில் புதைத்து இந்தப் பொசிவு பாசன முறை மேற்கொள்ளப்படுகிறது. தாவரத்துக்கு தேவையான நீர் மட்பானைக்குள் மட்டும் ஊற்றப்படும். பின்னர் அது மூடி வைக்கப்படும். உரம் தேவைப்படின் பானைக்குள் உள்ள நீருடன் கலந்துவிடலாம். இதன் மூலம் பானையில் இருந்து கசிந்து வரும் நீரை பெற்று தாவரம் விரைவாக வளர்ச்சி பெறும்.

இந்த முறையின் கீழ் 2012 ஆம் ஆண்டு பரிசோத னைக்காக நடப்பட்ட மரங்கள் தற்போது நன்கு வளர்ந்து காய்க்கும் பருவத்தை அடைந் துள்ளன என்று அதிகாரிகள் கூறுகின்றனர். "இந்த நீர்ப்பா சன முறையில் தாவர உற்பத்தியை வரண்ட பிரதேசங்களில் மேலும் ஊக்குவிப்பதற்கான செயன்முறை, விளக்கங்கள் விரிவுபடுத்தப்பட் டுள்ளன. விவசாயப் போதனா சிரியர்களின் ஆலோசனைக ளைப் பெற்று வரண்ட பிரதே சங்களிலும் மரநடுகைகளை மேற்கொள்ள முடியும். நீர்ப் பற்றாக்குறையைக் காரணமாகக் காட்டி எவரும் மரநடுகைகளை தவிர்க்க வேண்டாம்" எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (உ-14)

### வடக்கு

சேர் கடுகதி ரயில் சேவை நேற்று தாமதமானது.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு வரையான ரயில் பாதைகள் புனரமைப்பு செய்யப்பட்டு ஒரு மாதகாலமே ஆகிறது. இந்த நிலையில் புதிய ரயில் பாதையாக இருப்பதால் மாஹோ ரயில் நிலையத்தில் இருந்து யாழ்ப்பாணம் வரையான ரயில் பாதைகளில் இதுவரை ரயில்கள் எதுவும் தடம் புரண்டதில்லை. எனினும் மாஹாவில் இருந்து கோட்டை வரையான பாதைகள் நீண்ட காலமாகப் பாவனையில் இருப்பவை. இதனால் தண்டவாளங்கள் சேதமடைந்துள்ளன. இந்தப் பகுதியில் அடிக்கடி ரயில்கள் தடம்புரள்வதற்கு இதுவே காரணம் என்று ரயில்வே வட்டாரங்கள் கூறுகின்றன. யாழ்ப்பாணத்துக்கான ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் 3ஆவது தடவையாக இந்தப் பாதையில் ரயில் தடம்புரண்டுள்ளது.

(உ-14)

### பாப்பரசரின்

திடல் சுற்று வட்டம், பழைய நாடாளுமன்றம் அமைந்துள்ள பகுதிகளின் பொருத்தப்பட்டுள்ள பாதுகாப்பு கமராக்கள் நவீனமயப்படுத்தப்பட உள்ளன.

அத்துடன் கொழும்பு நக ரில் ரோந்து பணியில் ஈடுபடுத்தப்படும் பொலிஸ் கார்களில் ஜீ.பி.எஸ் கருவிகள் மற்றும் பாதுகாப்பு கமராக்கள் பொருத்தப்பட உள்ளன என்றும் டிசெம் பர் மாத முடிவுக்குள் இந்த பணிகள் நிறைவு செய்யப் படும் என பொலிஸ் திணைக் களம் அறிவித்துள்ளது.(ற)

### சர்வதேசத்தின்

ஞுவமும் செயற்படுகின் றன. சர்வதேசத்தை ஏமாற்றுவதற்கே அரச அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் இந்த விடயத்தில் அவசர அவசரமாகத் தீவிரம் காட்டுகிறார்கள்.

இவ்வாறு தெரிவித்தார் வலி. வடக்கு மீள்குடியமர்வு புனர்வாழ்வுச் சங்கத்தின் தலைவர் அ.குணபாலசிங்கம்.

சுன்னாகத்தில் அமைந்துள்ள சபாபதிப்பிள்ளை நலன்புரி நிலையம் மற்றும் கண்ணகி நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள மக்களை, அதே இடத்தில் நிரந்தரமாக குடியேற்ற முன்னெடுக்கப்படும் நடவடிக்கை தொடர்பில் விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்:

வலி. வடக்கில் இன்னமும் 24 கிராம சேவையாளர் பிரிவு விடுவிக்கப்படவில்லை. இதனால் 9 ஆயிரத்து 995 குடும்பங்கள் மீள்குடியமர்த்தப்படவில்லை. இவர்கள் யாழ்ப்பாணத்திலுள்ள 38 நலன்புரி நிலையங்களிலும், உறவினர்கள் - நண்பர்கள் வீடுகளிலும் தங்கியுள்ளனர்.

இப்படி நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களை பற்றியே உலகத் தலைவர்களும் சரி மற்றவர்களும் சரி பேசுகின்றனர். உறவினர்கள் - நண்பர்கள் - வாடகை வீடுகளில் - தங்கியுள்ளவர்கள் பற்றி யாரும் கண்டுகொள்வதில்லை. எனவேதான் நலன்புரி நிலையங்களை மூடிவிடுவதற்கு அரசு அக்கறை காட்டுகிறது. அப்படிச் செய்துவிட்டால் உலகின் கவனத்தில் இருந்து அதனை அகற்றிவிட முடியும் என்று அரசு நினைக்கிறது.

அதற்காகவே மக்களை அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்தாமல், தற்போது தங்கியுள்ள நலன்புரி நிலையக் காணியிலேயே குடியேற்ற முயற்சிக்கின்றனர். அந்தக் காணிகளை வாங்கி அதிலே மக்களைக் குடியேற்றினாலும் அவர்களது அகதி என்ற அடையாளம் போகாது. அத்துடன் அவர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு சீதனமாக எங்கே காணி கொடுக்கப் போகின்றார்கள்?

கடற்றொழிலையும், விவசாயத்தையும் பிரதானமாக கொண்ட அவர்களால், தற்போதுள்ள இடத்தில் அவற்றைச் செய்ய முடியுமா? இந்தப் புறக்காரணிகளை கருத்தில் கொள்ளாமல், வெறுமனே நலன்புரி நிலையத்தை மூடவேண்டும் என்பதற்காக எடுக்கப்படும் இந்த தொலைநோக்கற்றநடவடிக்கை அந்த மக்களுக்கு மீண்டும் மீண்டும் பாதிப்பையே ஏற்படுத்தப்போகின்றது - என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-5)

### இராணுவத்தின்

முதலில் முயற்சிகள் எடுக் கப்பட்டன. ஆனால் அதற்கு மக்கள் சம்மதிக்கவில்லை. இதை அடுத்து அவர்கள் தற்போது குடியிருக்கும் இடத்திலேயே அவர்களை நிரந்தரமாகக் குடியேற்றிவிட்டு அவர்களின் சொந்த நிலத்தை தாங்கள் கையகப்படுத்திக்கொள்வதில் இராணுவம் மும்முரமாக உள்ளது.

கடந்த சில வாரங்களாக உடுவில் பிரதேச செயலகத்தின் ஊடாக இதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. சில வாரங்களுக்கு முன்னர் சபாபதிப்பிள்ளை மற்றும் கண்ணகி நலன்புரி நிலையங்களில் வசிக்கும் மக்களிடம் படிவம் ஒன்று விநியோகிக்கப்பட்டிருந்தது. தற்போது நலன்புரி நிலையம் அமைந்துள்ள குறித்த காணி, நிரந்தரமாக வழங்கப்படும் என்றும் அதனைப் பெற்று அங்கேயே குடியமர்வதற்கு விரும்புபவர்கள் யார் என்ற விவரங்கள் அதில் கேட்கப்பட்டிருந்தன. நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள ஒரு தொகுதி மக்கள் தொடர்ந்தும் அந்த இடத்திலேயே வாழ்வதற்கு விருப்பம் தெரிவித்து அந்தப் படிவங்களைப் பூர்த்தி செய்து வழங்கியிருந்தனர்.

நலன்புரி நிலையம் அமைந்துள்ள காணிகள் தனியார் குடும்பங்கள் பலவற்றுக்கு உரியன. அவர்களில் ஒருவரான புலம்பெயர்ந்து வெளி நாட்டில் வசிக்கும் ஒருவர் தனது காணியை அரசுக்கு விற்பதற்குச் சம்மதித்துள்ளார் என்று கூறப்படுகிறது. இதன் அடிப்படையிலேயே இராணுவத்தினரின் ஆதரவுடன் காணியை அளவிடும் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. எனினும் முகாம் அமைந்துள்ள காணிகளின் ஏனைய உரிமையாளர்கள் அவற்றை விற்பதற்குச் சம்மதிக்கவில்லை என்று கூறப்படுகின்றது.

இந்த நிலையில், காணி அளவீட்டுப் பணி தனியார் நில அளவையாளர் மூலம் நேற்று மேற்கொள்ளப்பட்டது. அங்கு சென்ற வலி. வடக்குப் பிரதேச சபைத் தலைவர் சோ.சுகிர்தன் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார். முகாம் அமைந்துள்ள காணிகளில் சிலவற்றின் உரிமையாளர்கள் அதனை அரசுக்கு விற்பதற்கு விரும்பவில்லை என்றும் அது குறித்துத் தனக்குக் கடிதங்களைத் தந்துள்ளார்கள் என்றும் கூறிய அவர், எனவே காணிகளின் உரிமையாளர்களது விருப்பத்துக்கு மாறாக அளவீட்டுப் பணிகளை மேற்கொள்ள வேண்டாம் என்று எதிர்ப்புத் தெரிவித்தார்.

அளவீட்டில் ஈடுபட்ட நில அளவையாளரிடம் அவர் அளவிடுவதற்கு வந்த காணியின் வரைபடமோ, உறுதியோ எதுவும் இல்லாமல் இருந்ததையும் சுட்டிக்காட்டிய பிரதேச சபைத் தலைவர், பணிகளை உடன் நிறுத்துமாறு வலியுறுத்தினார். எனினும் இராணுவத்தினரின் துணையுடன் நில அளவையாளர் காணிகளை அளவீடு செய்தார் என்று மக்கள் தெரிவித்தனர். (உ-5)

### மஹிந்தவை

றது. இதற்காக எதையும் செய்வதற்கு அவர்கள் தயாராக இருக்கின்ற னர். நாட்டுக்கு எதிரான செயற்பாடு களையும் மு ன் னெ டு க் கி ன் ற ன ர் . தற்போது, பௌத்த வாக்குகளைபெற்றுக் கொள்வதற்காக பௌத்தகட்சிகளையும் அரவணைத்துக் கொண்டுள்ளனர். நிறைவேற்று ஜனாதிபதி முறையை நீக்குமாறு நாம் வலியுறுத்தவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியின் 20 வருடங்களாக நிறைவேறாத ஆசை உள்ளது. அந்த ஆசையை நிறைவேற்ற ரணிலுக்கும் கருவுக்கும் ஆசையாகவும் பயமாகவும் உள்ளவர்கள் போல் பொது வேட்பாளராக முயற்சிக்கின் றனர்.

ரணிலுக்கு அவர்தான் பொது வேட்பாளராக என்பது அவருக்கே தெரியாது. கருவுக்கும் தெரியாது. சோபித தேரருக்கும் தெரியாது."- என்று அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளார்.

(ற-சி)

### தேர்தல்

எரிக் சொல்ஹெய்ம் விடுதலைப் புலிகள் இயக்கத் துக்கு மறைமுகமாக நிதி வழங்கியிருந்தார் என்று இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குற்றம்சாட்டியுள்ளார். இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் நோர்வே அரசு விசாரணை நடத்த வேண்டும் என்றும் மஹிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

1999ஆம் ஆண்டிலிருந்து 2006ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில், இலங்கையில் அமைதி முயற்சிகளில் முக்கிய பங்காற்றியவர் எரிக் சொல்ஹெய்ம். நோர்வேயின் பங்களிப்புடன் இலங்கையில் ஏற்படுத்தப்பட்ட போர் நிறுத்தம் 2006ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்துடன் முறிவடைந்தது.

இலங்கையின் போர்க்கால அழிவுகள் தொடர்பில் நடத்தப்படக்கூடிய எந்தவொரு சர்வதேச விசாரணைகளுக்கும் சென்று சாட்சியம் அளிப்பதற்கு எரிக் சொல்ஹெய்ம் விருப்பம் தெரிவித்திருந்தார் என்று அவரை மேற்கோள் காட்டி அண்மையில் செய்திகள் வெளியாகியிருந்தன. (ற)

### கள்ளுத்

இந்தக் காரணங்களால்தான் தவறணையை அகற்றுமாறு பெண்கள் வலியுறுத்தி வந்தனர். தமது கோரிக்கை தொடர்பில் பிரதேச செயலாளர், மாவட்டச் செயலர் ஆகியோருக்கு மனுக் கொடுத்துள்ளனர். எனினும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

இந்த நிலையில் அந்தோனிபுரம் மற்றும் பறங்கி கிராமம் பகுதிகளைச் சேர்ந்த பெண்கள் அமைப்புகள் மற்றும் ஏனைய பெண்கள் என சுமார் 57 பேர் ஒன்றுசேர்ந்து நேற்று முற்பகல் கள்ளுத் தவறணையை அடித்து நொறுக்கினர். அங்கிருந்த கள்ளுப் போத்தல்கள் வானில் பறந்து வீழ்ந்து நொருங்கின.

தகவல் கிடைத்ததையடுத்து அங்கு சென்ற இலுப்பைக்கடவைப் பொலிஸார் 57 பெண்களையும் கைது செய்தனர். நீதிவானிடம் முன்னிலைப் படுத்தப்பட்ட அவர்கள் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

(உ-4)

### 82 கி. கேரள

விக்கின்றனர்.

யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு செல்லும்போது பண்டத்தரிப்பில் காரைச் சோதனையிட்ட பொலிஸார் கஞ்சாவை மீட்டதுடன் அதிலிருந்த இருவரையும் கைது செய்தனர். (உ-4)

### போராளியின்

தில் உள்ள அவரது வீட்டில் வைத்து முன்னாள் போராளியான கிருஷ்ணசாமி நகுலேஸ்வரன் (வயது 40) கடந்த புதன்கிழமை இரவு 8.30 அளவில் அவரது வீட்டில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார். சமூக சேவகரான அவரது கொலை தொடர்பில் அரசியல் கட்சிகள் பலவும் தொடர்ந்து கண்டனம் தெரிவித்து வருகின்றன. (உ-4)

## பணிப் புறக்கணிப்பால் ரூபா 10 கோடி நட்டம்

கொழும்பு, நவ.17
கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் முன்னெடுக்கப்பட்ட பணிப் புறக்கணிப்புக் காரணமாக 10 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது என்று விமான நிலைய உயர் மட்ட தகவல்கள் தெரிவித்துள்ளன.
அமைச்சர்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலே இந்த பணிப் புறக்கணிப்புக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. பணிப் புறக்கணிப்பால் மின் துண்டிப்பு ஏற்பட்டுள்ளது. அதனால் விமான நிலையத்தில் இருந்த இயந்திரங்கள் செயற்படாமல் போனமையே இந்த நட்டத்துக்குக் காரணம் என்று விமான நிலைய அதிகாரிகள் கூறியுள்ளனர்.
ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தொழிற்சங்கத்தை வைத்து அமைச்சர் ஒருவரின் மேற்பார்வையின் கீழ் இந்த பணிப் புறக்கணிப்பு இடம் பெற்றுள்ளது என்று அமைச்சர் ஒருவரை மேற்கோள் காட்டி சிங்கள ஊடகமொன்று தெரிவித்துள்ளது.
கடந்த 5ஆம் திகதி விமான சேவை சங்க ஊழியர்கள் சம்பளப் பிரச்சினையை அடிப்படையாக வைத்து பணிப் புறக்கணிப்பை முன்னெடுத்திருந்தனர். (ற)


## சோமவாரம்

யாழ்ப்பாணம், நவ.17
வட்டுக்கோட்டை தெக்கணப் பாய் கண்ணகி அம்மன் ஆலய சோமவார உற்சவம் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து 5 தினங்கள் நடைபெறவுள்ளது. தினமும் நடைபெறும் வசந்த மண்டப பூசையைத் தொடர்ந்து சுவாமி உள்வீதி வலம் வரும் நிகழ்வும் இடம்பெறும். (வ)

* * *

சுழிபுரம், நவ.17
காசி காண்டா புராணப் படிப்பு இன்று திங்கட்கிழமை தொடக்கம் ஒரு மாதம் பூராகவும் வழக்கம்பரை முத்துமாரி அம்மன் ஆலயத்தில் பிற்பகல் 2 மணி முதல் 4 மணி வரையும் நடைபெறவுள்ளது.
சோமவாரத் திங்கள் தோறும் சிவலிங்கப் பெருமானுக்கு வில்வ அர்ச்சனை நடைபெறும்.
காசியில் அமைந்துள்ள சிவலிங்கங்களின் வழிபாட்டை விவரமாக தெரிவதற்கு பலர் வந்து படிப்பைக் கேட்டு மகிழ்வர். (வ-28)

# சேகுவேரா கொலை செய்யப்பட்ட பின்னரான ஒளிப்படம் 47 வருடங்களின் பின் வெளியீடு





உலகம் முழுவதும் புரட்சிகர சக்திகளுக்கு உந்துதலாகத் திகழும் சேகுவேரா கொலை செய்யப்பட்ட பின்னர் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் தற்போது வெளியாகியுள்ளன.
கியூபாவில் பிடல் காஸ்ட்ரோவுடன் இணைந்து புரட்சியில் ஈடுபட்ட சேகுவேரா ஆட்சி மாற்றத்துக்கு வித்திட்டார்.
இந்தநிலையில் கடந்த 1967ஆம் ஆண்டு கியூபா ராணுவத்தால் சேகுவேரா சுட்டுக் கொல்லப்பட்டார். அதன்பின்னர் அவரது உடல் இரகசிய இடத்தில் புதைக்கப்பட்டது. அப்போது ஒளிப்பட கலைஞர் ஒருவரால் எடுக்கப்பட்ட ஒளிப்படங்கள், பொலிவியாவில் மத போதகர் லூயிஸ் கார்டேரா என்பவரிடம் இருந்தன.
2012 ஆம் ஆண்டில் அந்த மத போதகர் இறந்தபோது, அவரது உடைமைகளை உறவினர்கள் சோதனையிட்டதில், சேகுவேராவின் ஒளிப்படங்கள் இருந்தமை தெரியவந்தது.
அதையடுத்து அந்த ஒளிப்படங்களை, அவரது உறவினரும் ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்தவருமான இமானுல் ஆர்டியா என்பவர் தனது நாட்டுக்கு எடுத்து வந்தார். தற்போது அந்தப் படங்களை அவர் வெளியிட்டுள்ளார்.
அந்தப் ஒளிப்படங்களில், ஒரு படத்தில் சுட்டுக் கொல்லப்பட்ட பின்னரும், கம்பீரத்துடன் சேகுவேராவின் முகம் இருப்பது போன்றும், மற்றொரு படத்தில் சேகுவாராவின் உடல் துப்பாக்கிக் குண்டுகள் பாய்ந்திருப்பதும் இருக்கின்றன.
சேகுவாரா கொல்லப்பட்ட பின்னர் ஏ.எப்.பி செய்தி நிறுவனத்தின் ஒளிப்படக் கலைஞர் மார்க் ஹட்டனால் எடுக்கப்பட்ட ஒளிப்படமே சர்வதேச பத்திரிகைகளில் வெளியாகின. அதுதவிர, வேறு எந்தப் படமும் வெளியாகவில்லை. எனவே இந்த ஒளிப்படங்களை மதபோதகர் கார்டேராவிடம் மார்க் ஹட்டனே கொடுத்திருக்கலாம் என்று இமானுல் தெரிவித்துள்ளார். (வ)

## திருச்சி சிறப்பு முகாமிலுள்ள ஈழத்தமிழர்கள் பட்டினிப்போர்




திருச்சி முகாமில் (கிளைச் சிறையில்) அடைக்கப்பட்டுள்ள 26 ஈழத் தமிழர்கள் தங்களை விடுதலை செய்யக் கோரி உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.
தமிழகத்தின் திருச்சி மத்திய சிறைவளாகத்தில் உள்ள முகாம் சிறையில், 31 இலங்கைத் தமிழர்கள் உள்ளிட்ட வெளிநாட்டு கைதிகள் 32 பேர் உள்ளனர். ஆஸ்திரேலியாவுக்கு படகு மூலம் தப்பிச் செல்ல முயன்ற வழக்கில் கைது செய்யப்பட்ட பலர்அங்குகைதிகளாகஅடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.
அவர்களில் 26 பேர் தங்களை விடுதலை செய்யக் கோரி நேற்று முன்தினம் திடீர் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
உணவுதவிர்ப்பைக் கைவிட வலியுறுத்தி உதவி ஆட்சியர் நடராஜன், கியூ பிரிவு பொலிஸ் அதிகாரி பால்வண்ணநாதன் ஆகியோர் முகாம் சிறைக்குச் சென்று பேச்சு நடத்தினர்.
பேச்சில் உடன்பாடு ஏற்படாததால் உணவுதவிர்ப்பை தொடர்வதாக முகாம் சிறையிலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் அறிவித்துள்ளனர் என்று தி ஹிந்து செய்தி வெளியிட்டுள்ளது. (வ)

## மட்டக்களப்புக்கு வருகை தந்துள்ள வெளிநாட்டு செஞ்.சங்கத்தினர்

மட்டக்களப்பு, நவ.17
மட்டக்களப்பு மாவட்டத்தில் சுனாமி பேரழிவின்போது மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களைப் பார்வையிடுவதற்கு வெளிநாட்டு செஞ்சிலுவைக் குழு ஒன்று நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை மட்டக்களப்புக்கு பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்தது.
அந்தக் குழுவினர் மட்டு மாவட்டத்தின் தற்போதைய நிலை பற்றி இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் மட்டக்களப்பு கிளை அதிகாரிகளிடம் கேட்டு அறிந்து கொண்டனர்.
அத்துடன் காத்தான்குடி தள மருத்துவமனைக்குச் சென்று அதன் தற்போதைய நிலை பற்றி வைத்தியசாலை நிர்வாகத்தினரிடம் கேட்டறிந்து கொண்டனர்.
காத்தான்குடி தள மருத்துவமனை நோர்வே செஞ்சிலுவை சங்கத்தால் 600 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டதாகும்.
சுனாமி தாக்கத்தால் பாதிப்புற்ற மக்களுக்காக வெளிநாட்டு செஞ்சிலுவை சங்கங்கள் இணைந்து மட்டக்களப்பு மாவட்டத்தில் களுவாஞ்சிக்குடி ஆதார மருத்துவமனை, பெரியகல்லாறு மருத்துவமனை, ஒந்தாச்சிமடம் 116 வீட்டுத்திட்டம், வாகரை வீட்டுத் திட்டம், நாசிவன்தீவு வீட்டுத் திட்டம் போன்ற பல பெரிய அபிவிருத்திப் பணிகளை ஆற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.
நோர்வே, ஒஸ்றியா, ஹொங்கொங், ஐஸ்றின் ஆகிய நாடுகளைச் சேர்ந்த செஞ்சிலுவைச் சங்கங்களிலிருந்து 6 பேர் கொண்ட குழுவே வந்துள்ளது.



அவர்கள் மட்டக்களப்பில் ஒரு வாரகாலம் தங்கியிருந்து மேற்படிசெஞ்சிலுவை அமைப்புக்களால் கடந்த காலங்களில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்றங்கள் குறித்து ஆராயவுள்ளதாக இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்பு கிளை நிறைவேற்று அதிகாரி வே.பிறேமகுமார் தெரிவித்தார். (வ)

# போர்க்காலங்களிலேயே காடுகள் வேகமாக அழிப்பு

### ஏறாவூர் நகர் பிரதேச செயலாளர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, நவ.17
போர் காலங்களில் பல்வேறு காரணங்களால் காடுகள் வேகமாக அழிக்கப்பட்டதாக ஏறாவூர் நகர பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மத் ஹனிபா தெரிவித்தார்.
மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் மிச் நகர் கிராமத்தில் 'தேசத்துக்கு நிழல்' மர நடுகைத்திட்டத்தை நேற்றுமுன்தினம் சனிக்கிழமை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் தொடர்ந்துஉரையாற்றுகையில்:
"இலங்கையின் வனவளத்தை மிக விரைவாக அதிகரிக்க வேண்டும் என்பதே 'தேசத்துக்கு நிழல்' திட்டத்தின் நோக்கமாகும். இன்னும் ஐந்து வருடங்களில் வன வளம் நிறைந்ததொரு நாடாக எமது நாடு இருக்க வேண்டும் என்பதை நோக்காகக் கொண்டு இந்த தேசத்துக்கு நிழல் மரநடுகைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.
வனவளத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற அறிவு இல்லாமை, சேனைப்பயிர்ச் செய்கை போன்ற பல்வேறு காரணங்களால் காடுகள் வேகமாக அழிக்கப்பட்டன.
சமீபகாலமாக அதிக வறட்சியை எமது நாடு எதிர் கொண்டது. இதற்கு காடு அழிப்பு பிரதான காரணம். மழை வீழ்ச்சி குறைந்தால் விளைச்சல் குறைந்து வறுமை மேலோங்கும். குறிப்பாக, மட்டக்களப்பு மாவட்டத்தில் போருக்கு முன்னர் இருந்த வனவளம் இப்போது இல்லை. சோலைவனங்களாக இருந்த ஒரு சில பகுதிகள் இப்போது பாலைவனமாக மாறியிருக்கிறது.
மேலும், சூழல் சமநிலை பாதிக்கப்படுவதற்குக் காரணம் காடு அழிப்பாகும்.
பல அழிவுகளிலிருந்தும் எம்மைப் பாதுகாக்க வேண்டுமாக இருந்தால், வனவளம் பாதுகாக்கப்படவேண்டும்." (வ)

# அதிக வருமானத்தைப் பெற காளான் வளர்ப்பில் ஆர்வம்

*வீட்டுத் தோட்டச் செய்கையாளர்களுக்கு நாளை இது குறித்துப் பயிற்சி*

யாழ்ப்பாணம், நவ.17

யாழ். மாவட்டத்தில் காளான் செய்கையை ஊக்குவிக்கும் முகமாக காளான் செய்கை தொடர்பான பயிற்சி நாளை செவ்வாய்க்கிழமை யாழ். திருநெல்வேலியில் அமைந்துள்ள மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் வீட்டுத் தோட்டம் செய்வோர் தற்போது காளான் செய்கையில் ஆர்வம் காட்டி வருகின்றனர் என்று அதிகாரிகள் கூறுகின்றனர். காளான்கள் மூலம் நிறைய வருமானத்தையும் ஈட்டிக்கொள்ள முடியும் என்பதே இதற்குக் காரணம் என்றும் கூறுகின்றனர்.

"காளான் உற்பத்தி தொழில்நுட்பம் மிக இலகுவானதாக காணப்படுவதால் உற்பத்தியாளர்கள் ஆர்வம் காட்டியுள்ளனர்.

இதனை அடிப்படையாகக் கொண்டு மாவட்டத்தில் காளான் செய்கையை ஊக்குவிக்க முழுநாள் பயிற்சி நடைபெறவுள்ளது." என்று விவசாயத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பயிற்சியைப் பெற்றுக் கொள்ள விரும்புபவர்கள் யாழ். மாவட்ட விவசாய பயிற்சிநிலையத்தை தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இந்த வருட காலபோகத்தில் 40 இற்கும் மேற்பட்டவர்கள் காளான் உற்பத்தியில் ஈடுபடுவதற்கு ஆர்வம் காட்டியுள்ளதாக யாழ். மாவட்ட விவசாயத்திணைக்களம் தெரிவித்தது.

"யாழ். மாவட்டத்தில் சிற்பி காளான், பால் காளான் என 2 வகையான காளான்கள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. வீட்டுத் தோட்ட செய்கையாளர்களுக்கு இந்த உற்பத்தி பொருத்தமானதாக இருக்கும். அதிகளவு வருமானத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். அத்துடன் உணவுத் தேவைக்கும் பயன்படுத்தலாம்" என்றும் திணைக்களம் தெரிவித்தது.

தற்போது சந்தையில் காளான் ஒரு கிலோ 400 ரூபாயில் இருந்து விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அத்துடன் நுகர்வோரும் மருத்துவத் தேவைகளுக்காக காளானை சந்தைகளில் தேடித்திரிகின்றனர்.

இந்த உற்பத்தியில் இன்னும் அதிகளவானோர் ஆர்வம் காட்டினால் நுகர்வோருக்கு போதுமான காளானை உற்பத்திசெய்ய முடியும் என்று விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது. வெளிச் சந்தைகளில் இருந்து காளானைக் கொள்வனவு செய்ய வேண்டிய தேவையும் இருக்காது என்றும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

காளான் உற்பத்தியை மேற்கொள்ள ஆர்வமுடையவர்கள் விவசாயப்போதனாசிரியர் பிரிவுகளிலும் மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்திலும் தொடர்பு கொண்டு மேலதிக ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ள முடியும். எனவும் தெரிவிக்கப்பட்டுள்உளது. (உ-14)

## தேசிய தாய், சேய் நலத்தில் கோப்பாய்க்கு 2ஆம் இடம்



யாழ்ப்பாணம், நவ. 17

இலங்கையிலுள்ள 341 சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளில் தேசிய தாய், சேய் நல மேன்மை விருதுக்கான போட்டியில் கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளது.

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினர் இதனை அறிவித்துள்ளனர். இலங்கை சுகாதார அமைச்சின் குடும்ப சுகாதாரப் பணியகத்தின் ஏற்பாட்டில் சகல சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளிலும் தாய், சேய் நல மேன்மை விருதுக்கான போட்டி நடத்தப்பட்டது. பணிமனையின் ஒழுங்கமைப்பு, செயற்பாடுகள் மதிப்பிடப்பட்டன. புள்ளிகளின் அடிப்படையில் சிறந்த சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகள் தெரிவுசெய்யப்பட்டன.

போட்டியின் முதல் கட்டத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் மூன்று சிறந்த சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகள் தெரிவுசெய்யப்பட்டன. இரண்டாவது கட்டத்தில் ஒவ்வொரு மாகாண மட்டத்திலும் மூன்று சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளும் இறுதியில் தேசிய மட்டத்தில் மூன்று தலைசிறந்த சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளும் தெரிவுசெய்யப்பட்டன.

தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தினை மாத்தறை மாவட்டத்தைச் சேர்ந்த தியாகொட சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை பெற்றது. மூன்றாம் இடத்தினை குருநாகல் மாவட்டத்தைச் சேர்ந்த பொல்காவல சுகாதார் வைத்திய அதிகாரி பணிமனை பெற்றது.

இவர்களுக்கான தேசிய விருது வழங்கும் வைபவம் கடந்த வெள்ளிக்கிழமை பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. மத்திய சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன முதன்மை விருந்தினராகக் கலந்து விருதுகளை வழங்கினார்.

வடமாகாணத்தில் முதலாம் இடத்தினை கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையும், இரண்டாம் இடத்தினை பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையும் மூன்றாம் இடத்தினை சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையும் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த நானாட்டான் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையும் பெற்றிருந்தன. (உ-4)

**ஆய்வுக்கு சென்ற சமயம் கடலில் மூழ்கி இறந்த**

# ஹாட்லி மாணவர்கள் நினைவாக இன்று பல்வேறு நலத் திட்டங்கள்

*பாடசால்லயில் நடைபெறும் நிகழ்வில் இடம்பெறும்*

நெல்லியடி, நவ.17

1999 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17ஆம் திகதியன்று பருத்தித்துறை இன்பருட்டிக் கடலில் ஆய்வுக்குச் சென்ற சமயம் நீரில் மூழ்கி உயிரிழந்த பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவர்களின் நினைவு தின நிகழ்வு இன்று காலை 9 மணியளவில் கல்லூரி அதிபர் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற உள்ளது.

உயிர் நீத்த மாணவர்களுக்கான அஞ்சலி செலுத்துவதுடன் அவர்களின் பெற்றோரும் நிகழ்வில் கௌரவிக்கப்படவுள்ளனர். குருதிக் கொடையளிப்பு நிகழ்வும் இடம்பெற உள்ளது.

உயிர் நீத்த மாணவர்களின் நினைவாக அயல் பாடசாலையைச் சேர்ந்த வறுமைகோட்டுக்கு உட்பட்ட மாணவர்களுக்கான உதவிகளும் வழங்கப்பட உள்ளதாக ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர். கல்லூரியில் இருந்து பல்கலைக்கு தெரிவான மாணவர்களுக்கான புலமைப் பரிசில் வழங்கலும் இதே நிகழ்வில் இடம்பெறவுள்ளது.

உயிர் நீத்த மாணவர்களின் நினைவாக கல்லூரி மாணவர்களும் பழைய மாணவர்களும் வருடாவருடம் குருதிக் கொடை வழங்குவதை ஏற்கனவே வழக்கமாகக் கொண்டிருந்தனர். கடந்த வருடம் நடந்த இந்த நிகழ்வு யாழ். மாவட்டத்தில் ஒரே இடத்தில் அதிகமாக குருதிக் கொடை அளித்த நிகழ்வாகப் பதிவாகி இருந்தது. (உ-109)

## காளான் வளர்ப்பு நாளை பயிற்சி

யாழ்ப்பாணம், நவ.17

யாழ். மாவட்டத்தில் காளான் செய்கையை ஊக்குவிக்கும் முகமாக காளான் செய்கை தொடர்பான பயிற்சி நாளை செவ்வாய்க்கிழமை யாழ். திருநெல்வேலியில் அமைந்துள்ள மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் வீட்டுத் தோட்டம் செய்வோர் தற்போது காளான் செய்கையில் ஆர்வம் காட்டி வருகின்றனர் என்று அதிகாரிகள் கூறுகின்றனர். காளான்கள் மூலம் நிறைய வருமானத்தையும் ஈட்டிக்கொள்ள முடியும் என்பதே இதற்குக் காரணம் என்றும் கூறுகின்றனர்.

"காளான் உற்பத்தி தொழில்நுட்பம் மிக இலகுவானதாக காணப்படுவதால் உற்பத்தியாளர்கள் ஆர்வம் காட்டியுள்ளனர்.

இதனை அடிப்படையாகக் கொண்டு மாவட்டத்தில் காளான் செய்கையை ஊக்குவிக்க முழுநாள் பயிற்சி நடைபெறவுள்ளது." என்று விவசாயத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பயிற்சியைப் பெற்றுக் கொள்ள விரும்புபவர்கள் யாழ். மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தை தொடர்பு கொண்டு மேலதிக விவரங்களைப் பெற்றுக் கொள்ள முடியும். (உ-14)

# தெல்லிப்பழை மருத்துவமனையில் பொதுமக்கள் பெரும் சிரமதானம்

*நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த துப்புரவுப் பணி*

அளவெட்டி, நவ.17

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை வெளிவளாகம் பெரும் சிரமதானம் மூலம் சுத்தம் செய்யப்பட்டுள்ளது. மாரி காலம் என்பதாலும் சிறு பற்றைகள், புற்கள் வளர்ந்து காணப்பட்டதாலும் வைத்தியசாலை நிர்வாகம் இந்தச் சிரமதானத்துக்கு அழைப்பு விடுத்திருந்தது. பொது அமைப்புக்களின் உறுப்பினர்களும் வைத்தியசாலை பணியாளர்களும் இணைந்து ஞாயிற்றுக்கிழமை சிரமதானத்தில் ஈடுபட்டனர். படையினரும் இதில் இணைந்து கொண்டனர்.

**சுற்றாடலில் காணப்படும் பற்றைகள், புற்கள், நீர்தேங்கக்கூடிய இடங்களை இவ்வாறு சிரமதானம் மூலம் துப்புரவு செய்வதால் நுளம்புப் பெருக்கத்தைத் தடுக்க முடியும்.**

காலை 9 மணிக்கு வைத்தியசாலைப் பதில் வைத்திய அத்தியட்சகர் தலைமையில் பணி ஆரம்பித்து வைக்கப்பட்டது. மாவிட்டபுரம் பாதுகாப்பு பண்டப்பிரிவின் 515ஆவது பிரிவு மேஜர் அத்தாவுட தலைமையில் கெமுனு படையினர், நகர் மைய, கொக்குவில், நல்லூர், தெல்லிப்பழை, சுன்னாகம், மானிப்பாய் றொட்டறக் கழகங்களின் உறுப்பினர்கள், பிரதேச செயலக விளையாட்டு கழகங்களின் உறுப்பினர்கள், தெல்லிப்பழை வள்ளுவர் சனசமூக நிலைய உறுப்பினர்கள், பிரதேச பொதுமக்கள் என நூற்றுக்கு மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

"மாரி காலத்தில் எமது வைத்தியசாலை சுற்றாடலில் காணப்படும் பற்றைகள், புற்கள், நீர்தேங்கக்கூடிய இடங்களை இவ்வாறு சிரமதானம் மூலம் துப்புரவு செய்வதால் நுளம்புப் பெருக்கத்தைத் தடுக்க முடியும். ஏனெனில் வைத்தியசாலை வளாகத்தில் மட்டுமல்லாது அதற்கு வெளியிலும் பற்றைகளும் காடுகளுமே காணப்படுகின்றன. அவையும் துப்புரவு செய்யப்படவேண்டும்" என்றார் வைத்தியசாலைப் பதில் வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி திவாகர். (உ-36)

# கம்பளை நகரசபை தலைவர் அரசு பக்கம் கட்சி தாவினார்

*நகரை அபிவிருத்தி செய்வதற்காகவாம்*

கொழும்பு, நவ.17

ஐக்கிய தேசிய கட்சியின் கம்பளை தொகுதி அமைப்பாளரும் கம்பளை நகரசபைத் தலைவருமான சரத்காமினி ஹெட்டியாராச்சி ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் உத்தியோகபூர்வமாக இணைந்துகொண்டார்.

கண்டியிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்த அவர், தனது ஆதரவை வழங்குவதாக தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அவர்,

"கம்பளை நகரின் அபிவிருத்தியை முன்னெடுக்க ஜனாதிபதியின் கரங்களைப் பலப்படுத்த முன்வந்துள்ளேன். கம்பளை நகரசபையின் தலைவராக கடந்த 12 வருடங்களாக இருந்த போதிலும் நகரசபையின் ஆட்சி, ஐக்கிய தேசிய கட்சியின் வசம் இருப்பதால் நகர அபிவிருத்தியை முன்னெடுப்பதில் பல்வேறு சிக்கல்கள் காணப்பட்டன.

சீன அரசின் ஒத்துழைப்புடன் கம்பளை நகரை அபிவிருத்தி செய்ய முடியும் என்ற அடிப்படையில் சீனாவின் லின்சி சிட்டியின் அபிவிருத்திகளைப் பார்வையிட்டோம். சீனாவின் 'லின்சி சிட்டி' போல் கம்பளை நகரை அபிவிருத்தி செய்வதாயின் அரசின் ஒத்துழைப்பு அவசியம். அரசின் ஒத்துழைப்புடன்தான் அதனை முன்னெடுக்க முடியும். இதன் அடிப்படையில் ஆளுங் கட்சிக்கு ஒத்துழைப்பு வழங்க முன்வந்துள்ளேன்"- என்று தெரிவித்துள்ளார். (ந)

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
இம்முறை A/L எழுதிய மாணவர்கள்,தொழில் புரிவோருக்கான 3 மாத வார வார இறுதிநாள் SPOKEN ENGLISH பயிற்சிநெறி ஆரம்பம்.
ஆங்கிலத்தில் ஓரெழுத்து தெரியாதவர்களும் கூட எமது இப்பயிற்சியில் இணைந்து பயிற்சிபெற முடியும்.
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் - 22.11.2014 சனி
1.காலை - 10.00-12.00 2.மாலை - 03.00-05.00
வாரநாள் (செவ்வாய்,வியாழன்) பிரிவுகள் ஆரம்பம் - 18.11.2014
1.காலை 08.00-10.00 2.காலை 10.00-12.00
SAAMSON
Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 621 4567

உதயன்
advt@uthayan.com
0215671111

மணமகன் தேவை
1963 இல் பிறந்த சிவந்த 5' 4" உயர உத்தியோகம் பார்க்கும் கௌரவ குடும்பப் பெண்ணுக்கு தகுதியான மணமகனைப் பெற்றோர் தேடுகின்றனர். தாரமிழந்தோர், விவாகரத்தானவர்களும் ஏற்றுக்கொள்ளப்படும்.
077 4389802 (54336)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.11.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.